ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
மின்னிதழில் வாசிக்க eelanadu.ca
முகநூலில் நாளாந்தச் செய்திகள்!

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 31, 06 டிசம்பர் 2024 இதழ்:- 27

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
office@nishanthanlaw.onmicrosoft.com
Fax 1-800-878-1348
www.nishanthanlaw.com

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! டிசம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்த நாள், உங்கள் அன்புக் குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்கு வதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 23 செப்டம்பர் 2024 முதல் 14வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி. தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

## ஜனாதிபதி - தமிழரசுக்கட்சி பா.உக்கள் சந்திப்பு



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான சந்திப்பு 04 டிசம்பர் 2024 புதன்கிழமை பிற்பகல் ஜனாதி பதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதன் போது இலங்கை தமிழரசுக் கட்சி உறுப் பினர்கள் நீண்ட காலமாக வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் முகம் கொடுத்து வரும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியிடம் விளக்கமளித்தனர். சாணக்கியன் இராச மாணிக்கம், சிவஞானம் சிறீதரன், பத்மநாதன் சத்தியலிங்கம், சண்முகநாதன் குகதாசன், ஞானமுத்து ஸ்ரீநேசன், கவீந்திரன் கோடீஸ்வரன், இளயதம்பி சிறி நாத், துரைராசா ரவிகரன் ஆகியோர் இதன் போது கலந்து கொண்டனர்.

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins Manulife Foresters

## சுமந்திரன் இல்லாத பாராளுமன்றம் மாற்றமா? ஏமாற்றமா? பக்கம் 21

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

# மாகாணசபையைக் கைவிட மாட்டோம் - ஜே.வி.பி 13 தொடர்பில் டில்வின் சில்வா விளக்கம்! விபரம் உள்ளே!



மாகாண சபை முறைமையை நீக்குவதற்கு எந்த வொரு தீர்மானத்தையும் தற்போது வரை எடுக்க வில்லை என அனுர அரசு அறிவித்துள்ளது.

புதிய அரசியலமைப்பு மூன்று வருடங்களின் பின்னரே கொண்டு வரப்படும். அதிகாரப் பகிர்வு தொடர்பில் கலந்துரையாட போதுமான கால அவகாசம் உள்ளது. புதிய அரசியலமைப்பில் மாகாண சபை முறை தொடர்ந்தால் தற்போது இருக்கும் அதிகாரங்களுக்கு அப்பாலான அதிகாரப்பகிர்வு இருக்காது என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. (4ம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகள் - ஜே.வி.பி. நினைவுகூரல் ஒரே மாதிரியானவை! இரு தரப்பும் நியாயமான கோரிக்கைக்காகப் போராடினார்கள் - கஜன்



யுத்தத்தின் போது உயிரிழந்த தமிழீழ விடு தலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களையும் தங்கள் உயிர்களை இழந்த தமிழர்களையும் நினைவு கூருவதும் ஜேவிபியின் நினைவு கூரல்களும் ஒரே மாதிரியானவை. வித்தியாச ங்கள் இருக்க முடியாது(3ம் பக்கம் பார்க்க)

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)


"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-6110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

**www.AgentSiva.com**

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



21 Years Real Estate Experience

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply


HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Simcoe St N. & Conlin Rd

**Oshawa** $279,000
0 Beds • 1 Bath • 1 Rooms
Welcome To University Studios!

### Sheppard Ave & Allen Rd

**Toronto** $619,000
2+1 Beds • 2 Baths • 4+1 Rooms
Close To Subway, Ttc, York University


### Neilson/Tapscott

**Scarborough** $445,000
2 Beds • 2 Bath • 5 Rooms
Close to the Hwy 401 and the TTC

### Kennedy Rd / Hwy 401

**Scarborough** $699,000
2+1 Beds • 2 Bath • 6 Rooms
Freshly painted & renovated!


### Sheppard & Neilson

**Malvern** $699,900
3 Beds • 2 Baths • 6 Rooms
Low Maintenance Fees!

### Simcoe St N/ Brittania Ave

**Oshawa** $770,000
4 Beds • 3 Baths • 9 Rooms
Corner lot Just like Semi Townhouse

### McLevin Ave & Morningside

**Malvern** $880,000
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Finished Basement

### Townline Rd & Shankel Rd

**Oshawa** $999,900
3 Beds • 4 Baths • 8 Rooms
Close To Highway 401, 418, 407

### Sheppard Ave E / Neilson Rd

**Scarborough** $842,000
3 Beds • 3 Baths • 6+2 Rooms
FULLY RENNOVATED

### Church St N & Rossland Rd W


**Ajax** $899,999
3 Beds • 3 Baths • 6 Rooms
Hardwood flooring throughout

### Church St N & Rossland Rd W

**Ajax** $899,999
3 Beds • 3 Baths • 6 Rooms
Upgraded Hardwood Floors

### Kellough St/ Mcneil St

**Innisfil** $1,295,000
4+1 Beds • 5 Baths • 11+3 Rooms
Open concept, large eat-in kitchen

### Ninth Line/Donald Cousens

**Markham** $630,000
2 Beds • 2 Baths • 4 Rooms
Minutes to Stouffville Hospital

### Mara & King

**Beaverton** $729,800
4 Beds • 3 Baths • 9 Rooms
2300 Square Foot Home

### Finch Ave E/ Morningside Ave
FOR LEASE

**Scarborough** $2,500
3+1 Beds • 3 Bath • 10+3 Rooms
Nicely Maintained And Cleaned

### Scarborough Golf/Lawrence Ave
FOR LEASE

**Scarborough** $1,900
2 Beds • 1 Bath • 4 Rooms
Lovely Corner Bungalow

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART
4A WADE AVE
TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO**

**5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# விடுதலைப்புலிகள் - ஜே.வி.பி. நினைவுகூரல் ஒரே மாதிரியானவை! இரு தரப்பும் நியாயமான கோரிக்கைக்காகப் போராடினார்கள் - கஜன்

யுத்தத்தின் போது உயிரிழந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப் பினர்களையும் தங்கள் உயிர்களை இழந்த தமிழர்களையும் நினைவு கூருவதும் ஜேவிபியின் நினைவு கூரல்களும் ஒரே மாதிரியானவை. வித்தியாசங்கள் இருக்க முடியாது என தமிழ்தேசிய மக்கள் முன்னணி யின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

யுத்தத்தின் போது உயிரிழந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப் பினர்களையும் தங்கள் உயிர்களை இழந்த தமிழர்களையும் நினைவு கூருவதும் ஜேவிபியின் நினைவு கூரல்களும் ஒரே மாதிரியானவை. வித்தியாசங்கள் இருக்க முடியாது.

இரண்டு ஆயுதப்போராட்டங்களும் அரசாங்கத்தினால் மௌனமாக்கப் பட்டன. இரண்டு ஆயுதப்போராட்ட ங்களும் நியாயபூர்வமானவை. மக்கள்



ஏன் ஆயுதமேந்த வேண்டிய நிலை க்கு தள்ளப்பட்டார்கள் என்பதற்கான நியாயபூர்வமான காரணங்கள் உள் ளன.

அங்கிருந்தே நாங்கள் வருகின்றோம், ஆனால் இந்த நியாயபூர்வமான பிரச்சினைகளிற்கு தீர்வை காணாமல் ஒரு தரப்பை தடைகள் இன்றி செயற் படவும் நினைவுகூரல்களில் ஈடுபட வும் அனுமதிப்பதும், ஏனைய தரப் பின் மீது சில கட்டுப்பாடுகளை விதிப்பதும் நியாயமான விடயம் என நான் கருதவில்லை. நினைவேந்தல் தொடர்பான இந்த கட்டுப்பாடுகள் 2011ம் ஆண்டு சுற்றறிக்கையை அடிப்படையாக கொண்டவை.

உங்கள் அரசாங்கம் இனவாத அரசாங் கம் என குறிப்பிடும் அரசாங்கத்தின் காலத்திலேயே இந்த சுற்றிக்கை வெளியானது. அந்த அரசாங்கத்தின் காலத்தில் வெளியிடப்பட்ட நீங்கள் எப்படி நினைவுகூரல்களை முன்னெ டுக்க முடியும் என தெரிவிக்கும் சுற்று நிரூபத்தை நீங்கள் நடை முறைப்படுத்தும் போது அது முற் றாக நியாயமற்ற விடயம்.

இந்த தவறை திருத்திக் கொள்ள வேண்டும் என நான் இந்த அரசா ங்கத்தை கேட்டுக் கொள்கின்றேன். பயங்கரவாத தடைச் சட்டத்தை வடக்கில் மாத்திரமல்ல தெற்கிலும் பயன்படுத்தக் கூடாது என நான் வேண்டுகோள் விடுக்கின்றேன். பொலி ஸார் பயங்கரவாத தடைச்சட்டத்தை ஆயுதமாக பயன்படுத்துகின்றனர்.

# வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் இனமுறுக்கலை ஏற்படுத்த முயற்சி விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் தகவல்!

வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் இனமுறுகலை ஏற்படுத்துவதற்கு குறிப்பிட்ட அரசியல் குழுவொன்று முயல்வது குறித்து விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜய பால நாடாளுமன்றத்தில் தெரிவித்துள் ளார்.

இவர்கள் சமூக ஊடகங்களில் போலி யான பதிவுகளை வெளியிட்டு வரு கின்றனர் என தெரிவித்துள்ள அவர் சிலவருடங்களிற்கு முன்னர் முல்லை த்தீவில் இடம் பெற்ற மாவீரர்தின நிகழ்வுகள் குறித்த வீடியோக்களை இந்த வருடம் பதிவிட்டுள்ளனர் என தெரிவித்துள்ளார்.

வடக்கில் 244 மாவீரர் தினநிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன ஆனால் பத்தில் மாத்திரம் விடுதலைப்புலிகளின் கொடிகள் இலச்சினைகள் காட்சிப்படு த்தப்பட்டன என அமைச்சர் தெரி வித்துள்ளார்.

குடும்பத்தவர்கள் தங்கள் உறவுகளை நினைவுகூரலாம் என்பதே எங்கள் நிலைப்பாடு, ஆனால் விடுதலைப்புலி கள் இயக்கம் தடை செய்யப்பட்டுள்ள தால் அதன் கொடிகளை இலச்சி னையை காட்சிப்படுத்த முடியாது என்பதே எங்கள் நிலைப்பாடு என அவர் தெரிவித்துள்ளார்.

அனைவருக்கும் தங்கள் அன்புக் குரியவர்களை நினைவு கூருவதற்கு உரிமையுண்டு என்பதே எங்கள் நிலைப்பாடு என பொதுமக்கள் பாது காப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால நாடாளுமன்றத்தில் மேலும் தெரிவித் துள்ளார்

சமீபத்தில் மாவீரர்கள் நாள் தொடர் பில் பல கருத்துக்கள் வெளியாகி யிருந்தன. அனைவருக்கும் தங்கள் அன்புக்குரியவர்களை நினைவுகூருவ தற்கு உரிமையுண்டு என்பதே எங்கள் நிலைப்பாடு. தற்போதும் இதுவே எங்கள் நிலைப்பாடு. வடக்கி ற்கும் தெற்கிற்கும் இந்த நிலைப்பாடு பொருந்தும். எனினும் விடுதலைப் புலிகள் அமைப்பு தடைசெய்யப் பட்டுள்ளதால் நினைவுகூரலின் போது அவர்களின் கொடிகள் இலச்சினை களை பயன்படுத்த அனுமதியில்லை.

இதே வேளை சமூக ஊடகங்களை பயன்படுத்தி திட்டமிட்ட அடிப்படை யில் தெற்கில் பிரச்சாரமொன்று முன் னெடுக்கப்பட்டது, இந்த பிரச்சாரத் திற்கு அவர்கள் 2018 – 2022 இல் எடுக்கப்பட்ட வீடியோக்களை பயன்




படுத்தினார்கள். இனமுறுகலை ஏற்படுத்தும் நோக்கிலேயே இதனை செய்துள்ளனர் என்றார்.

## 13 தொடர்பில் டில்வின் சில்வா விளக்கம்

புதிய அரசியலமைப்பியில் சிறந்த தீர்வு நடைமுறைப்படுத்தப்படும் வரை 13 ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்படாது. அது தொடர்பில் சகல தரப்பினரு டனும் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்கள் நடத்தப்படும் என்றே நான் கூறினேன், மாறாக மாகாண சபை முறை எவ்வித கலந்துரையாடல்களு மின்றி ஒழிக்கப்படும் என நான் ஒரு போதும் கூறவில்லை என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஊடகமொன்றில் மாகாண சபை முறைமை தொடர்பில் ரில்வின் சில்வா கூறியதாக வெளியான செய்தி நாட்டில் பெரும் விமர்சனங் களை ஏற்படுத்தியிருந்த நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் டில்வின் சில்வா மேலும் தெரிவிக்கையில்

வடக்கு மக்களின் சிக்கல்களைத் தீர்த்துவைக்க 1987இல் கொண்டு வரப் பட்ட 13ஆவது திருத்தம் தவறியுள்ளது. அதனால் வடக்கு மக்களின் சிக்கல்களைத் தீர்த்து வைக்க மிகவும் நடைமுறைச் சாத்தியமானதும் சரியானதுமான தீர்வினை முன்வைக்க வேண்டியுள்ளது. அத்தகைய மிகச் சிறந்த தீர்வினை முன்வைத்து நடைமுறைப்படுத்தும் வரை 13 ஆவது திருத்தத்தையும் மாகாண சபைகளையும் ஒழிக்கப்போவதில்லை என்றே நான் கூறினேன்.

மேற்படி புதிய தீர்வுகள் எதிர்காலத்தில் கலந்துரையாடலுக்கு இலக்காக்கப் படுகின்ற அரசியலமைப்பில் உள்ளடக்கப்படும். அந்த தீர்வு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர்களினதும் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்படும். எனது செய்தி திரிவுபடுத்தப் பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# மாகாணசபையைக் கைவிட மாட்டோம் - ஜே.வி.பி



மாகாண சபை முறைமையை நீக்குவதற்கு எந்தவொரு தீர்மானத்தையும் தற்போது வரை எடுக்கவில்லை என அனுர அரசு அறிவித்துள்ளது.

புதிய அரசியலமைப்பு மூன்று வருடங்களின் பின்னரே கொண்டு வரப்படும். அதிகாரப் பகிர்வு தொடர்பில் கலந்துரையாட போதுமான கால அவகாசம் உள்ளது. புதிய அரசியலமைப்பில் மாகாண சபை முறை தொடர்ந்தால் தற்போது இருக்கும் அதிகாரங்களுக்கு அப்பாலான அதிகாரப்பகிர்வு இருக்காது என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மாகாண சபை முறையை நீக்கப்பட உள்ளதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா. கூறியுள்ள கருத்து பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக அந்தக் கருத்து மாறியுள்ளதால் அதுதொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் 03 டிசம்பர் 2024 செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சியிடம் விசேட கூற்றொன்றை முன் வைத்து கேள்வியெழுப்பியிருந்தார். ஜே.வி.பியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா. மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்க போவதாகப் பத்திரிகைகளுக்கு குறிப்பிட்டிருந்த விடயத்தைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகக் கருத வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயத்தில் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் என சாணக்கியன் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதற்கு பதில் அளித்த சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க இலங்கை தமிழரசு கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் ஜனாதிபதியிடம் கலந்துரையாடல் ஒன்றுக்கு கோரிக்கை விடுத்திருக்கிறார். ஜே.வியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவுடன் அன்றி ஜனாதிபதியுடன் சந்திப்புக்கு ஒழுங்குபடுத்தி தருகிறோம். அதன் போது விடயம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தலாம்.என தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ, மாகாண சபை முறையை நீக்குவது தொடர்பில் இந்தத் தருணம்வரை அரசாங்கம் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை. புதிய அரசியலமைப்பை கொண்டு வர மூன்று வருடங்கள் வரை செல்லும். புதிய அரசியலமைப்பு மக்களுடனான கலந்துரையாடலின் பின்னரே கொண்டு வரப்படும். கலந்துரையாடல்கள் நடத்த போதிய கால அவகாசம் உள்ளதெனவும் தெரிவித்துள்ளார்.

## புதிய அரசியலை அணுக அநுர அரசு தயாராக வேண்டும்

சிங்கள மக்களும் தமிழ் பேசும் மக்களும் இலங்கைத் தீவின் இணை உரிமையாளர்களும் இணைப் பங்காளர்கள் என்ற மனப்பாங்குடன் ஒரு புதிய அரசியலை அணுக அரசு தயாராக வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 03 டிசம்பர் 2024 செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் ஜனாதிபதி தனது கொள்கைப்பிரகடன உரையில் பலவிடயங்களை குறிப்பிட்டிருந்தாலும் 80 வருடங்களாக இந்த மண் ஷணில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் அவர் ஒரு வார்த்தை கூட பேசாது விட்டது துரதிஸ்டவசமானது என்றும் சுட்டிக்காட்டினார்.

இதே பாராளுமன்றத்தில் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட கோத்தபாய ராஜபக்ச தனது கொள்கைப் பிரகடன உரையிலும் அதற்கு பின்னர் அவர் இந்தியா சென்ற போது இந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலும் இந்த நாட்டில் உள்ள பிரச்சினை தொடர்பில், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் எந்தவொரு வார்த்தைகளையும் பேசாது தவிர்த்து சென்றிருந்தார். அந்த தவிர்ப்பு என்பது இந்த நாட்டில் அவரை அடையாளம் தெரியாமல் ஆக்கி வைத்துள்ளது என்ற வரலாற்றை நீங்கள் ஒரு முறை திரும்பிப் பார்க்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிங்கள மக்களின் தேசிய அடையாளங்கள். உங்களின் இன, மத கலாசார அடையாளங்களை, நில, மொழி அடையாளங்களை நாம் மதிக்கின்றோம். இது ஒரு இனத்துக்குரியது. அதேபோல் இந்த மண்ணில் 21 ஆம் நூற்றாண்டின் காலத்துக்கு நீங்கள் வருவதெனில் இப்போதுள்ள காலச்சூழலில் எவ்வாறான விடயங்களை கையாள வேண்டும்.எவ்வாறு அரசியல் மாற்றங்களை நோக்கி நகர வேண்டும் எனபதில் உங்களின் கரிசனையை, எண்ணங்களை நாம் எதிர்பார்க்கின்றோம்.



அதற்காக உங்களுடன் பேசுவதற்கும் சிங்கள மக்களின் எண்ணங்களோடு சேர்ந்து செல்வதற்கும் இந்த நாட்டில் நாங்களும் நீங்களும் தேசத்தில் ஒன்றாக இருந்தாலும் இரண்டு பட்ட தேசங்களுக்குறிய இரண்டு பட்ட இனக்குழுமங்கள் என்ற அடையாளத்தோடு வாழ்வோம்.




கனடா – அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)
Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றும் அடையலாம்



அனைத்து அம்பாள் அடியார்களிற்கும் வணக்கம்!

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு வணக்கம். கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் இலாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாக கனடா அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவரை காலமும் கோயில் நிலம் வாங்குவதற்கு நன்கொடை கொடுத்த பக்தர்கள் அனைவரும் உங்கள் பழைய பற்றுச்சீட்டை கோயிலில் கொடுத்து கனடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக்கம் பதியப் பெற்ற புதிய பற்றுச்சீட்டை கோயிலில் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச் சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு நிலம் வாங்குவதற்கும் இப்போது நடைபெறும் திருப்பணிக்காக நன்கொடை செய்வதற்கும் அல்லது எந்தவிதமான பூஜைகள் திருவிழாக்களிற்கும் கோயிலில் பணம் கொடுக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓம் தாயே மகமாரி – நிர்வாகசபை

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டதால் தேசிய பாதுகாப்புக்கு குந்தகமில்லை பாதுகாப்புச் செயலர்

வடக்கு, கிழக்கில் உயிர்த்த தமது உறவுகளை நினைவேந்தும் நிகழ்வுகளை முன்னெடுத்தமையால் தேசிய பாதுகாப்புக்கு எவ்விதமான அச்சுறுத்தல்களும் ஏற்படவில்லை என்று பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற விமானப்படையின் எயார் வைஸ் மார்ஷல் எச்.எஸ். துய்யகொந்த தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தினை முன்னிலைப் படுத்தி ஆதரிக்கும் வகையில் செயற்படுபவர்கள் இனவாத அடிப்படையில் அந்த நிகழ்வினை வெளிப்படுத்த விளைந்தவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் உரிய சட்டங்களின் அடிப்படையில் கைதுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கில் கடந்த 27ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை அடுத்து தென்னிலங்கையில் அநுர குமார அரசாங்கம் இந்த நிகழ்வுகளை முன்னெடுப்பதற்கு அளித்துள்ள சுதந்திரமான தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக உள்ளது என்று தென்னிலங்கையில் உள்ள அரசியல்வாதிகள் தீவிரமான கருத்துக்களை வெளியிட ஆரம்பித்துள்ள நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் போரின் போதும், அசாதரண சூழல்களின் போது உயிரிழந்தவர்களை நினைவு கூர முடியும். அதற்கு நாங்கள் தடைகளை ஏற்படுத்தப் போவதில்லை என்பதை முற்கூட்டியே அறிவித்திருந்தோம்.

அந்த வகையில் வடக்கு, கிழக்கு மக்கள் அமைதியான முறையில் தமது அன்புக்குரியவர்களை நினைவேந்தினார்கள். அதனால் எமக்கு ஏந்தப்பட வில்லை. ஆனால் தென்னிலங்கையில் அந்த விடயங்களை வெவ்வேறு அரசியல் சுய இலாபத்துக்காக சிலர் பயன்படுத்த முனைகின்றனர் என்பதை அதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

உண்மையில் அவர்கள் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள். தமது அரசியல் மீள்பிரவேசத்துக்காக வழக்கம் போலவே இனவாத்தினை திணிக்கப்பார்க்கின்றார்கள்.

ஆனால் அவர்களின் நோக்கங்களை மக்கள் அறிவார்கள். அநுர குமார தலைமையிலான அரசாங்கத்துக்கு வடக்கு, கிழக்கு மக்கள் வாக்களித்துள்ளார்கள். அவர்கள் மாற்றத்தினை எதிர் பார்க்கின்றார்கள். அதற்கான செயற்பாடுகளை அரசாங்கம் என்ற வகையில் முன்னெடுக்கும்.

வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் இனவாதம், மதவாதம் தோல்வி கண்டு விட்டது. மீண்டும் அதற்கு இடமளிப்பதன் ஊடாக நாட்டுக்கு எதிர்மறையான நிலைமைகளே ஏற்படும். ஆகவே மக்கள் அத்தகையவர்களுக்கு இடமளிக்காது என்ற நம்பிக்கை எனக்குள்ளது.

தற்போதைய நிலையில் தேசிய பாதுகாப்பு உயர்ந்த நிலையில் உள்ளது. அதற்கு குந்தகம் விளைவிக்கும் எந்தவிதமான நடவக்கைகளும் முன்னெடுக்கப் படவில்லை.

தென்னிலங்கையில் உள்ள கடும்போக்காளர்கள் இந்தச் சந்தர்ப்பத்தினை தமக்குச் சாதகமாக பயன் படுத்தவே போலிப்பிரசாரம் செய்கின்றார்கள். இது உண்மையில் தேசிய நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் சீர்குலைப்பதை நோக்கமாகக் கொண்டதாகும்.

அதற்கு ஒரு போதும் மக்கள் இடமளிக்கக் கூடாது. அதே போன்று வடக்கிலும் கிழக்கிலும் பயங்கரவாதத்தினை ஆதரித்து அதனை முன்னிலைப்படுத்துபவர்கள் சம்பந்தமாகவும் நாம் தீவிரமான கவனம் செலுத்தியிருந்தோம். அது தொடர்பில் தற்போது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றார்.

# பொறுப்புமிக்க சிவில் சமூக தலையீடுகள் அவசியம்

தமிழர் அரசியல் தொடர்ந்தும் பலவீனமடைந்தே செல்கின்றது. அரசியல் கட்சிகளின் தலைவர்கள் என்போரின் பொறுப்பற்ற அணுகு முறைகள் ஒரு காரணம் என்றால் பொறுப்பற்ற சிவில் சமூகமும் அணுகுமுறைகளும் பிரதான காரணங்களாகும். இன்னொரு காரணம் ஊடகங்கள். அது தொடர்பில் தனியான தலைப்பு ஒன்று தேவையென்பதால் அதனை பின்னர் நோக்குவோம்.

போருக்கு பின்னரான கடந்த பதினைந்து வருடங்களில் அரசியல் கட்சிகளுக்கு சமதையாக சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் கருத் துருவாக்கிகள் என்போரும் தமிழ்த் தேசிய அரசியல் தொடர்பில் தங்களின் கரிசனைகளை வெளிப்படுத்தி வந்திருக்கின்றனர். அரசியல் கட்சிகளின் அணுகுமுறைகள் எவ்வாறு மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமோ அதேயளவுக்கு சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சிவில் சமூகங்களின் பெயரால் ஈடுபாடு காண்பித்த தனிநபர்களின் தலையீடுகளும் அவற்றின் விளைவுகளும் மறுபரிசீலனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.

சிவில் சமூகங்கள் காத்திரமான தலையீடுகளை செய்திருக்கின்றனவா? மக்களின் நலன்களை முன்வைத்து செயல்பட்டிருக்கின்றனவா? அரசியல் கட்சிகள் பொறுப்பற்று செயல்படுகின்ற போது, அவற்றின் மீது அழுத்தங்களை பிரயோகித்து, அவற்றை சரியான திசைவழி நோக்கி வளைப்பது தான் சிவில் சமூகங்களின் பணியாக இருக்க வேண்டும். ஆனால், கடந்த பதினைந்து வருடங்களில் இடம் பெற்ற சிவில் சமூக தலையீடுகள் அவ்வாறான அணுமுறையைக் கொண்டிருந்ததா என்னும் கேள்வியுண்டு. ஏனெனில், அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளுக்கு ஏதோவொரு வகையில் முண்டு கொடுக்கும் காரியங்களிலேயே சிவில்சமூக அமைப்புக்களும், அதன் பெயரில் செயல்பட்ட தனிநபர்களும் செயல்பட்டிருக்கின்றனர்.

சிவில் சமூகங்களின் பெயரில் கடந்த பதினைந்து வருடங்களில் இடம் பெற்ற எந்தவொரு விடயமும் தமிழர் அரசியலில் காத்திரமான அதிர்வுகளை ஏற்படுத்தவில்லை. ஐ.நாவிற்கு கடிதம் எழுதுதல் தொடங்கி அரசியல் கட்சிகளை ஒன்றிணைக்கும் சிவில் முயற்சிகள் எவையுமே ஆக்கபூ ர்மான விளைவுகளை ஏற்படுத்தவில்லை. இறுதியில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை முன்னெடுத்தன் விளைவாகவும் ஆக்கபூர்வான விளைவுகள் எவையும் இடம் பெறவில்லை. தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் ஒப்பீட்டடிப்படையில் அதிகமான கட்சிகளும் சிவில் சமூகங்களும் ஆர்வமுள்ள தனிநபர்களும் ஒன்றிணைந்திருந்தனர் எனினும், சில சிவில் சமூகக் குழுக்களினதும் கருத்துருவாக்கிகள் என்போரும் சமூகப் பொறுப்பற்ற அணுகுமுறைகளால் அனைத்து முயற்சிகளும் விழலுக்கிறைத்த நீரானது.

தேசிய மக்கள் சக்தி வடக்கு, கிழக்கிலும் வெற்றிபெற்றிருப்பதைத் தொடர்ந்து தமிழர் அரசியல் புதிய நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கின்றது. இந்த நெருக்கடிகளை எதிர்கொள்ளும் நோக்கில் பொறுப்பு மிக்க சிவில் சமூகத் தலையீடுகள் அவசியம். வெறுமனே தேசியவாத சுலோகங்களை உச்சரிக்கும் வழமையான வாய்ப்பாட்டு அணுகுமுறைகளை புறம்தள்ளி, யதார்த்தமான அணுகுமுறைகளை ஊக்குவிக்கும் சிவில் சமூகத் தலையீடுகளே இன்றைய தேவை. உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தலில் தமிழ் தரப்புக்கள் வெற்றி பெறக் கூடிய யதார்த்தபூர்வமான அணுகுமுறைகளில் கட்சிகளை ஒன்றிணைப்பதற்கான சிவில் சமூக அழுத்தங்கள் அவசியம். அதேவேளை, அரசியலமைப்பில் இருக்கின்ற விடயங்களை உச்சபட்சமாகப் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறான அரசியல் உரையாடல்களும் அவசியம்.

# நினைவேந்தல் உரிமையை நிராகரித்து மீண்டும் இனவாதத்தை தூண்டாதீர்கள்- அமைச்சர் விஜயஹேரத்

போரில் உயிரிழந்த தங்கள் உறவுகளைத் தமிழ் மக்கள் நினைவேந்துவது அடிப்படை மனித உரிமையாகும். அதனை எவரும் நிராகரிக்க முடியாது. அவ்வாறு நிராகரித்து மீண்டும் இனவாதத்தைத் தூண்ட முயல வேண்டாம் என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.



'வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வு என்ற பெயரில் மரணித்த விடுதலைப்புலிகளைத் தமிழ் மக்கள் பகிரங்கமாக நினைவு கூர்ந்துள்ளார்கள். எனவே அங்கு இனிமேல் எந்தவொரு நினைவேந்தல் நிகழ்வுக்கும் அநுர அரசு அனுமதி வழங்கக்கூடாது. மாவீரர் தினத்தை நினைவேந்தியவர்களை அநுர அரசு உடன் கைது செய்ய வேண்டும்.' என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில மற்றும் சரத் வீரசேகர ஆகியோர் தெரிவித்திருந்தனர்.

அவர்களின் கருத்துக்களுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் விஜித ஹேரத் மேற்கண்டவாறு கூறினார். மேலும் கூறுகையில்,

கடந்த காலங்களில், போரில் உயிரிழந்த தமது உறவுகளை வடக்கில் உள்ள உறவுகள் நினைவேந்தும் போது அதற்கு எதிராக தெற்கில் உள்ள சிலர் இனவாதம் கக்கினார்கள்.

அதேபோல் போரில் உயிரிழந்த தமது உறவுகளை தெற்கில் உள்ள உறவுகள் நினைவேந்தும் போது அதற்கு எதிராக வடக்கில் உள்ள சிலர் இனவாதம் கக்கினார்கள். ஒவ்வொரு வருடமும் மே, நவம்பர் மாதங்களில் இத்தகைய இனவாதக் கருத்துக்கள் வெளிவந்திருந்தன. இந்த இனவாதக் கருத்துக்கள் இனியும் இருக்கக் கூடாது. நினைவேந்தல் உரிமை சகல இனத்தவர்களுக்கும் உரியது. அதில் இன வேறுபாடு இருக்கக்கூடாது.

இலங்கையில் நினைவேந்தல் நிகழ்வைப் பயங்கரவாதக் கண்ணோட்டத்துடன் எவரும் பார்க்கக்கூடாது. நாட்டில் அமுலில் உள்ள சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு அமைதியான முறையில் நினைவேந்தல் நிகழ்வுகளை எவரும் நடத்தலாம்.

அதை நாம் தடுத்து நிறுத்த முடியாது. அதேவேளை, சட்டங்களை மீறிச் செயற்படுபவர்கள் கைது செய்யப்படுவார்கள். அது பொலிஸாரின் கடமையாகும். என்றார்.

# முல்லைத்தீவில் மக்களை பதற்றமடைய வைத்த கடற்படை

முல்லைத்தீவு கடற்கரையில் நேற்று சுனாமி எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டதால் மக்கள் பதற்றமடைந்துள்ளனர். முல்லைத்தீவு கடற்கரையை அண்மித்த பகுதிகளில் சுனாமி எச்சரிக்கை இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. அந்த எச்சரிக்கை இயந்திரங்களில் இருந்தே, இவ்வாறு ஒலி எழுப்பப்பட்டுள்ளது.

இதையடுத்து சுனாமி வருகின்றதோ? என்று மக்கள் அச்சமடைந்துள்ளனர். எனினும், அது சுனாமி அலையால் விடுக்கப்பட்ட எச்சரிக்கை அல்ல என்றும், வட்டுவாகல் கடற்படைத் தளத்தில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி ஒத்திகையால் எழுப்பப்பட்ட ஒலி என்றும் மக்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. சுனாமி எச்சரிக்கைக்கு நிகரான ஒலியெழுப்பி பயிற்சியை மேற்கொள்ளும்போது அது தொடர்பில் பொது மக்களுக்கு முற்கூட்டிய அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும் என்றும், கடற்படையினர் மக்களை தேவையற்ற விதத்தில் பதற்றமடைய வைக்கக்கூடாது என்றும் பொது மக்கள் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க முல்லைத்தீவு ஒதியமலை கிராமத்தில் கடந்த 1984ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் திகதி இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 32 தமிழ் மக்களின் 40ஆம் ஆண்டு நினைவேந்தல் 02 டிசம்பர் 2024 திங்கட்கிழமை உணர்வெழுச்சியுடன் நடை பெற்றது. ஒதியமலைக் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி வளாகத்தில் நினைவேந்தல் மேற்கொள்ளப்பட்டன.

# மாகாணசபை வேறு சமஉரிமை வேறு என்பதை ஜே.வி.பி. பொதுச்செயலர் தெரிந்து கொள்ள வேண்டும் - மனோகணேசன் காட்டமான பதிலடி



மாகாண சபையை அகற்றி விட்டு அதற்கு பதில் நாடு தழுவிய சம உரிமையை தருவோம் என தேசிய மக்கள் சக்தி தலைவர்கள் கூறுகிறார்கள். சம உரிமை வருவது நல்லதே. ஆனால், சம உரிமை என்பது வேறு. அதிகார பகிர்வு என்பது வேறு என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் மேலும் கூறியதாவது

மாகாண சபை என்பதை நாம் ஏற்க மாட்டோம். ஆனால் இன்றைய மாகாண சபை முறைமை என்பது தமிழ் மக்களின் போராட்டங்களால் கிடைக்கப் பெற்றது. ஆகவே, அதை நாம் எதிர்க்கவும் போவதில்லை என ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க, கடந்த தேர்தல்களுக்கு முன் என்னிடம் நேரடியாக கூறியுள்ளார். இன்னமும் பல தமிழ் தலைவர்களிடமும் அவர் இந்த கருத்தை கூறியிருப்பதை நான் அறிவேன். மாகாண சபையை அகற்றுவது பற்றி தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் கூறப்பட்டதாக தெரியவில்லை.

ஒரு வேளை வட மாகாண மாவட்டங்களில் தமிழ் மக்களின் வாக்குகள் பெரும்பான்மையாக கிடைத்துள்ளமையால், மாகாண சபை என்பதை நாம் ஏற்க மாட்டோம் என்ற பழைய ஜேவிபியின் கொள்கை நிலைபாட்டை தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டு அதை அகற்ற ஆணை தந்துள்ளார்கள் என தேசிய மக்கள் சக்தி நினைக்கிறதோ என தெரியவில்லை.

சம உரிமை வருவது நல்லதே. ஆனால், சுலபமான காரியம் அல்ல. இன, மத, மொழி ரீதியாக சம உரிமைகள் இந்நாட்டில் உறுதிப்படுத்த இன்னமும் நெடுந்தூரம் பயணிக்க வேண்டும்.

இங்கே இன்று அரசியலமைப்பிலேயே, இந்நாட்டின் மொழிகள், மதங்கள் மத்தியில் சம உரிமை உறுதிபடுத்தப்படவில்லை. அரச மதமான பௌத்த மதத்துடன் பௌத்த தேரர்கள், இந்நாட்டின் அதிகார மையத்தில் இருக்கிறார்கள். மொழி தொடர்பில் சில பலவீனமான சட்டங்கள் ஆங்காங்கே இருந்தாலும், அவற்றை நடைமுறைப்படுத்த இந்நாட்டின் அரச அதிகார வர்க்கம் இடங் கொடுப்பதில்லை. மொழிகள் மத்தியில் சம உரிமையை அமுல்படுத்த படாத பாடு பட்ட எனக்கு இது நன்கு தெரியும். சம உரிமை என்பது வானத்தில் பறக்கும் அழகான பறவை. மாகாண சபை என்பது கையில் இருக்கும் பறவை. வானத்தில் பறக்கும் அழகான பறவையை பற்றி கனவு கண்டு கொண்டு கையில் இருக்கும் பறவையை விட்டுவிட சொல்கின்றனவா ஜேவிபியும், தேசிய மக்கள் சக்தியும் என கேட்க விரும்புகிறேன்.

நல்லாட்சியின் போது புதிய அரசியலைமைப்பு உருவாக்கும் முயற்சி நடந்தது. அதற்கான வழிகாட்டல் குழுவில் இன்றைய ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க அங்கத்துவம் பெற்று பணியாற்றினார்.

நானும் வழிகாட்டல் குழுவில் இடம் பெற்றேன். இன்னமும் பல இன, மத, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் வழிகாட்டல் குழுவில் அங்கத்துவம் வகித்தார்கள் என்றார்.

## பசியால் தவிக்கும் பாலஸ்தீன மக்களுக்கு மணல் மூட்டைகளை அனுப்பிய இஸ்ரேல்

பசியால் தவித்து வரும் பாலஸ்தீன மக்களுக்கு உணவுக்குப் பதிலாக மணல் மூட்டைகளை இஸ்ரேல் இராணுவம் அனுப்பிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இஸ்ரேலின் போர் முற்றுகையால் பாலஸ்தீனத்துக்குள் அத்தியாவசியப் பொருள்கள் நுழைவதைக் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் காஸாவில் கடந்த செப்டம்பர் மாதத்தில் மட்டும் 18 லட்சத்துக்கும் அதிகமாக மக்கள் பசியால் வாடி வருவதாக ஐ.நா கூறி இருந்தது.

இதே போல நார்வேவைச் சேர்ந்த அகதிகள் கவுன்சில், காஸாவுக்கு அனுப்பப்படும் 83 சதவீத உதவிகளைத் தடுத்து வருவதால் அவர்கள் மேலும் அதிருப்தி அடைந்துள்ளனர். இந்த நிலையில், பாலஸ்தீன மக்களுக்கு இஸ்ரேல் இராணுவத்தினர் அனுப்பிய உணவுப் பொருளில் மணல் இருந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இது தொடர்பாக வெளியான வீடியோவில் அத்தியாவசிய பொருளான சர்க்கரை பைகளில் வெறும் மணல் நிரப்பப்பட்டிருந் தது அந்த வீடியோவில் பதிவாகி உள்ளது. இச்சம்பவத்துக்கு பலரும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.



# மாகாணசபை முறைமையை முடிவுக்குக் கொண்டு வர அரசாங்கம் தீர்மானிக்கப் போகிறது?

இலங்கையில் நடைமுறையில் உள்ள அரசியலமைப்பின் 13 ஆவது திருத்த சட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள மாகாண சபை முறைமையை முடிவுக்கு கொண்டு வரவும், புதிய அரசியலமைப்பின் ஊடாக அனைத்து இன மக்களுக்கும் சமமான உரிமைகள் கிடைப்பதை உறுதி செய்யவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிட்டார்.

சுமார் 37 வருடகாலமாக நடைமுறையில் உள்ள மாகாண சபை முறைமையால் நாட்டிற்கோ அல்லது தமிழ் மக்களுக்கோ எவ்விதமான பலனும் இதுவரையில் கிடைக்கவில்லை. மாறாக இலங்கையில் அநாவசியமான பிரச்சினைகளை தோற்றவிக்கும் வகையிலான நிலைமையே காணப்படுகிறது. எனவே சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் பிரச்சினைகளை தோற்றவிக்காத வகையிலான அரசியல் ரீதியிலான தீர்வுத்திட்டத்தை எமது அரசாங்கம் முன்வைக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெளிவுப்படுத்துகையில், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படுத்துவதாக கூறிய இலங்கை இந்திய



ஒப்பந்தத்தின் ஊடாக 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டு வரப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தை ஆரம்ப காலத்தில் இருந்தே நாங்கள் எதிர்த்து வந்துள்ளோம். நாட்டு மக்களின் விருப்பத்துக்கு மாறாகவும் அமைச்சரவையில் கூட அனுமதி பெறாமலுமே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இருப்பினும் அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசியலமைப்பின் ஊடாக நாட்டில் நடைமறைப் படுத்தப்பட்டுள்ள 13ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான மாகாண சபை முறைமையால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படவில்லை. மாறாக இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையிலான சூழலே காணப்படுகிறது.

எனவே பயனற்ற மாகாண சபை முறைமைக்கு பதிலாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் நிறைவேறக் கூடியதும் அனைத்து இன மக்களுக்கும் சமமாக உரிமையை பெற்றுக் கொள்ளும் வகையிலுமான புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணியில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செயல்படுகின்றது.

இதற்காக இலங்கையில் உள்ள அனைத்து தரப்பினர்களினதும் கருத்துக்கள் கேட்டறிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் ஆட்சி அதிகாரத்துக்கு வந்து குறுகிய காலங்களே ஆகின்ற நிலையில், நாட்டின் பொருளாதார பிரச்சினைகளை தீர்ப்பதில் முன்னுரிமை அளித்து செயல்பட்டாலும், நிரந்தர தீர்வுகளுக்கான பல நடவடிக்கைளை முன்னெடுத்து வருகின்றோம்.

நடைமுறையில் உள்ள பழைமை வாய்ந்த அரசியலமைப்பிற்கு பதிலாக புதிய அரசியலமைப்பு உருவாக்குவது முக்கிய பொறுப்பாக நாங்கள் கருதுகின்றோம். புதிய அரசியலமைப்பின் ஊடாக தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வு கிடைக்கம். அப்போது 13ஆவது அரசியலமைப்பு திருத்தமோ அல்லது மாகாண சபை முறைமைக்கான தேவையோ நாட்டில் இருக்காது என்றார்.

# நினைவேந்தலுக்கு அநுர அரசு அனுமதித்திருக்கக் கூடாது தெற்கில் மக்களை அணி திரட்டிப் போராடுவாராம் விமல்!



வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வு என்ற பெயரில் மரணித்த விடுதலைப்புலிகளைத் தமிழ் மக்கள் பகிரங்கமாக நினைவு கூர்கின்றார்கள். எனவே, அங்கு இனி மேல் எந்தவொரு நினைவேந்தல் நிகழ்வுக்கும் அநுர அரசு அனுமதி வழங்கக்கூடாது. எமது இந்தக் கோரிக்கையை அநுர அரசு புறக்கணித்தால் அதற்கு எதிராகத் தெற்கில் நாம் மக்களை அணிதிரட்டிப் போராடுவோம் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில், இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தான் தமிழர்கள் செறிந்து வாழ்கின்றார்கள். அங்கு அவர்கள் கட்டுப்பாடு இல்லாமல் சட்டங்களுக்கு மதிப்பளிக்காமல் தாம் நினைத்த மாதிரி வாழ்கின்றார்கள். வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வு என்ற பெயரில் மரணித்த விடுதலைப் புலிகளை தமிழ் மக்கள் பகிரங்கமாக நினைவு கூர்கின்றார்கள். கடந்த 27 ஆம் திகதி கடும் மழை, வெள்ள அனர்த்தங்களுக்கு மத்தியிலும் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்கள் மாவீரர் நாள் நிகழ்வில் பங்கேற்றுள்ளார்கள். இது தெற்கில் வாழும் சிங்கள மக்களைக் கொதிப்படையச் செய்யும் நடவடிக்கையாகும்.

தமிழ் மக்களின் பார்வையில் மாவீரர்கள் யார்? அவர்கள், இலங்கை இராணுவத்துக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடி மரணித்த விடுதலைப்புலிகளாவர். நாட்டை அழித்த சிங்கள மக்களைக் கொடுமைப்படுத்திய அந்தப்பயங்கரவாதிகளை எப்படி நினைவேந்தலாம்?

நாட்டின் சட்டத்தின் பிரகாரம் பயங்கரவாதி களை நினைவேந்த அனுமதி இல்லை. எனவே மாவீரர் நாள் நிகழ்வுக்கு அநுர அரசு ஏன் அனுமதி வழங்கியது? தமிழ் டயஸ்போராக்களுக்குப் பயந்து அநுர அரசு செயற்படுகின்றதா?

வடக்கு, கிழக்கில் இனிமேல் எந்தவொரு நினைவேந்தல் நிகழ்வுக்கும் அநுர அரசு அனுமதி வழங்கக்கூடாது. எமது இந்தக் கோரிக்கையை அநுர அரசு புறக்கணித்தால் அதற்கு எதிராகத் தெற்கில் நாம் மக்களை அணிதிரட்டிப் போராடுவோம்.

வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு மாவீரர் நாள் நிகழ்வுக்கு அனுமதி வழங்குவது தான் நல்லிணக்கம் அல்ல என்பதை அநுர அரசு புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

இதேவேளை வடக்கு, கிழக்கில் நவம்பர் 26, 27 ஆம் திகதிகளில் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் மற்றும் அந்த அமைப்பின் உறுப்பினர்களைச் சமூக வலைத்தளங்களிலும், பொது இடங்களிலும் நினைவேந்தியவர்களை அநுர அரசு உடன் கைது செய்ய வேண்டும். என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகர மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர்கள் மேலும் தெரிவிக்கையில், மரணித்துப் போன பயங்கரவாதிகளுக்கு அநுர அரசு புத்துயிர் கொடுக்கக் கூடாது. நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் தேசிய மக்கள் சக்தியினருக்கு அதிக ஆசனங்கள் கிடைத்தமைக்காகப் பிரபாகரனின் பிறந்த தினத்தையும், மாவீரர் தினத்தையும் பகிரங்கமாக அனுஷ்டிக்கத் தமிழ் மக்களுக்கு அநுர அரசு அனுமதி வழங்கியுள்ளது. அநுர அரசின் தான்தோன்றித்தனமான செயலுக்கு எதிராகப் போராடுவோம்.

# அழுத்தங்களற்ற அரசு

அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ் அரசு கட்சியுடன் பேசுவதற்கு தயார் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருகின்றார். அதற்கு நிபந்தனையாக தமிழ் மக்கள் பேரவையின் தீர்வாலோசனைத் திட்டத்தை முன் வைத்திருக்கின்றார். அந்தத் தீர்வாலோசனையில் இலங்கை தமிழ் அரசு கட்சி பங்கு கொள்ளவில்லை என்பது வேறுவிடயம்.

இதேவேளை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் பேசவில்லை என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் தெரிவித்திருக்கின்றார். ஆனால் இவர்கள் கவனிக்க வேண்டிய விடயம் வேறு அதாவது அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீது தமிழ் மக்களின் பிரச்னை தொடர்பில் எந்த அழுத்தங்களும் இல்லை இருக்கப் போவதுமில்லை.

இந்தப் பின்புலத்தில், தேசிய இனப்பிரச்னை பற்றிப் பேசுவதும், அதன் எல்லை என்ன என்பதை தீர்மானிக்கும் ஏகபோக உரிமை அரசாங்கத்திற்கு மாறியிருக்கின்றது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எதிர்பார்த்ததோ எதிர்பார்க்கவில்லையோ அவர்கள் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மையை பெற்றிருக்கின்றனர். இது இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிகவும் அரிதான ஒன்றாகும். இவ்வாறானதொரு பின்னணியில் பலமான நிலையிலிருக்கும் அரசாங்கத்தை தேவையில்லாமல் விரோதித்துக் கொள்ள எந்தவொரு வெளித்தரப்பும் முற்சிக்காது அதேவேளை தமிழரின் அரசியல் விவகாரம் ஏற்கனவே நீர்த்துப் போய்விட்ட ஒன்று.

இந்தியா மட்டும் தான் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் தொடர்பில் பேசி வருகின்றது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அங்கமாக பதின்மூன்று இருப்பது தான் அதற்கான ஒரேயொரு காரணம். இல்லாவிட்டால் இந்தியாவும் ஈழத் தமிழர் பிரச்னையை ஒரு விடயமாக எடுப்பதை கைவிட்டிருக்கும். ஏனெனில் ஈழத்தமிழ் மக்களை அணுகக் கூடிய அரசியல் தலைமையொன்று இல்லை.

அரசியல் ரீதியில் பலவீனமான நிலையிலிருக்கும் மக்கள் கூட்டமொன்றிற்காக, குரல் கொடுக்க எந்தவொரு வெளித்தரப்பும் முன்வராது. தற்போது ஏற்பட்டிருக்கும் நிலைமை இன்னும் சிக்கலானது. தமிழர் அரசியலின் மையம் என்று நோக்கப்பட்ட வடக்கில் கூட, தேசிய மக்கள் சக்தியே வெற்றி பெற்றிருக்கின்றது. தென்னிலங்கையைப் பொறுத்தவரையில், அரசியல் ரீதியில் இது ஒரு பிரதான வெற்றியாகும்.

இந்த நிலையில், சர்வதேச அரங்கு களில் தமிழ் மக்கள் இன்னும் முன்னைய நிலைப் பாட்டில் தான் இருக்கின்றனர் என்னும் அவதான மும் பெருமளவில் மாறுவதற்கான வாய்ப்பே அதிகம்.

இந்த நிலையில் அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ் கட்சிகளின் குரல்கள் பெருமளவிற்கு கேட்கப்படாத ஒன்றாகவே இருக்கப் போகின்றது. முன்னரும் அரசியல் தீர்வு என்னும் விடயம் மேற்குலக ராஜதந்திரிகள் மத்தியில் பெரிதாகப் பொருட்படுத்தப்படவில்லை. தற்போதுள்ள நிலையில் அரசியல் தீர்வு என்பது அதிகம் தந்திரோபாயம் சார்ந்த ஒன்றாகவே இருக்க வேண்டும்.

பிராந்திய சக்தியின் தலையீடான, இந்திய இலங்கை ஒப்பந்தம் ஒப்பீட்டடிப்படையில் தமிழ் மக்களுக்கு சாதகமான ஒன்று அதே வேளை அதன் விளைவான பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் இலங்கையின் அரசியலமைப்பு. அதனை முழுமையாக அமுல்படுத்துவதிலிருந்து தான் அதிகாரப் பகிர்விற்கான கோரிக்கையை உயர்த்த முடியும். ஒரு வேளை புதிய அரசியலமைப்பு ஒன்றைக் கொண்டு வர அரசாங்கம் முயற்சித்தாலும் கூட, பதின்மூன்றில் இருக்கின்ற விடயங்களை இல்லாமலாக்குவதை தவிர்ப்பதற்கு தமிழர் கோரிக்கை அத்திபாரமாக இருக்கும்.

ஏனெனில பதின்மூன்றே அதிகமென்னும் தென்னிலங்கை அரசியல் சூழலில், அதற்கப்பால் அநுர அரசாங்கம் அரசியல் அற்புதங்களை நிகழ்த்தும் அவ்வாறான அற்புதங்களை நிகழ்த்துவற்கான அழுத்தங்களை வெளித்தரப்புக்கள் வழங்கும் என்று எவரேனும் எண்ணினால் அவ்வாறான அரசியல்வாதிகள் நல்ல மருத்துவர்களைத் தான் நாட வேண்டும்.

# சீனத் தூதுவர் இனவாதக் கருத்துக்களை விதைக்கக் கூடாது அரசுக்கு சார்பாக தமிழ் மக்களை திருப்பக்கூடாது - கஜன்

இலங்கைக்கான சீனத் தூதுவர் இலங்கையில் இடம் பெற்ற தேர்தல் முடிவுகள் தொடர்பில் முரண்பாடான தகவல்களை கூறுவது ஏற்கக்கூடிய விடயமல்ல என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,




அண்மையில் சீனத் தூதர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட நிலையில் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து விட்டார்கள். இரண்டு தரப்புக்களும் ஒன்றிணைந்து செயற்பட ஆரம்பித்து விட்டன என கருத்துக் கூறியிருந்தார்.

இந்தக் கருத்தை எமது கட்சி கண்டிப்பதோடு இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர் ஒருவர் இவ்வாறு கருத்து கூறுவது நாகரிகமான செயல் அல்ல என்பதோடு அவ்வாறான கருத்தை தூதுவர் ஒருவர் கூறக்கூடாது.

உண்மையில் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் தேசிய மக்கள் சக்திக்கு தமிழ் மக்கள் ஆதரவு வழங்கி விட்டார்கள் என கூற முடியாத நிலையில், சீனா தூதுவர் எந்த அடிப்படையில் அவ்வாறான கருத்தை முன் வைத்தார் என்பது தொடர்பில் கேட்க விரும்புகிறேன்.

தேசிய மக்கள் சக்திக்கு யாழ். தேர்தல் தொகுதியில் மூன்று ஆசனங்கள் கிடைக்கப் பெற்றது. மூன்றாவது ஆசனம் சுயேச்சை குழுக்கள் திட்டமிட்ட முறையில் தமிழ் மக்களின் வாக்குகளை பிரித்ததால் அந்த ஆசனம் கிடைத்தது.

இம்முறை இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தலில் சுமார் ஒன்றரை இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் தெற்கை பிரதிநிதித்துவப்டுத்தி களமிறங்கிய அங்கஜன், டக்ளஸ் போன்றோர் பெற்ற வாக்குகளை விட இம்முறை தேசிய மக்கள் சக்தி சுமார் 15,000 வாக்குகள் குறைவாகப் பெற்றுள்ளது.

தெற்கு கட்சிகளுக்கு தொடர்ச்சியாக வாக்களிக்கும் ஒரு பகுதியினர் அங்கஜன், டக்ளஸை நிராகரித்து தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்துள்ளமையே உண்மையான விடயம்.

இவற்றை அறியாத சீனத் தூதுவர் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்பட தயாராகி விட்டனர் என்ற கருத்தை கூறுவது, ஒன்றில் கேட்ட கேள்விக்கான விளக்கம் என்னால் கூறப்பட்ட பதிலாக இருக்க வேண்டும் அல்லது தமிழ் மக்களை வேண்டுமென்றே தவறான பாதையில் இட்டுச் செல்வதாக பார்க்க முடியும்.

தமிழ் மக்கள் நீண்ட காலமாக தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகளுக்கு தமது ஆதரவை கொடுத்து வரும் நிலையில் அவர்களின் கோரிக்கை தொடர்பில் சீன தூதுவர் அரசாங்கத்துக்கு எடுத்துக் கூற வேண்டும்.

அதை விடுத்து, பூலோக அரசியல் போட்டி காரணமாக சீனா தமது ஆதிக்கத்தை அதிகரிப்பதற்காக இனவாத கருத்துக்களை தெரிவிப்பது ஆரோக்கியமான விடயமல்ல. ஆகவே உலக வல்லரசில் ஒன்றாக சீனா, அதன் இலங்கைக்கான தூதுவர் தனது தூதுவர் பதவிக்கு பொருத்தமில்லாத விடயங்களில் தலையிடுவதும் தமிழ் மக்கள் மத்தியில் இனவாத கருத்துக்களை விதைப்பதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

# சுமந்திரன் இல்லாத வீட்டில் இருந்து ஶ்ரீதரன் - கஜன் சந்திப்பு புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் பேசினார்களாம்




புதிய அரசியலமைப்பில் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவகையில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு உள்வாங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும், அதனை இலக்காகக் கொண்டு அடுத்த கட்டமாக முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் சிவஞானம் சிறிதரன் ஆகியோருக்கு இடையிலான சிநேகபூர்வ சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தல் முடிவுகளை அடுத்து இனி வருங்காலங்களிலேனும் தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகள் தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி ஒன்றுபட்டுப் பயணிக்கவேண்டும் என்ற விடயம் பல்வேறு தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

அதன்படி தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்ட முன்மொழிவை அடிப்படையாகக் கொண்டு ஏனைய தமிழ்த்தேசிய கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்குத் தாம் தயாராக இருப்பதாக அண்மையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருந்தார்.

அதேவேளை இது பற்றிக் கருத்து வெளியிட்டிருந்த இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இத்தீர்வுத் திட்ட முன்மொழிவு குறித்தும், அதற்கு அப்பாலும் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தாம் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் இது பற்றிக் கலந்துரையாடும் நோக்கில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுக்கும் இடையிலான சிநேகபூர்வ சந்திப்பொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் சிறிதரனின் இல்லத்தில் நடைபெற்றது. இச்சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரனும் கலந்து கொண்டிருந்தார்.

இதன் போது அரசாங்கத்தினால் கொண்டு வரப்படும் புதிய அரசியலமைப்பில் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவகையில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு உள்வாங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும், அதனை இலக்காகக் கொண்டு அடுத்த கட்டமாக முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இரு தரப்பினரும் ஆராய்ந்தனர்.

அதேபோன்று தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தை கஜேந்திரகுமார் சிறிதரனிடம் கையளித்தார். அத்தோடு ரொமேஷ் டி சில்வா தலைமையிலான குழுவிடம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினால் முன் வைக்கப்பட்ட யோசனைகள் பற்றி இதன்போது சிறிதரன் எடுத்துரைத்தார்.

அத்தோடு தமிழர்களுக்கான தீர்வு விடயத்தை ஒரு பொதுவேலைத் திட்டத்தின் ஊடாக அணுக வேண்டும் என்ற கொள்கை ரீதியான நிலைப்பாடு தொடர்பில் இங்கு இருதரப்பினரும் தமது இணக்கத்தை வெளிப்படுத்தினர்.

## இனவாதத்தைத் தூண்ட அனுமதியோம்

தேர்தல் காலத்தில் இனவாதத்தையும் மதத் தீவிரவாதத்தையும் எங்களிற்கு எதிராக பயன்படுத்தியவர்கள் தற்போது இனவாதத்தை தூண்ட முயல்கின்றனர் என தெரிவித்துள்ள தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ எந்தகாரணத்திற்காகவும் இனவாதம் தலைதூக்குவதற்கு அனுமதிக்கமாட்டோம் என குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தேர்தல் காலத்தில் இனவாதத்தையும் மததீவிரவாதத்தையும் எங்களிற்கு எதிராக எப்படி தேர்தல்வாக்களிப்பிற்கு முன்னர் பயன்படுத்தினார்கள் என உங்கள் மனச்சாட்சியை கேட்டுப்பாருங்கள். தேர்தல் காலத்தில் எங்களிற்கு எதிராக வேண்டுமென்றே பொய்களை பரப்பினார்கள்.

எங்களை தெரிவு செய்தால் மக்கள் தங்கள் மதநம்பிக்கைகளை பின்பற்ற முடியாத நிலை ஏற்படும் எங்களிற்கு எதிராக இந்த கதைகளை பரப்பியவர்கள் தற்போது இனவாதத்தை தூண்ட முயல்கின்றனர். எந்தகாரணத்திற்காகவும் இனவாதம் தலைதூக்குவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்றார்.

இதேவேளை பயங்கரவாத செயற்பாடுகளுக்காக நிதி சேகரித்த குற்றச்சாட்டில் பிரித்தானியக் குடியுரிமை பெற்ற இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த சந்தேக நபரால் சேகரிக்கப்பட்ட பணம் கொழும்பு மற்றும் வன்னி பிரதேசத்தில் வசூலிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 2009 ஆம் ஆண்டு நாட்டை விட்டு பிரித்தானிய குடியுரிமை பெற்ற கிளிநொச்சி பகுதியை சேர்ந்த 43 வயதுடையவர் ஆவார். கொழும்பு வடக்கு குற்றப் பிரிவினரால் கொழும்பு நீதவான் நீதிமன்றினால் பெறப்பட்ட பயணத்தடை உத்தரவுக்கு அமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய பொலிஸார் மற்றும் கொழும்பு வடக்கு குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாவீரர் நாள் 2024

## மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டம்

நான்கு ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணம் திண்ணை விருந்தினர் விடுதியில் ஒரு தூதரகத்தின் இரவு விருந்தில் கலந்து கொண்டேன். எனது மேசையில் மூத்த ஊடகவியலாளர்கள் இருவரும் ஊடக முதலாளி ஒருவரும் அரசாங்கத்துடன் சேர்ந்து இயங்கும் கட்சி ஒன்றின் முக்கியஸ்தரும் அமர்ந்திருந்தார்கள்.

எங்களோடு இருந்து கதைத்துக் கொண்டிருந்த ஒரு இராஜதந்திரி என்னைப் பார்த்துச் சொன்னார் எல்லா ஈழத் தமிழர்களின் மனதிலும் ஒரு நாடு என்ற கனவு உண்டு இப்படிக் கூறிவிட்டு அருகில் இருந்த அந்தக் கட்சிப் பிரமுகரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு சொன்னார் இதோ இவருடைய தலைவர் அமைச்சராக இருக்கலாம். ஆனால் அவரிடமும் அந்தக் கனவு உண்டு.

ஆம். அந்தக் கனவு எல்லா ஈழத் தமிழர்களிடமும் இருப்பதால் தான் அந்தக் கனவைக் கட்டியெழுப்பிய தியாகிகளை அவர்கள் எல்லா இடர்களின் மத்தியிலும் நினைவு கூர்கிறார்கள்.

இம்முறை மாவீரர் நாளையொட்டி போலீசார் கடந்த ஆண்டுகளில் செய்வதைப் போல நீதிமன்றத்திற்கு போய் தடை உத்தரவுகளை பெற்றுக் கொண்டு வரவில்லை. எனினும் அம்பாறையில் போலீசார் சில நெருக்கடிகளைக் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் தடை செய்யப்பட்ட ஒரு இயக்கத்தின் நினைவுப் பொருட்களுக்குத் தடை என்று அறிவித்திருந்த போதிலும், பெரும்பாலான சிறிய மற்றும் பெரிய தமிழ்ப் பட்டினங்களில் மாவீரர்களின் பாடல்கள் அனைத்தும் ஒலிக்கவிடப்பட்டன. உட்கிராமங்களில் மக்கள் கூடும் இடங்களிலும் பாடல்களைக் கேட்கக் கூடியதாக இருந்தது.

அடர் மழை பொழிந்தது. வெள்ளம் பெருகி சில இடங்களில் பாதைகளை மூடியது. புயல் வரக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டது.எனினும் மழை விட்டிருந்த இடையூட்டுக்குள் மக்கள் துயிலுமில்லங்களை நோக்கிக் குவிந்தார்கள். குடைகளின் கீழே சுடர்களை ஏற்றினார்கள். ஆம். அவர்கள் தமது தேசக் கனவைக் கட்டியெழுப்பப் புறப்பட்டவர்களை ஒரு தேசமாக நினைவு கூர்ந்தார்கள்.

அதிகாரத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் என்பது மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டம் தான் என்று மிலன் குந்ரோ– Milan Kundera– கூறுவார். நினைவுகளின் போராட்டம் அல்லது மறதிக்கு எதிரான போராட்டம் என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை தேசமாகத் திரள்வதன் ஒரு பகுதி. நீதிக்கான போராட்டத்தின் ஒரு பகுதி.

தமிழ் மக்கள் எதை எதை மறக்கவில்லை? அல்லது மறக்கக் கூடாது? தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காகத் தங்களைத் தியாகம் செய்தவர்களை மறக்கக்கூடாது.

அதே சமயம் அந்த தியாகியின் இழப்பால் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்பட்டவர்களையும் மறந்து விடாதிருக்க வேண்டும். தியாகிகளின் வீட்டில் அடுப்பு எரிகின்றதா? அந்தத் தியாகியின் வீட்டுக்கூரை மழைக்கு ஒழுகுகின்றதா? அந்த தியாகியின் முதிய பெற்றோர் இப்பொழுது யாரோடு இருக்கிறார்கள்? அவர்களை யார் பராமரிக்கிறார்கள்? அந்த தியாகியின் மனைவி இப்பொழுது எங்கே? அவருடைய வருமான வழி என்ன? அந்த தியாகியின் பிள்ளைகள் ஒழுங்காக படிக்கிறார்களா? போன்ற எல்லா விடயங்களையும் மறந்து விடாமல் கவனிக்க வேண்டும்.

இரண்டாவதாக, அந்தத் தியாகியோடு போர்க்களத்தில் நின்றவர்கள், கையைக் காலைக் கொடுத்தவர்கள், கண்ணைக் கொடுத்தவர்கள், இடுப்புக்குக் கீழ் இயங்காதவர்கள், சக்கர நாற்காலிகளில் வாழ்பவர்கள், இப்பொழுதும் படுக்கையில் கிடப்பவர்கள், இப்பொழுதும் உடல் முழுவதும் சன்னங்களைக் காவிக் கொண்டு திரிபவர்கள், என்னவென்று தெரியாத நோய்களைக் காவிக் கொண்டு திரிபவர்கள்... ஆகிய முன்னால் இயக்கத்தவர்களையும் மறக்கக் கூடாது.

இந்த நாட்டிலேயே அதிகம் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய தரப்பு -most vulnerable-அவர்கள்தான். அவர்களிற் சிலர் கடந்த 15 ஆண்டுகளாக தேர்தல் கேட்கிறார்கள். கடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஆறு பேர் வெவ்வேறு கட்சிகளில் தேர்தல் கேட்டார்கள். ஒருவரும்



வெற்றி பெறவில்லை. காலை இழந்த ஒரு பெண்ணுக்கும் வெற்றி கிடைக்கவில்லை. அந்த முன்னாள் இயக்கத்தவர்களில் யாருக்குமே தமிழ் மக்கள் வெற்றியைக் கொடுக்கவில்லை. ஏன்? ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட இயக்கம் தேர்தல் கேட்கக் கூடாது என்று தமிழ் மக்கள் நம்புகிறார்களா? அல்லது, இந்த விடயத்தில் தமிழ் மக்களுக்கு மறதி அதிகமா? அல்லது முன்னாள் இயக்கத்தவர்கள் தேர்தல் அரசியலின் கள்ளச் சூத்திரங்களைக் கற்றுத் தேறவில்லையா? ஒவ்வொரு ஆண்டும் துயிலும் இல்லங்களில் சிந்தப்படும் கண்ணீர் யாருக்கு வாக்காக மாறுகிறது?

தியாகிகளை நினைவு கூர்வது என்பது அந்த தியாகிகளோடு போர்க்களத்தில் நின்றவர்களை, போராட்டத்தில் தமது இளமையை, தமது வயதுகளை, தமது கல்வியை, அவயவங்களை இழந்தவர்களையும் மறந்து விடாமல் இருப்பதுதான்.

மூன்றாவது போராடப் போய் சிறை வைக்கப்பட்டவர்களை, காணாமல் ஆக்கப்பட்டவர்களை, அவர்களுக்காகப் போராடும் முதிய அம்மாக்கள் அப்பாக்களை. போரினால் விதவைகளாக்கப்பட்டவர்களை மறந்து விடாதிருக்க வேண்டும். போர் விதவைகள் கிட்டத்தட்ட 90000பேர் உண்டு. தேசத்தைக் கட்டி எழுப்புவது என்பது போரினால் யார் யாருடைய தனிப்பட்ட வாழ்க்கை தூர்ந்து போனதோ, யாரெல்லாம் மீண்டெழ முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களுடைய வாழ்க்கையை, வாழ வேண்டும் என்ற நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதுந் தான்.

நாலாவது, 2009ஐ உடனடுத்த ஆண்டுகளில் நினைவு நாட்களை ஒழுங்குபடுத்தியது அரசியல் கட்சிகள் தான். அவர்களால் தான் அப்பொழுது அதைத் துணிந்து செய்ய முடிந்தது. இப்பொழுதும் நினைவு கூரும் களங்களின் பின் கட்சிகள் உண்டு. நினைவிடங்களில் கூடும் மக்களின் கூட்டுத் துக்கத்தை கொத்து வாக்காக எப்படித் திரட்டுவது என்பது அவர்களுடைய பிரச்சினை. ஆனாலும் மறதிக்கு எதிரான போராட்டத்தில் அவர்களுக்கு ஒரு பங்கு உண்டு.

அதே சமயம் அவர்களுடைய அரசியல் முதலீடும் தமிழ் மகாஜனங்களின் மறதி தான்.

2009க்கு முன்பு தமிழ்த் தேசிய அரசியலில் ஈடுபடுவதற்கான அடிப்படைத் தகுதி தியாகத்துக்குத் தயாராக இருப்பது. ஆனால் கடந்த 15 ஆண்டுகளாக அடிப்படைத் தகுதி பிழைக்கத் தெரிந்திருப்பது. இந்தத் தகைமை வேறுபாட்டுக்குப் பின்னால் உள்ள சீரழிவை தமிழ் மக்கள் மறந்து விடாமல் இருக்க வேண்டும். தமிழ்க் கட்சிகளுக்கு தமிழ் மக்களின் நினைவும் தேவை மறதியும் தேவை.

தமிழ் மக்களின் மறதியின் மீது அதிகம் வெற்றிகரமாக அரசியல் செய்வது தமிழரசுக் கட்சிதான். கடந்த 15 ஆண்டுகளாக தலைவராக இருந்த சம்பந்தர் ஒவ்வொரு பெருநாள் திருநாளின் போதும் குடுகுடுப்பைச் சாத்திரக்காரனைப் போல அல்லது சுயாதீன திருச்சபையின் போதகரைப் போல அருள் வாக்குக் கூறிக் கொண்டிருந்தார். தீபாவளிக்கு தீர்வு வந்துவிடும் என்றெல்லாம் கூறினார். எதுவும் வரவில்லை. சம்பந்தரும் இப்பொழுது இல்லை. ஆனால் தமிழ் மக்கள் அதையெல்லாம் மறந்து போய் இந்த முறை தமிழரசுக் கட்சிக்கே அதிகம் வாக்குகளைக் கொடுத்தார்கள்.

தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் மறதியை வைத்து விளையாடுகிறது என்பதனை எப்பொழுதும் சுட்டிக் காட்டுவது, பிரதானமாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான். தமிழ்த் தேசிய அரசியலில் தமிழ் மக்களின் மறதிக்கு எதிரான போராட்டத்தில் முன்னணியில் நிற்பது அந்தக் கட்சி தான். அதே சமயம் அது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஏகபோக வாரிசாக தன்னைக் காட்டிக் கொள்ளப் பார்க்கின்றது. நினைவு நாட்களைத் தத்தெடுக்கப் பார்க்கின்றது.

கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது அந்த கட்சியின் செயலாளர் கஜேந்திரன் ஒரு காணொளியில் கூறுகிறார்... .ஏனைய எல்லா கட்சிகளையும் விடவும் சாகத் தயாரான கட்சி தாங்கள் தான் என்று. ஒரு கட்சி தனது மக்களுக்காக சாகத் தயாராக இருக்கிறது என்பதனை யாராவது அந்த கட்சியின் உறுப்பினர் செத்துத் தான் நிரூபிக்க வேண்டும்.

கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் மக்களுக்காகப் போராடி யாரும் அப்படி உயிரைத் துறந்ததாகத் தெரியவில்லை. தன்னை ஏனைய கட்சிகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக, தான் மட்டும் சாகத் தயாரான கட்சி என்று முன்னணி கூறிக்கொள்கிறது. ஆனால் 3 லட்சத்துக்கும் குறையாத போராளிகளும் மக்களும் உயிரைக் கொடுத்த ஒரு போராட்டத்தை கடந்து வந்த இனம் இது என்பதை அந்தக் கட்சி மறந்து விட்டது. இதுவும் தமிழ் மக்களின் மறதியின் மீது செய்யப்படும் அரசியலே.

இவ்வாறு தமிழ் மக்களின் மறதியின் மீது அரசியல் செய்யும் தமிழ்த் தேசிய கட்சிகள், நினைவு நாட்களை வைத்துச் தாடுவதைத் தடுப்பதற்கு தமிழ் மக்கள் மறதிக்கு எதிராகப் போராட வேண்டும். எனவே மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டம் என்பது, தமிழ் மக்களைப் பொறுத்தவரை தேசத்தைக் கட்டியெழுப்பிய நினைவுகளைத் தொடர்ந்தும் தேசத்தை பிணைக்கும் நினைவுகளாகப் பேணுவது தான். நினைவின் பசை கொண்டு ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவது.

மேலும் இறந்த காலத்தை மறந்து விடாமல் இருப்பது என்பது, இறந்த காலத்திலேயே வாழ்வது அல்ல. காயங்களோடு வாழ்வது அல்ல. துக்கத்தில் உறைந்து கிடப்பதும் அல்ல.

மாறாக, இறந்த காலத்தில் இருந்து கற்றுக் கொள்வது. மகத்தான வீரமும் மகத்தான தியாகமும் எங்கே எப்படித் தோல்வியுற்றன என்பதைக் கற்றுக் கொள்வது. கூட்டுத் துக்கத்தை, கூட்டுக் காயங்களை கூட்டு மனவடுக்களை, கூட்டுத் தோல்வியை, கூட்டு அவமானத்தை கூட்டு அரசியல் ஆக்க சக்தியாக மாற்றுவது. அந்த அரசியல் ஆக்க சக்தியை நீதிக்கான போராட்டத்தின் உந்து விசையாக மாற்றுவது.


பிரம்ரன் தமிழ் ஒன்றியம்
Brampton Tamil Associati
PO Box 80024, Cottrelle, Brampton, ON. L6P 2W7
Web:www.bramptontamil.com Phone: (647) 873 0732 Email:info@bramptontamil.ca

Subaharan Nadarajah
President
Yasokumar Murugar
Vice President
Kiruba Thuraiappah
Vice President
Kamalitta Rayappu
Secretary
Krishnakumar Sabapathy
Assistant Secretary
Selvi Velmurugan
Treasurer

Committee Members
Gunabalasingam Balasingam
Amaleethan Xavier
Selvan Thurairaja
Shanmugam Mathinathan
Chusi Rajan
Sharmy Subash
Elancheliyan Sivagnanam
Anpalakan Ramasamy
Santhiralatha Rajkumar
Bavaneethan Nadarajah
Sathiy Satkunanantharajah
Thirukumar Kanesh
Sathees Thangavelautham
Kirupakaran Tharmalingam
Kamalanathan Pakkiyaraja
Sivamohan Subramaniam
Visvalingam Kanapathippillai

Novemer 07/2024

பிரம்டன் தமிழ் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும், அன்பான வணக்கம்.

ஒன்றியத்தின்ஆண்டு பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபை தெரிவும்
டிசம்பர் மாதம் எட்டாம் நாள் (12/08/2024) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியிலிருந்து 9 மணி வரை
10150 The Gore Road Brampton Ontario இல் அமைந்துள்ள , Gore Meadows Community Center & Library, Community இல் நடைபெற உள்ளது. ஒன்றியத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமூகமளிக்குமாறு ஒன்றியத்தின் சார்பில் அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆண்டு சந்தாதாரர்கள்,பொதுக் கூட்டத்திற்கு முன்னதாகவோ அல்லது பொதுக்கூட்டத்தில் அன்று இவ்வாண்டுக்குரிய உங்களுடைய அங்கத்துவப் பணத்தை செலுத்தி,அங்கத்துவத்தை தொடருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு:- பெருமளவான மின்னஞ்சல்கள் ,விநியோகிக்க முடியாமல் மீளகிடைக்கப் பெறுகின்றன,அவை சரியான மின்னஞ்சல் முகவரிகளாக அடையாளப்படுத்தப்படவில்லை. அங்கத்தவர்கள், உங்களுடைய தொடர்பிலக்கத்தையும் மின்னஞ்சல் முகவரியையும் ஒன்றியத்துடன் தொடர்பு கொண்டு மீளாய்வு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஆண்டு பொது கூட்டத்தில் இடைக்கால தலைவராக பொறுப்பேற்று புதிய நிர்வாக சபை தெரிவிற்கு,ஆசிரியர் தனபாலன் அவர்கள் வருகை தருவதாக உறுதிப்படுத்தியுள்ளார்.

நன்றி
நிர்வாக சபை
BTA phone 647 873 0732
E-Mail:info@bramptontamil

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! டிசம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.
தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா
செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)
பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)
உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)
உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)
பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்
இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.


"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

16 நவம்பர் 2024 - 29 நவம்பர் 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 24வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பேரின்பமூர்த்தி இளையதம்பி

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பேரின்பமூர்த்தி இளையதம்பி அவர்களது 24வது ஆண்டு நினைவு நாள் 04 டிசம்பர் 2024 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பேரின்பமூர்த்தி இளையதம்பி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 37வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தனலெட்சுமி இராஜேந்திரராஜா

யாழ்ப்பாணம் நல்லூரடியைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திருமதி தனலெட்சுமி இராஜேந்திரராஜா அவர்களின் 37வது ஆண்டு நினைவுநாள் 05 டிசம்பர் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது பிள்ளைகள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தனலெட்சுமி இராஜேந்திரராஜா அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 30வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சடாச்சரசுந்தம் கந்தசாமி

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சடாட்சரசுந்தரம் கந்தசாமி அவர்களது 30வது ஆண்டு நினைவு தினம் 29 நவம்பர் 2024 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சடாட்சரசுந்தரம் கந்தசாமி அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 47வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னப்பு நல்லையா

யாழ்ப்பாணம் ஊரெழ கிழக்கு ஊரெழவைச் சேர்ந்த அமரர் திரு சின்னப்பு நல்லையா அவர்களது 47வது ஆண்டு நினைவு நாள் 17 டிசம்பர் 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் திரு சின்னப்பு நல்லையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம்

யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த யாழ்.இந்துமகளிர் கல்லூரி ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 17 நவம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 13,3வது ஆண்டு நினைவஞ்சலிகள்





### திரு வீரகத்தி கதிர்காமு

### திருமதி கதிர்காமு தங்கம்மா

பேரාலை பளையைச் சேர்ந்தவர்களான திரு வீரகத்தி கதிர்காமு அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளும் திருமதி கதிர்காமு தங்கம்மா அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளும் 08 டிசம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு வீரகத்தி கதிர்காமு, திருமதி கதிர்காமு தங்கம்மா இணையர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



29 நவம்பர் 2024 வெள்ளிக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சடாச்சரசுந்தரம் கந்தசாமி அவர்களது 30வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



30 நவம்பர் 2024 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சரண்ராஜ் தர்சிகா தம்பதிகளின் செல்வப்புதல்வன் அட்சயன் சரண்ராஜின் 14வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் அட்சயன் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



28 நவம்பர் 2024 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சிவகாமி ஜெயகௌரி தம்பதிகளின் செல்வப்புதல்வி சுருதி சிவகாமியின் பிறந்த நன்நாளாகும். அன்றைய தினத்திற்காக செல்வி சுருதி சிவகாமி 30 நவம்பர் 2024 சனிக்கிழமை தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



04 டிசம்பர் 2024 புதன்கிழமை பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பேரின்பமூர்த்தி இளையதம்பி அவர்களது 24வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



05 டிசம்பர் 2024 வியாழக்கிழமை யாழ்.நல்லூரைச் சேர்ந்த திருமதி தனலெட்சுமி இராஜேந்திரராஜா அவர்களது 37வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



06 டிசம்பர் 2024 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சஜனுகா யாதவன் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்


## கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

**கட்டணங்கள் ஏதுமற்ற சேவை**

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



உ

ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

# அருள்மிகு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 Canada Tel: 416-321-6104 Fax: 416-321-7557 www.ayyappan.ca

Facebook: Canada Sri Ayyappan Hindu Temple

## மண்டல மகர விரத விஞ்ஞாபனம்






## ஐயப்பன் மாலை அணியும் வைபவம்

## 16-11-2024 சனிக்கிழமை

ஐயப்பன் மெய்யடியார்களே!

ஸ்காபரோ 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 16.11.2024 சனிக்கிழமை அதிகாலை 7.00 மணிக்கு கணபதி ஹோமம். தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 8.30 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும்.

மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும்.

அடியார்கள் புனிதமான ஐயப்பன் மகரமண்டல விரதகாலத்தில் பக்திசிரத்தையுடன் காலை, மாலை நடைபெறும் ஐயப்ப பூஜை விழாக்களில் கலந்து கொள்வதுடன் முடிந்த வரை மண்டலபூஜை உபயங்களைப் பொறுப்பேற்றுச் சிறப்பித்து ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அழைக்கின்றோம்.

*முக்கிய குறிப்பு: கைத்தொலைபேசியை ஆலயத்தினுள் பாவிக்க வேண்டாம்

## MANDALA MAKARA VIRATHAM AND AYYAPPAN SACRED THULASI MALAI WEARING FESTIVAL

**Mandala Makara Viratha & Sacred Thulasi Mala Wearing Festival shall be held at canada Sri Ayyappan Hindu Temple, on Saturday, November 16, 2024 Starting with Ganapathy Homam at 7.00am, followed by Sastha Homam and Thulasi Mala Wearing from 8.30am to 8.00pm.**



***Note: Please don't use phones inside the TEMPLE**

*இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர்சபை*

# மலேசியத் தொழிலதிபர் ஆனந்தகிருஷ்ணனின் 40,000 கோடியை உதறி பௌத்த துறவியான மகன்!

மலேசியாவில் தொலைத்தொடர்பு, செயற்கைக்கோள், ஊடகம், எண்ணெய்-எரிவாயு, ரியல் எஸ்டேட் என ஏகப்பட்ட நிறுவனங்களுக்கு சொந்தக்காரர் ஏகே என்று அனைவராலும் அழைக்கப்படும் ஆனந்த கிருஷ்ணன்.

இலங்கை தமிழரான இவர், மலேசியாவின் பணக்காரர்கள் பட்டியலில் மூன்றாவது இடத்தில் உள்ளார். ஃபோர்ப்ஸ் மதிப்பீட்டின்படி ரூ.40,000 கோடி சொத்துகளுக்கு சொந்தக்காரரான ஆனந்த கிருஷ்ணன் தனது 86 வயதில் உடல்நலக்குறைவால் மலேசியாவில் காலமானார்.

இது குறித்து அவரது தனியார் முதலீட்டு நிறுவனமான உசாஹா தேகாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், எங்களது தலைவர் டி. ஆனந்த கிருஷ்ணன் மறைவை ஆழ்ந்த வருத்தத்துடன் அறிவிக்கிறோம். மலேசியாவை தன்னிறைவு பெற்ற தேசமாக கட்டியெழுப்புவதற்கும், கார்ப்பரேட் நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் கணிசமான பங்களிப்பை ஏகே வழங்கியுள்ளார். அவரது சமூக தொண்டு அடித்தட்டில் உள்ள இலட்சக்கணக்கான மக்களை சென்றடைந்துள்ளது. அவரது மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பு என்று குறிப்பிட்டுள்ளது.

மலேசியாவில் மேக்சிஸ் என்ற தொலைத்தொடர்பு நிறுவனத்தை நடத்தி வந்த ஏகே கடந்த 2005-ல் இந்தியாவின் ஏர்செல் நிறுவனத்தின் பங்குகளை 1 பில்லியன் டொலருக்கு (சுமார் ரூ.800 கோடி) வாங்கினார். ஏர்செல்-மேக்சிஸ் முறைகேடு வழக்கில் இவரின் பெயரும் சேர்க்கப்பட்டது.

மலேசியாவில் பிரதமராக இருந்த மகாதீர் முகமதுவின் நெருங்கிய நண்பராக விளங்கியவர் ஏகே. அந்த வகையில், தொலைத்தொடர்பு, செயற்கைக்கோள், ஒளிபரப்பு துறையில் ஏராளமான உரிமங்களை பெற்றார். மலேசியாவின் அடையாளமான 88 மாடி இரட்டை கோபுரங்களை கட்டமைப்பதற்கு காரணமாக இருந்தவர்.

ஆனந்த கிருஷ்ணனின் பெற்றோர் இலங்கை யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள். இவர்கள் மலேசியாவில் லிட்டில் இந்தியா என்று அழைக்கப்படும் பிரிக்பீல்ட் பகுதியில் குடியேறினர். அப்போது தான் ஏகே 1938-ம் ஆண்டு பிறந்தார். மலேசியாவின் விவேகானந்தா தமிழ்ப் பள்ளியில் தொடக்க கல்வியை தொடங்கி ஆஸ்திரேலியாவின் மெல்பர்ன் பல்கலைக் கழகத்தில் எம்.பி.ஏ. பட்டப்படிப்பை முடித்தார்.



ஆனந்த கிருஷ்ணனின் மனைவி மோம்வஜராங்சே சுப்ரிந்தா சக்ரபன் தாய்லாந்து அரச குடும்பத்தை சேர்ந்தவர். இவர்களது மகன் வென் அஜான் சிரிபான்யோ உலகளவில் தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்தவர். புத்தமத கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட சிரிபான்யோ தனது தந்தையின் ரூ.40,000 கோடி சாம்ராஜ்யத்தை துறந்துவிட்டு புத்த துறவியாக மாறியது உலக அளவில் பரபரப்பு செய்தியானது. கடந்த 20 ஆண்டுகளாக சிரிபான்யோ தாய்லாந்து-மியான்மர் எல்லைக்கு அருகில் தாவோ டம் புத்த மடாலயத்தில் துறவியாக வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# நான் பதவியேற்பதற்கு முன் பணயக் கைதிகளை விடுவிக்க வேண்டும் ஹமாஸிற்கு கடும் எச்சரிக்கை விடுத்த ஜனாதிபதி ட்ரம்ப்

தான் அமெரிக்க அதிபராக பதவியேற்பதற்கு முன்பாகவே காசாவில் பிடித்து வைக்கப்பட்டுள்ள பிணைக் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று டொனால்ட் ட்ரம்ப் கடுமையாக எச்சரித்துள்ளார். இது குறித்து டொனால்ட் ட்ரம்ப் தனது சொந்த சமூக வலைதளமான ட்ரூத் சோஷியல் தளத்தில் கூறியிருப்பதாவது:

மத்திய கிழக்கில் மிகவும் வன்முறையான, மனிதாபிமானமற்ற முறையிலும், ஒட்டுமொத்த உலக நாடுகளின் விருப்பத்திற்கு எதிராகவும் பிடித்து வைக்கப்பட்டுள்ள பிணைக் கைதிகளைப் பற்றி எல்லோரும் பேசுகிறார்கள்.

ஆனால் அவை எல்லாம் வெறும் பேச்சளவிலேயே இருக்கிறது. எந்த நடவடிக்கையும் இல்லை. நான் அமெரிக்காவின் அதிபராக பெருமையுடன் பதவியேற்கும் நாளான 2025 ஜனவரி 25.க்கு முன்பாக காசாவில் இருக்கும் இஸ்ரேலிய பிணைக் கைதிகளை விடுவிக்க வேண்டும்.

அவ்வாறு செய்யவில்லை என்றால் மத்திய கிழக்கும், மனிதகுலத்துக்கு எதிராக இத்தகைய அட்டூழியங்களை செய்து கொண்டிருப்பவர்களும் மிகப்பெரிய விலையை கொடுக்க வேண்டியிருக்கும்.

இதற்கு காரணமானவர்கள் மீது அமெரிக்க வரலாற்றிலேயே யாரும் செய்யாத அளவுக்கு மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்படும். உடனடியாக பிணைக் கைதிகளை விடுவியுங்கள். இவ்வாறு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கடந்த 2023-ம் ஆண்டு அக்டோபர் 7-ம் திகதி இஸ்ரேல் நாட்டில் சுமார் 1,200 பேரை படுகொலை செய்து, 200-க்கும் மேற்பட்டவர்களை பிணைக்கைதிகளாக ஹமாஸ் தீவிரவாத அமைப்பினர் பிடித்துச் சென்றனர்.



இதையடுத்து ஹமாஸ் அமைப்பினரை முற்றிலுமாக ஒழித்துக் கட்டுவதாக சூளுரைத்த இஸ்ரேல், அவர்கள் தங்கியிருக்கும் காசாவில் தீவிர தாக்குதலை நடத்தி வருகிறது.

இதில், இதுவரை 43,500-க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். இதுவரை இஸ்ரேலிய பிணைக் கைதிகள் விடுவிக்கப்படவில்லை. அவர்களின் நிலை எவ்வாறு இருக்கிறது என்று தெரியப்படுத்தப்படவில்லை.

# தமிழ்மொழி உட்பட 11 மொழிகளில் வெளியான கனடாவின் விளம்பரம்



கனடாவில் இனி புகலிடக் கோரிக்கை பெறுவது என்பது எளிதல்ல என கனேடிய அரசாங்கம் உலகளாவிய எச்சரிக்கை விளம்பரம் ஒன்றை விடுத்துள்ளது.

சுமார் 178,662 அமெரிக்க டொலர்கள் செலவில் தமிழ், இந்தி, உருது மற்றும் ஸ்பேனிஷ் உட்பட 11 மொழிகளில் இந்த எச்சரிக்கை விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்நடவடிக்கை கனேடிய மக்களிடையே செல்வாக்கு குறைந்து வரும் ஜஸ்டின் ட்ரூடோ அரசாங்கத்தின் அரசியல் தந்திரம் என ஒரு சில தரப்புகளில் இருந்து விமர்சனங்கள் எழுந்துள்ளன. குறித்த விளம்பரத்தில், கனடாவில் இனி புகலிடம் கோருவது எளிதல்ல அத்தோடு தகுதி பெற கடுமையான வழிமுறைகள் உள்ளன. முடிவெடுக்கும் முன்னர் அவை குறித்து நன்கு தெரிந்துகொள்ளுங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுவாகவே, புலம்பெயர் மக்களுக்கு வாய்ப்புக்களை அதிகம் வழங்கி வரும் கனேடிய அரசாங்கம், தற்போது அந்த எண்ணிக்கையை குறைத்துள்ளதுடன், டொனால்ட் ட்ரம்பினால் அமெரிக்காவில் இருந்து கனடாவுக்கு தற்காலிகமாக குடியேறும் மக்களையும் தடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(22ம் பக்கத் தொடர்ச்சி) கையாள முற்படுகிறது. அதேவேளை, சீன சார்பு அரசாங்கம் முத்திரை குத்தப்பட்ட தற்போதைய அரசாங்கம், இந்திய நிறுவனங்களுடனான திட்டங்களை ரத்து செய்ய முற்படுகின்ற போது, சர்வதேச அளவில் நன்மதிப்பை இழக்குகின்ற நிலை ஏற்படும்.

முதலீட்டுக்கு உகந்த சூழல் இலங்கையில் இல்லை என்ற பிரசாரத்தில் அது இலங்கையை சிக்க வைக்கும். அத்தகைய நிலை ஏற்படாமல் அதானி குழுமத்தை வெளியே கொண்டு செல்வது, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு உள்ள மிகப்பெரிய சவால்.

# தனது மகனுக்கு பொது மன்னிப்பு வழங்கிய பைடன்

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், தமது மகனான ஹன்டர் பைடனுக்குப் பொது மன்னிப்பு வழங்கியிருப்பதாக அறிவித்துள்ளார். போலி தகவல் வழங்கியது, சட்டவிரோதமாக துப்பாக்கி வைத்திருந்தது, கூட்டரசு வரி தொடர்பான குற்றச்சாட்டுகள் ஆகியவை சார்ந்த வழககில் ஹன்டர் பைடன் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

தமது மகனுக்குப் பொது மன்னிப்பு வழங்கும் ஆவணத்தில் கையெழுத்திட்டுள்ளதாக பைடன் கூறினார். அமெரிக்காவின் அதிபராகப் பொறுப்பேற்றதிலிருந்து நீதித்துறையின் முடிவில் தலையிட மாட்டேன் என்று தெரிவித்திருந்தேன். சொன்னபடி செய்துள்ளேன்.

என் மகன் மீது வீண் பழி சுமத்தப்பட்டு அவர் நியாயமற்ற வகையில் நடத்தப்பட்ட போதும் நான் தலையிடவில்லை, என்று பைடன் அறிக்கை வெளியிட்டார்.



ஹன்டர் பைடனின் சிறைத் தண்டனையை அதிபர் பைடன் குறைக்கமாட்டார் என்றும் அவருக்குப் பொது மன்னிப்பு வழங்கமாட்டார் என்றும் வெள்ளை மாளிகை இதற்கு முன்பு தெரிவித்திருந்தது. ஹன்டர் பைடன், போதைப் பித்தராக இருந்தவர் என்றும் அதிலிருந்து அவர் மீண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



காணத் தயாராகுங்கள்!
Association of Past Business Owners of Sri Lanka
Canada
இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் - கனடா
PRESENTS
12 வது ஆண்டில்
வர்த்தக தீபம் 2024
12TH ANNUAL
Winter Get-Together
AWARDS | DINNER | ENTERTAINMENT
தித்திக்கும் தீந்தமிழ் இயல் இசைகளின் சங்கமம்
Mega Tuners
K2B
மெகா ரியூனெர்ஸின் இன்னிசை கானங்கள், ரொறன்டோவின் முன்னணி நடன ஆசிரியர்கள், K2B டான்ஸ் குறூப் மாணவ மாணவிகளின் கண்கவர் நடனங்கள், மற்றும் பல நிகழ்வுகள்.....
DEC 29 2024
SUNDAY 6:00 PM
SCARBOROUGH CONVENTION CENTRE
20 TORHAM PLACE,
SCARBOROUGH, ON. M1X 1E3
வர்த்தகர்கள் மதிப்பளிப்பு
காதுக்கினிய இன்னிசைக் கானங்கள்
கண்ணுக்கினிய நடனங்கள்
நாவிற்கினிய அறுசுவை உணவுகள்
கண்டு களித்து உண்டு மகிழ்வதோடு தாயகத்தில் வாழ்வாதாரமற்ற குழந்தைகளின் மேம்பாட்டிற்கு உதவிட அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.
அன்பளிப்பு $60
SOMA SATCHITHANANDAN
President
647.202.3234
SOTHY SELLA
Secretary
647.409.8966
KATHIRAVEL KARUNANANTHAN
Treasurer
416.970.3182
வல்லவர் தொழில் வர்த்தகத்துறை

# நினைவு கூர்தலில் பல் வகைமை

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



ஈழ விடுதலை இலட்சியத்திற்கான போரில் இன்னுயிர் நீத்த அனைத்து இயக்கங்களைச் சேர்ந்த போராளிகளுக்கும் பொதுமக்களுக்கும் அகவணக்கம் என்று நோர்வையில் வசிக்கும் ஒரு நண்பர் முகநூலில் பதிவிட்டிருந்தார்.

அதற்குப் பலமான எதிர்ப்புக் கிளம்பியது. மாவீரர்களின் நினைவுகளையும் ஏனைய இயக்கங்களின் தியாகிகளின் நினைவுகளையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பக் கூடாது என்று ஒரு தரப்பினர் வாதாடுகிறார்கள்.

மாவீரர் நாள் எனப்படுவது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தியாகிகளை நினைவு நாள். அதேசமயம் விடுதலைப் புலிகள் அல்லாத ஏனைய இயக்கங்கள் தங்களுக்கென்று தியாகிகள் தினங்களை வைத்திருக்கின்றன. எனவே அவரவர் தங்கள் தங்கள் தியாகிகள் தினத்தைக் கொண்டாடுவது தான் சரி. இதில் மாவீரர் நாளுக்குள் ஏனைய இயக்கங்களின் தியாகிகளை நினைவு கூர்வது சாத்தியமில்லை என்பது அவர்களுடைய வாதமாக இருக்கிறது.

தமிழீழ தேசிய துக்க நாள் என்றால் அதில் விடுதலைப் போராட்டத்திற்காக உயிர் நீத்த எல்லா இயக்கங்களின் தியாகிகளையும் நினைவு கூர வேண்டும். எனவே மாவீரர் நாளை தேசிய துக்க தினமாக அனுஷ்டிப்பவர்கள் ஏனைய இயக்கங்களின் தியாகிகளையும் நினைவு கூர்ந்தால் தான் அது முழுமையான தேசிய துக்க நாளாக இருக்க முடியும் என்று முன் கண்ட பதிவைப் போட்ட நோர்வே நண்பர் மீண்டும் வாதிட்டார்.

தேசியவாத அரசியல் என்பது திரளாக்கம் தான். தேசம் என்ற திரளுக்குள் எல்லா இயக்கங்களும் அடங்கும். எல்லா தியாகிகளும் அடங்குவர். எனினும் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட எல்லா இயக்கங்களுக்குமான பொதுவான நினைவு நாள் என்பது இன்றுவரை கண்டு பிடிக்கப்படவில்லை. அப்படி ஒரு பொதுவான நினைவு நாளை அனுஷ்டிப்பதற்கு ஒரு பொதுக் கட்டமைப்பையும் இன்று வரை கண்டு பிடிக்க முடியவில்லை. இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை பொதுவான நினைவு நாள் என்பது, இயக்கங்கள் கடந்து தியாகிகளை நினைவு நினைவு கூர்வது.அது தமிழ்த் தேசிய அரசியலின் ஜனநாயகச் செழிப்பைக் காட்டும்.

தமிழ்த் தேசிய அரசியலில் பொருத்தமான சாத்தியமான பண்புருமாற்றம் நிகழ்ந்தால் தான் நினைவு கூர்தலுக்கான ஒரு பொதுக் கட்டமைப்பு சாத்தியப்படும்.அ ப்படி ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று கிட்டதட்ட 10 ஆண்டுகளுக்கு முன்பு சிந்திக்கப்பட்ட பொழுதும் மேற்படி வாதங்கள் எழுந்தன.

தமிழ் மக்கள் மத்தியில் இப்பொழுது பல்வேறு தியாகிகள் தினங்கள் உண்டு. நாட்டில் விடுதலைப்புலிகள் இயக்கம் இப்பொழுதும் தடை செய்யப்பட்ட ஒரு அமைப்புத தான். எனவே அந்த இயக்கத்தின் உறுப்பினர்களை நினைவு கூர்வது இப்பொழுதும் சட்டரீதியாக ஆபத்தானது. இம்முறையும் என்பிபி அரசாங்கம் தடை செய்யப்பட்ட அமைப்பை நினைவுகூர முடியாது என்று அறிவித்தது. நேற்று முகநூல் பதிவுக்காக ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாகச் செய்திகள் வருகின்றன. இவ்வாறு விடுதலைப்புலிகள் இயக்கத்தவர்களை நினைவு கூர்வது நாட்டில் முழுமையாக அனுமதிக்கப்படாத ஒரு பின்னணியில், அந்த நாட்களை நினைவு கூர வேண்டும் என்ற தாகமும் அதிகமாக இருக்கும்.

ஏனைய ஆயுதப் போராட்ட அமைப்புகளோடு ஒப்பிடுகையில் விடுதலைப்புலிகள் இயக்கம் நீண்ட காலம் அரங்கில் நின்றது என்ற அடிப்படையில், அந்த இயக்கத்தில் தான் அதிகம் தியாகிகள் உண்டு. எனவே அதிகளவு தியாகிகளை நினைவு கூரும் நாளாக மாவீரர் தினமும், அதிகளவு மக்களை நினைவு கூரும் நாளாக மே 18ம் காணப்படுகின்றன. அதிகளவு மக்கள், அதிகளவு தியாகிகள் என்பதனால் அங்கே அதிக அளவு உறவினர்கள் கூடுவார்கள். அதிகளவு ஆர்வலர்கள், செயற்பாட்டாளர்கள் கூடுவார்கள். இதனால் ஒப்பீட்டளவில் ஏனைய தியாகிகளின் நாட்களை விடவும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நாட்களைப் பொறுத்தவரை அங்கு அதிகளவு மக்கள் திரள் இருக்கும். அதிகளவு உணர்ச்சிப் பெருக்கும் இருக்கும். தாயகத்தில் மட்டுமல்ல ஈழத் தமிழர்கள் செறிந்து வாழும் எல்லா இடங்களிலும் நிலைமை அப்படித்தான்





இருக்கும். அவை பெருமளவுக்கு அனைத்துலக அளவில் அனுஷ்டிக்கப்படும் நாட்களாகவும் இருக்கின்றன.

ஆனால் ஏனைய நினைவு நாட்களுக்குத் தடை இல்லை. இப்படிப்பட்டதோர் அரசியல் சூழலில் ஏனைய இயக்கங்களும் உட்பட ஆயுதப் போராட்டத்தில் உயிர்நீத்த அனைத்து தியாகிகளுக்குமான ஒரு பொது நாளைக் கண்டு பிடிப்பது கடந்த 15 ஆண்டுகளாக சவால்கள் மிகுந்த ஒன்றாகவே இருந்து வருகின்றது.

ஒரு இயக்கம் தியாகி என்று கொண்டாடும் ஒருவரை இன்னொரு இயக்கம் அல்லது கட்சி துரோகி என்று கூற முடியும். ஒரு இயக்கம் குற்றவாளி என்று கூறிச் சுட்டுக் கொன்ற ஒருவரை இன்னொரு இயக்கம் போராளி, தியாகி என்று கொண்டாட முடியும். ஒரு இயக்கத்துக்கு தியாகியாக இருப்பவர் இன்னொரு இயக்கத்துக்கு அல்லது அவரால் பாதிக்கப்பட்ட பொதுமகனுக்கு துரோகியாக அல்லது கெட்டவராக இருக்க முடியும். ஒரு இயக்கத்துக்கு நல்லவராக இருப்பவர் அந்த இயக்கத்தால் பாதிக்கப்பட்ட பொதுமகனுக்கு அல்லது வேறொரு இயக்கத்துக்கு அல்லது கட்சிக்கு கெட்டவராக இருப்பார்.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தில் இயக்கங்களுக்கிடையிலான மோதலில் கொல்லப்பட்ட போராளிகள் உண்டு. இயக்கங்களால் கொல்லப்பட்ட பொது மக்கள் உண்டு. என்ன நடந்தது என்று தெரியாமலே தொலைந்து போனவர்கள் உண்டு. இயக்கங்களால் கொல்லப்பட்ட கட்சிப் பிரமுகர்கள் உண்டு. அரச படைகளுடன் சேர்ந்து இயங்கிய பரா மிலிட்டரி குழுக்களால் கொல்லப்பட்ட இயக்கத்தவர்கள் உண்டு. பொதுமக்கள் உண்டு. எனவே இந்த விடயத்தில் யார் யாரைக் கொன்றது? எதற்காகக் கொன்றது? என்று விவாதிக்கப் புறப்பட்டால் தமிழ் மக்கள் இறந்த காலத்திலேயே தேங்கி நிற்க வேண்டியிருக்கும்.

ஆனால் அதற்காக இறந்த காலத்தை அதன் தவறுகளோடு சேர்த்துப் புதைக்கவும் முடியாது. கடந்த காலத்தில் இருந்து கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில், குறிப்பாக கடந்த இரண்டு தசாப்த கால அனுபவங்களின் அடிப்படையில்,புதிய பண்புருமாற்ற அரசியல் ஒன்றை நோக்கி உரையாட வேண்டும். எனவே, போராட்டத்தில் உயிர் நீத்த எல்லாத் தியாகிகளுக்குமான ஒரு பொது நாளைக் கண்டு பிடிப்பதும் அதற்கு வேண்டிய ஒரு பொதுக் கட்டமைப்பை கண்டு பிடிப்பதும் அவற்றின் நடைமுறை அர்த்தத்தில் பண்புரு மாற்றம் தான். தமிழ்த்தேசிய ஐக்கியம்தான். அது தான் தமிழ்த் தேசியத்தின் ஜனநாயக இதயத்தை மேலும் செழிப்பாக்கும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் என்பது மேற்சொன்ன முரண்பாடுகளைக் கடந்து சிந்திக்கப்பட்ட ஒரு பண்புருமாற்றத்தின் விளைவு தான். அது ஏறக்குறைய பத்து ஆண்டுகள் நீடித்தது. பின்னர் சிதைந்து விட்டது.

அரசற்ற தரப்பாகிய தமிழ் மக்கள், தியாகிகளை நினைவு கூரும் விடயத்தில் ஒற்றைப் புள்ளியில் இணைக்கப்பட முடியாதவர்களாகக் காணப்படுகிறார்கள். அந்த ஒற்றைப் புள்ளி இன்றுவரை கண்டு பிடிக்கப்படவே இல்லை. அதற்குரிய பொதுக் கட்டமைப்பையும் இன்றுவரை உருவாக்க முடியவில்லை. கடந்த ஜீலை மாதம் உருவாக்கப்பட்ட ஒரு பொதுக் கட்டமைப்பு கடந்த நாடாளுமன்ற தேர்தலோடு செயலற்றுப் போயிருக்கும் ஒரு பின்னணியில், நினைவு கூர்தலுக்கான ஒரு பொதுக் கட்டமைப்பை பற்றிச் சிந்திப்பது சிலருக்கு அபத்தமாகத் தெரியலாம்.

ஜனாதிபதி தேர்தலுக்காக ஒரு பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அது கட்சிகளுக்கும் மக்கள் அமைப்புக்கும் இடையிலான ஒரு புரிந்துணர்வு உடன்



படிக்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. ஆனால் மக்கள் அமைப்பு நாடாளுமன்ற தேர்தலில் கையாள போவதில்லை என்று அறிவித்தது. அதே சமயம் சங்குச் சின்னத்தை கையாள வேண்டாம் என்றும் கேட்டிருந்தது. ஆனால் கட்சிகள் சங்குச் சின்னத்தை தம் வசப்படுத்தியதன் மூலம் பொதுக் கட்டமைப்பின் புரிந்துணர்வுத் தளம் நொறுங்கிப் போனது.

தமிழரசியலில் ஏற்பட்ட அகப்பிந்திய ஒரு பொதுக் கட்டமைப்பு தொடர்ந்து செயல்பட முடியாத ஒரு பின்னணிக்குள் நினைவு கூர்தலுக்கான ஒரு பொதுக் கூட்டமைபைக் குறித்து யாரோடு யார் உரையாடுவது? தமிழ் மக்கள் இறந்த காலத்தில் இருந்து கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில் தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு பண்புரு மாற்றத்தைக் குறித்த மனந் திறந்த, முற்கற்பிதங்கள் இல்லாத மிகக்குறிப்பாக தேர்தல் அரசியல் நோக்கங்கள் இல்லாத, உரையாடலுக்குப் போக வேண்டும்.

ஆயுதப் போராட்டம் நடந்த எல்லா சமூகங்களிலும் இறந்த காலத்தை கிண்டப் புறப்பட்டால் இரத்தமும் நிணமும் எலும்புக்கூடுகளும் தான் வெளியே வரும். கசப்பும் வெறுப்பும் வன்மமும் பழிவாங்கும் வெறியும் தூண்டப்படும். எல்லாருடைய கைகளிலும் ஏதோ ஒரு விகிதமளவுக்கு இரத்தம் இருக்கும். தமிழ் மக்கள் தங்களுக்குரிய அரசியல் பொருளாதார விடுதலையை அடையும் பொழுது அந்த வெற்றியின் மீது இந்த வெறுப்பை, பழிவாங்கும் உணர்ச்சியை, தியாகி துரோகி வேறுபாடுகளைக் கடப்பது இலகுவாக இருக்கும். ஆனால் இனப்பிரச்சினை தீர்க்கப்படாத ஒரு பின்னணியில், தமிழ்த் தேசிய அரசியலில் உள்நோக்கிய பண்புரு மாற்றத்தைச் செய்வது சவால்கள் மிகுந்ததாகவே இன்று வரை உள்ளது.

அவ்வாறான பண்புரு மாற்றத்தை நோக்கிய உரையாடலின் போக்கில் இப்போதைக்கு இடைக்காலத்துக்கு ஒரே ஒரு தீர்வுதான் உண்டு.

ஒவ்வொரு இயக்கமும் கட்சியும் அதன் தியாகிகளின் நாட்களை அதனதன் வசதிக்கு ஏற்ப அனுஸ்டிக்கட்டும். ஒவ்வொரு தமிழ்க் குடும்பமும் தன் தியாகியின் நாளை விரும்பியபடி அனுஷ்டிக்கட்டும். ஒரு பொதுவான தியாகிகள் தினத்தை கண்டு பிடிக்கும் வரைக்கும் எல்லாத் தரப்புக்களும் எல்லாக் கட்சிகளும் அவரவர் தியாகிகள் தினத்தை அவரவர் அனுஷ்டிக்கட்டும். இந்த விடயத்தில் நினைவு கூர்தலில் பல்வகைமையை ஏற்றுக் கொள்வதே இப்போதைக்குப் பொருத்தமானது.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா
23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை
சங்கீத சங்கமம் 2025
விபரங்களுக்கு:- 416 841 9600

# அதானியும் ஆபத்தும்?

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



புதிய அரசாங்கம் பல்வேறு விடயங்களில் அவசரப்பட்டு தீர்மானம் எடுக்க முடியாத நிலையில் இருக்கின்றது. தாங்கள் ஆட்சிக்கு வந்தால் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை மீளாய்வு செய்வோமென கூறியிருந்தது தேசிய மக்கள் சக்தி. ஆனால் அவ்வாறு செய்ய முடியவில்லை. ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதை தவிர, அதற்கு வேறு வழி இல்லை. அதில், ஏதாவது குழப்பங்களை செய்ய முனைந்தால் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை இழக்கின்ற நிலை ஏற்படும். அதனால் அந்த விடயத்தில் தமது முன் னைய நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவோ அல்லது சிறிது காலம் தாமதிப்பதற்கோ வேண்டிய நிலையில் அர சாங்கம் இருக்கிறது. அதுபோலத்தான், அதானி குழுமத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை மீளாய்வு செய்யும் விவகாரமும் இழுபறிக்குள்ளாகியிருக்கிறது.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் அதானி குழுமத்துடன் ரணில் விக்கிரம சிங்க அரசாங்கம் செய்து கொண்ட உடன்படிக்கைகளை மீளாய்வு செய்வோமென தேர்தல் பிரசாரக் கூட்டங்களின் போது, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும் அவரது கட்சியினரும் எடுத்துக் கூறியிருந்தார்கள். ஆனால், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பதவிக்கு வந்து இரண்டு மாதங்கள் கடந்து விட்டன. புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டு வாரங்கள் ஆகி விட்டன. ஆனாலும் அதானி குழுமத்துடனான உடன்பாடுகள் தொடர்பாக எந்த நடவடிக்கையையும் எடுக்கின்ற நிலையில், அரசாங்கம் இப்போது இல்லை. முன்னைய அரசாங்கம் அதானி குழுமத்துடன் இரண்டு முக்கியமான திட்டங்களில் கையெழுத்திட்டிருந்தது.

அதில் ஒன்று, மன்னார் மற்றும் பூநகரியில் காற்றாலை மின் திட்டங்களை முன்னெடுப்பது. 442 மில்லியன் டொலர்கள் பெறுமதியான இந்தத் திட்டங்களை செயற்படுத்துவதற்கு அதானி கிறீன் எனர்ஜி நிறுவனத்துடன் அரசாங்கம் ஒப்பந்தம் செய்திருந்தது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை மின்சார சபைக்கு விற்பனை செய்வதென இணக்கம் காணப்பட்டது. எனினும், நிர்ணயிக்கப்பட்ட ஒரு அல கிற்கான மின்சார கொள்வனவு கட்டணம், அதிகளவில் இருப்பதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. மின்சார சபை தொழிற் சங்கங்கள், இதில் பாரிய மோசடி இடம் பெற்றிருப்பதாக குற்றச்சாட்டுகளை கூறியிருந்தன. அதே போல மன்னாரில் காற்றாலை மின் திட்டங்களை முன்னெடுப்பதற்கு சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

குறிப்பாக, மன்னார் ஆயர் மற்றும் பொதுமக்கள் இது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனுவையும் தாக்கல் செய்திருக்கின்றனர். மன்னாரிலும் பூநகரியிலும் அதானி கிறீன் நிறுவனம் இந்தத் திட்டங்களை செயற்படுத்துவதாயின், உயர் நீதிமன்றத்தையும் தாண்ட வேண்டும்.

அதேவேளை கூடுதல் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது தொடர்பாக எழுந்துள்ள மோசடி குற்றச்சாட்டுகளையும் சமாளிக்க வேண்டும். தேசிய மக்கள் சக்தி அதானி குழுமத்தின் ஒப்பந்தங்களை மீளாய்வு செய்யப் போவதாக அறிவித்தமைக்கு பிரதான காரணம், இதில் இடம் பெற்றுள்ள மோசடிகள் பற்றிய குற்றச்சாட்டுக்கள் தான்.

அதிக கட்டணத்தை அறவிடுகின்ற வகையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை, தற்போதைய அரசாங்கம் இரத்து செய்யும் எண்ணத்தில் இருந்தது. ஆனால், அதனை அரசாங்கத்தினால் சுலபமாக செய்து விட முடியாது. ஏனென்றால் அதானி குழுமம்







என்பது இந்தியாவின் ஆட்சியில் உள்ள பா.ஜ.க. அரசாங்கத்தில் செல்வாக்கு மிக்கது. இந்தியாவின் மிகப் பெரிய செல்வந்தரான, அதானி, உலகம் முழுவதும் தனது வியாபார திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறார். அதற்கு இந்திய அரசாங்கத்தின் ஆதரவும் ஒத்துழைப்பும் இருப்பது மேலதிகமான ஒரு பலமாக இருந்து வருகிறது. இந்திய அரசாங்கம் தான், அதானி குழுமத்தை வடக்கில் காற்றாலை மின் திட்டங்களில் முதலீடு செய்வதற்கு முக்கிய காரணம். பூகோள அரசியல் போட்டியின் ஒரு கட்டமாகவே இந்தியா இதனை முன்னெடுத்தது. அதானி குழுமத்தின் உடன்பாடுகளை மீளாய்வு செய்யும் முயற்சியை, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் உடனடியாக முன்னெடுக்க முடியாமல் உள்ளதற்கு இந்திய அரசாங்கமே காரணம். ஆட்சிக்கு வருவதற்கு முன்னரே, ஜனாதிபதி அநுரகுமார விடம் இந்தியா தனது நலன்களை பாதிக்கும் விடயங்களை செயற்படுத்தக் கூடாதென தெளிவாக எடுத்துக் கூறியிருந்தது.

அவர் ஆட்சிக்கு வந்த பின்னர், கொழும்புக்கு வந்த இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் இந்தியாவுடன் தொடர்புடைய திட்டங்களை நடைமுறைப்படுத்துவது பற்றி ஆலோசனை நடத்தியிருந்தார். அதுவும் கூட இதனை அடிப்படையாகக் கொண்டது தான். அநுரகுமார திசாநாயக்க திசாநாயக்க ஆட்சிக்கு வந்த பின்னர், இன்னமும் இந்தியாவிற்கு பயணம் மேற்கொள்ளவில்லை. அவரது முதலாவது வெளிநாட்டு பயணம் இந்தியாவுக்கானதாக இருக்குமென அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த பயணம் இந்த மாதம் நடுப் பகுதியில் இடம் பெறலாம் என வெளியுறவு அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்திருந்தார்.


இந்தப் பயணம் சுமூகமானதாக இருக்க வேண்டும். அப்படியானால் சர்ச்சைக்குரிய முடிவுகளை புதிய அரசாங்கம் எடுக் காமல் இருக்க வேண்டும். அநுரகுமார திசாநாயக்கவை பொறுத்தவரையில் பதவிக்கு வந்தவுடன் இந்தி யாவுக்கு பயணம் மேற்கொள்வதை விட இப்போது பயணத்தை மேற்கொள்வது அவருக்கு அதிகம் சாதகமானது. பொதுத் தேர்தல் அவரது பலத்தை அதிகரித்திருக்கிறது. பாராளுமன்றத் தேர்தலில் 159 ஆசனங்களை கைப்பற்றி பெருவாரியான மக்கள் ஆணை பெற்ற ஒரு தலைவராக புது டில்லிக்கு பயணம் மேற் கொள்ளுகின்ற போது அவர் மீது இந்தியாவினால் அழுத்தங்களை பிரயோகிக்க முடியாத நிலை உள்ளது. ஆனால், அதற்காக இந்தியா தனது நலன்களை இழக்கத் தயாராக இருக்காது. இப்படியான சிக்கலான சூழல் ஆரம்பத் திலேயே எழுவதை இரண்டு நாடுகளும் விரும்பப் போவதில்லை.

அதனால் சர்ச்சைக்குரிய விடயங்களுக்குள், இப்போது நுழைவதில்லை என்ற சுயகட்டுப்பாட்டு எல்லைக்குள் நின்று கொள்ளவே இரண்டு நாடுகளும் முற்படுகின்றன. அதனால் தான், அதானி குழுமத்தின் திட்டங்களை மீளாய்வு செய்கின்ற விடயத்தில் அரசாங்கம் அவசரப்படவில்லை. அதானி குழுமத்துடன் தொடர்புடைய இன்னொரு உடன்படிக்கை இருக்கிறது. அது கொழும்பு துறைமுகத்தின் மேற்கு அமைக்கின்ற கொள்கலன் திட்டம். 700 முனையத்தை மில்லியன். டொலர்கள் செலவில் அதானி போர்ட் நிறுவனமும் துறைமுக அபிவிருத்தி அதிகார சபையும் ஜோன் கீல்ஸ் நிறுவனமும் இணைந்து இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தில் முதலீடு செய்வதற்கு அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதி நிறுவனம் முன் வந்தது ஆச்சரியம்.

அமெரிக்க அரசாங்கத்தின் நிறுவனம் ஒன்று இலங்கையில் பெரியளவில் முதலீடு செய்வதற்கு முன் வந்த முதல் சந்தர்ப்பம் இது. இதன் மூலம் இந்திய அமெரிக்க கூட்டு முதலீடு கொழும்பு மேற்கு கொள்கலன் முனையத்தில் உருவாகின்ற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. கொழும்பு துறைமுகத்தில் சீனா தெற்கு கொள்கலன் முனையத்தை முனையத்தை நிர்வகிக்கிறது. இவ்வாறான நிலையில், மேற்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து செயற்படுத்துகின்ற நிலை ஏற்படுவதை சீனா அதிகம் விரும்பவில்லை.

இத்திட்டத்தை தடுக்கக் கூடிய சூழல், இப்போதைய அரசாங்கத்திற்கு இல்லை. ஏனென்றால் இது சர்வதேச சக்திகளுடன் தொடர்புடைய விவகாரம். ஏற்கனவே கொழும்பு கிழக்கு கொள்கலன் முனையத்தை அமைக்கும் திட்டத்தை, இந்தி யாவிற்கு வழங்கிய நல்லாட்சி அரசாங்கத்தின் ஒப்பந்தத்தை, கோட்டாபய ராஜபக்‌ஷ அரசாங்கம் இரத்து செய்தது.

அதற்குப் பின்னர், இந்தியாவுடன் எழுந்த சிக்கல்கள் காரணமாக நிலைமையை சுமுகப்படுத்தும் நோக்கிலேயே கொழும்பு மேற்கு கொள்கலன் முனையத் திட்டத்தை அதானி குழுமத்திற்கு வழங்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது. இலங்கையில் அதானி குழுமத்தின் திட்டங்களை நெருக்கடிக்கு உள்ளாக்கும் தீர்மானத்தை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கொண்டிருந்த போதும், அதனை செயற்படுத்துவதில் சிக்கல் களை எதிர் கொண்டு வந்தது.(22ம் பக்கம் பார்க்க)

# சங்குக் கூட்டணியின் தோல்வி அல்லது DTNA யின் முடிவு

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கதை முடிந்து விட்டது. இல்லாத கூட்டமைப்புக்காக ஏன் அடிபட்டுக் கொள்ள வேணும்' என்று சில மாதங்களுக்கு முன்பு, (DTNA உருவாக்கப்பட்ட போது) ரெலோவின் முக்கியஸ்தர் ஒருவரிடம் கேட்டேன்.

உடனே அவர் குரலை உயர்த்தி ஆவேசப்பட்டார். கூட்டமைப்பு இல்லையென்று யார் உங்களுக்குச் சொன்னது? கூட்டமைப்பை விட்டு தமிழரசுக் கட்சி தான் வெளியேறிச் சென்றதே தவிர, நாம் தொடர்ந்தும் கூட்டமைப்பாகவே இருக்கிறோம்' என்றார்.

அப்படியில்லையே! நீங்கள் னுவுயே (ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்றல்லவா செயற்படுகிறீர்கள்? கூட்டமைப்பு என்ற பேரில் தமிழரசுக் கட்சி தானே உள்ளது?' என்றேன்.

நாம் கூட்டமைப்பிலிருந்து வெளியேறவில்லை. தமிழரசுக் கட்சி தான் வெளியேறிச் சென்று, 2022 இல் தனியாக உள்ளூராட்சித் தேர்தலில் வேட்பு மனுத் தாக்கல் செய்தது. நாங்கள் கூட்டமைப்பாகவே எப்போதும் இருக்கிறோம்' என்றார் அவர்.

கிளிநொச்சியில் சிறிதரனின் பணிமனையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயர்ப்பலகையே உள்ளது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்று உங்களை நீங்கள் சொல்லிக் கொண்டாலும் நீங்கள் இப்போது ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (DTNA) என்றுதானே உங்களை அடையாளப் படுத்த வேண்டியுள்ளது... சரி, ஒரு வாதத்துக்கு நீங்கள் சொல்வதை ஏற்றுக் கொண்டாலும் தமிழரசுக் கட்சியை விட நீங்கள் பலவீனமாகத் தானே இருக்கிறீர்கள்...? என்று கேட்டேன்

அவருக்குக் கோபம் உச்சிக்கு ஏறி விட்டது. தன்னைச் சீண்டுகிறேன் என்று நினைத்திருப்பார் போலும்.

தமிழரசுக் கட்சிக்கு மக்கள் ஆதரவு கிடையாது. சுமந்திரன் எல்லாவற்றையும் நாசமாக்கி விட்டார். நாங்கள் பலமான கூட்டணியை அமைத்திருக்கிறோம். எதிர்காலத்தில் எங்களோடு (DTNA யுடன்) இன்னும் பல கட்சிகளும் அணிகளும் சேரும். இருந்து பாருங்கள். தமிழரசுக் கட்சியே வந்து சேரும். விரைவில் தமிழரசுக் கட்சிக்கு அழைப்பு விடுக்கப் போகிறோம். நிச்சயமாகப் புதிய வரலாறு அப்படி எழுதப்படும் என்றார் அந்தப் பிரமுகர்.

இறுதியாக இன்னொன்றையும் சொன்னார், உங்களுடைய ஊகங்களும் விருப்பங்களும் அரசியல் முடிவுகள் ஆகாது. அரசியலை விளங்கிக் கொள்ள வேணும் என்றால், மக்களின் மனநிலையை அறிய வேணும். எங்களுக்கு நாற்பது ஆண்டு கால வரலாறு உண்டு. இப்ப கூட மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள் மக்கள் ஆதரவில்லாமல் இதெல்லாம் எப்படிச் சாத்தியமாகியிருக்கும்? ரெலோ ஒன்றும் சில்லறைக் கட்சியோ சிறிய இயக்கமோ இல்லை... நீங்கள் கொஞ்சம் அரசியல் படிக்க வேணும் என ஒரு பத்து நிமிடம் பொழிந்து தள்ளினார்.

கதையைத் தொடங்கியது நான் என்பதால் வேறு வழியில்லாமல் எல்லாவற்றையும் கேட்க வேண்டியிருந்தது. இப்படித்தானிருக்கிறது இவர்களுடனான அரசியல் புரிதலும் உரையாடலும் என அதில் சில விடயங்களைப் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் இருந்தது. கூடவே கள நிலைமையை அவர்களுடைய அரசியலின் போக்கை, அரசியற் சூழலை அவர் விளங்கிக் கொண்ட விதத்தையெல்லாம் தெரிந்து கொண்டேன்.

அதற்கு மேல் எதையும் நான் பேசவில்லை. அதற்கு அவசியமுமில்லை. ஏனையவற்றை வரலாறு பார்த்துக் கொள்ளும் அல்லவா. வரலாறு என்பது வேறொன்றுமல்ல, காலமும் மக்களும் தான். ஆக என்னுடைய பொறுமைக்கும் செவி கொடுத்துக் கேட்டதற்கும் பயன் கிடைத்தது.

அந்த ரெலோக்காரர் மட்டுமல்ல, இதே போலத்த ான் ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆட்களும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஜனநாயக நடைமுறைகளுக்கு இடமளிக்காமல், கூட்டமைப்பைச் சிதைத்தது மட்டுமல்ல, அதை விட்டு வெளியேறியதும் தமிழரசுக் கட்சி தான். விரைவில் அது பாடம் படிக்கும். அதற்குப் பிறகு அதனுடைய திமிரெல்லாம் வடிந்தொடுங்க, பழைய படி கூட்டமைப்புக்குள் வந்து சேரும். அப்போது அதனுடைய பல்லைப் பிடுங்கி விடுவோம்.. குறிப்பாகச் சுமந்திரனை அரசியற் களத்திலிருந்து அகற்றி விடுவோம். எல்லாவற்றையும் விட மொத்தத்தில் தமிழரசுக் கட்சியை இல்லாமற் செய்வதே தங்களுடைய முதல் வேலை' என்றெல்லாம் ஏராளம் கனவுத் திட்டங்களை.

இதையெல்லாம் கேட்கும் போது சிரிப்புத்தான் வந்தது. சிரிப்பு வந்தால் சிரிக்கத்தானே வேணும். சிரித்தேன். இதை நண்பர்களுடன் பகிர்ந்து எல்லோருமாகச் சிரித்தோம்.

அப்பொழுது ஒரு நண்பர் சொன்னார், 'காரைநகர் கடற்படைத் தளத்தை நிர்மூலம் செய்த வரலாற்றுச் சாதனையாளர்கள், நிச்சயமாகத் தமிழரசுக் கட்சியையும் உடைத்து நொருக்கி விட்டுத் தான் அடுத்த வேலையைப் பார்ப்பார்கள். அதற்குப் பிறகுதான் ஒரு பிளேன் ரீயைக் கூடக் குடிப்பார்கள். அப்படியொரு வீர சபதத்தை எடுத்தவர்கள், அதை நிறைவேற்றும் வரையில் ஓய்ந்திருக்க மாட்டார்களல்லவா!... என்று.



அன்று முழுவதும் சிரிப்பாகவே இருந்தது. இதனை மையப்படுத்தியே 'ஒப்பிரேஷன் சுமந்திரன்' புலிகளும் எலிகளும் EPRLF: கற்றுக் கொள்ளவும் பெற்றுக் கொள்ளவும்' 'அரசியலில் இதெல்லாம் சகஜமில்லை', 'தமிழரசுக் கட்சியைப் பலவீனப்படுத்தும் தமிழ்ப் பொது வேட்பாளர்' 'தமிழ்ப்பொது வேட்பாளரும் அரசியற் தற்கொலையும்', 'தெற்கின் அரசியற் களமும் வடக்கின் அரசியல் முகமும் தமிழ்த் தேசியம் பலப்படுத்தப்படுகிறதா? பலவீனப்படுத்தப்படுகிறதா?',

'எதிர்ப்பு அரசியலின் காலம் முடிந்தது', 'காலம் கோருவது கருத்துருவாக்கிகளை மட்டுமல்ல', 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழரசுக் கட்சி ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு: ஒற்றுமையும் வேறுபாடுகளும்', 'விதியே விதியே தமிழ்ச் சாதியை என்னசெய்ய நினைத்தாய்? போன்ற பல கட்டுரைகளை அண்மையில் தொடர்ந்து எழுதினேன்.

இந்தக் கட்டுரைகளை நான், ரெலோ, ஈ.பி.ஆர்.எல், எவ், புளொட் தரப்பினருக்கும் சுமந்திரன், மனோகணேசன், சந்திரகுமார் போன்றோருக்கும் அனுப்பி வைப்பதுண்டு. பலரும் படித்து விட்டு அமைதியாகி இருந்து கொள்வார்கள். பதிலோ மறுப்போ விமர்சனங்களோ வராது. சிலர் விவாதிப்பர். சிலர் திட்டுவார்கள். ஒரு தடவை ஈ.பி.ஆர்.எல்.எவ்வைச் சேர்ந்த தோழர் ஒருவர் சொன்னார் — 'உங்களுடைய விருப்பங்களை அரசியல் முடிவுகளாகக் காட்டக் கூடாது. நங்கள் மக்களோடு தான் நிற்கிறோம். மக்கள் என்ன நினைக்கிறார்கள்? எப்படிச் சிந்திக்கிறார்கள்? என்பதெல்லாம் எங்களுக்கும் விளங்கும்...' என.

இன்னொருவர் சொன்னார், 'சில ஊடங்களின் விருப்பத்துக்கும் சில வாசகர்களைக் குஸிப்படுத்தவும் தான் எழுதுகிறீங்கள். இதெல்லாம் நீண்ட காலத்துக்குத் தாக்குப் பிடிக்காது. DTNA யின் எழுச்சிக்குப் பிறகு பாருங்கள். மாற்றம் எப்படியிருக்குமென்று' என.

இது தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்தப்பட்ட சூழலில் இன்னும் மோசமாகியது. தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவதில் என்னுடைய உடன்பாடின்மையைக் குறிப்பிட்டு, அதனுடைய சாதக பாதக நிலையை விளக்கி எழுதினேன். குறிப்பாக 'தமிழ்ப்பொது வேட்பாளர்' ஒரு மோசமான நிலைப்பாடு. அதனால் தமிழ் மக்களைத் தேசமாகத் திரட்ட முடியாது. அதையும் விட தமிழ்த் தேசிய அரசியற் சக்திகளை ஒன்றிணைக்கவே முடியாது என்று குறிப்பிட்டிருந்தேன். அதை மறுத்த DTNA அணியினர் ஏறக்குறைய என்னையும் துரோகிப் பட்டியலில் சேர்த்தனர். இதுதான் உச்ச வேடிக்கையாகும்.

ஒரு காலம் அவர்களையே விடுதலைப் புலிகளும் அவர்களை ஆதரித்து நின்ற பெருந்திரள் தமிழ்ச்சமூகமும் துரோகிகளாகச் சித்தரித்ததுண்டு. இது தவறென காலம் முழுவதும் மூக்குச் சிந்திக் கொண்டிருந்தோரே மாற்றுக் கருத்துள்ளோரைத் துரோகி என்று கூறுவதாக இருந்தால்....?

இந்தச் சூழலில் நம்முடைய உரையாடல்கள் குறைந்தன. ஆனாலும் தொடர்பை நாம் முறித்துக் கொண்டதில்லை. ஒரு சிலர் 'தொடர்ந்து நாம் உரையாட வேண்டாம். ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு பேசலாம்' என்று நிறுத்திக் கொண்டனர். சங்குச் சின்னம் இரண்டரை லட்சம் வாக்குகளை எடுத்ததும் சற்று உசாரடைந்து மீண்டும் பேசத் தொடங்கினார்கள். அந்த உசாரோடு DTNA அணி பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டது.

ஆனால், தமிழ்ப்பொது வேட்பாளருக்கும் அப்போதைய சங்குக்கும் ஆதரவளித்த தமிழ் மக்கள் பொதுச் சபை தன்னுடைய ஆதரவை விலக்கிக் கொண்டது. இருந்தாலும் பாராளுமன்றத் தேர்தலில் சங்கு அமோக வெற்றியைப் பெறும் என்று னுவுயே அணி முழுதாவே நம்பியது. அந்த நம்பிக்கையைப் பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் அடித்துக் கொண்டு போய் விட்டன.

இப்பொழுது இந்தத் தரப்பில் கனத்த அமைதியே நிலவுகிறது. தேர்தலில் வெற்றி தோல்வி ஏற்படுவது வழமை. ஆனால் இப்பொழுது நடந்தது அதுவல்ல. இதொரு அரசியற் தற்கொலை (Political suicide) ஆகும். அதாவது தமிழ்த் தரப்பினர் பொதுவாக மேற்கொண்டு வந்த பிராந்திய அரசியல் (தமிழ்த்தேசியவாத அரசியல்) பெரும்பாலும் முடிவுக்கு வந்துள்ளது. மீளவும் சிங்களத் தரப்பு அதற்கு உயிரூட்டவில்லை என்றால் பிராந்திய அரசியல் தமிழ்த்தேசியவாத அரசியல் தொடர்ந்தும் உயிர்வாழ முடியாது. ஏற்கனவே போருக்குப் பிந்திய சூழலைப் புரிந்து கொண்டு, அதற்கான அரசியலை மேற் கொள்ளாத காரணத்தினால் தமிழ் அரசியற் சக்திகளை ஓரங்கட்டியுள்ளனர் மக்கள். இதில் மோசமாகப் பாதிக்கப்பட்டது DTNA தான். அதாவது, ஆயுதமேந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட சக்திகளே. ஆனால், இந்தத் தேர்தலில் ஆயுதமேந்திய தமிழ் இயக்கங்களை நிராகரித்த மக்கள், ஆயுதமேந்திய போராட்டத்தில் ஈடுபட்ட ஜே.வி.பியை ஏற்றுள்ளனர். இந்த முரணை வாசகர்கள் சற்று ஊன்றிக் கவனிக்க வேண்டும். காரணம், ஜே.வி.பி கடந்த காலப் படிப்பினைகளுக்கூடாக தேசிய மக்கள் சக்தியாகப் பரிணாமம் அடைந்திருக்கிறது.

தேசிய மக்கள் சக்தியின் புதிய பரிணாமத்தையும் பரிமாணத்தையும் மக்கள் அங்கீகரித்துள்ளனர். வளர்ச்சியின்றித் தேங்கிப் போன தமிழ் இயக்கங்களை மக்கள் நிராகரித்துள்ளனர். இதைப் புரிந்து கொண்ட தரப்பு தோழர் சுகு ஸ்ரீதரனும் அவருடைய தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியும் தான். ஆனால், சுகு ஸ்ரீதரனையும் தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியையும் DTNA பெரிதாகக் கணக்கிற் கொள்வதில்லை. DTNA கணக்கிற் கொள்ளாமல் விட்டாலும் வரலாறு தன்னுடைய கணக்கிற் கொண்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் வாசகர்களுக்கும் குறித்த ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல். எவ் வினருக்கும் ஒன்றை நினைவுட்ட வேண்டும். தற்போதிருப்பது பத்மநாபாவின் ஈ.பி.ஆர்.எல்.எவ்வா? அல்லது பிரபாகரனின் ஈ.பி.ஆர்.எல்.எவ்வா? என்று கேட்டு எழுதியிருந்தேன். இதே கேள்வி ரெலோ, புளொட் மீதும் எழுப்பப்பட்டது.

ஏனென்றால் இந்த இயக்கங்கள் எல்லாம் தம்முடைய பெயரில் மட்டும் தான் வேறுபாடுகளைக் கொண்டுள்ளனவே தவிர, அரசியலில் அப்படியல்ல. விடுதலைப்புலிகளுக்குப் பின், அதன் நீட்சியாகக் காட்டப்படும் தேசியவாத அரசியலையே (Pseudo-nationalist politics) பின்பற்றுகின்றன.

இன்னொரு கேள்வி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் என்ன வேறுபாடு? அல்லது தமிழரசுக் கட்சிக்கும் DTNA க்கும் இடையில் என்ன வித்தியாசம்? எனவும் கேட்கப் பட்து.

இதற்கான விடைகள் எல்லாம் இப்போது (பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளோடு) தெளிவாகக் கிடைத்து விட்டன. ஆனாலும் இந்தச் சக்திகள் அதை ஏற்றுக் கொள்ளவோ புரிந்து

(20ம் பக்கம் பார்க்க)

# Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 647 700 7208 | +1 416 477 6854
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2

# CHRISTMAS SALE

## COMING SOON

உங்கள் வாழ்க்கைக்கு பொருத்தமான
வாழ்க்கைத் துணையை இன்றே தேடிக்கொள்ள
*Friends Matrimony* இல் பதிவு செய்யுங்கள்...



## மணமகள்



## மணமகன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ID08120764 (F) | ID08120762 (F) | ID08120760 (F) | ID08120767 (M) | ID08120766 (M) | ID08120765 (M) |
| 31yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Manager HR , Sri Lanka | 43yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Canada | 29yrs, 5'3" , Single , Visaakam , 6 Sevai , Bachelors.. , Admin Data.. , Canada | 33yrs, 6' , Single , Not Specified , N/A Sevai , Diploma , CUSTOMER Service.. , Sri Lanka | 34yrs, 5'4" , Single , Pooraadam ,N/A Sevai , Diploma , Work , Canada | 51yrs, 5'6" , Divorced , Aayilyam , N/A Sevai , Postgraduate.. , Book keeping.. , Canada |
| ID08120054 (F) | ID08120320 (F) | ID08120732 (F) | ID08120767 (M) | ID08120766 (M) | ID08120765 (M) |
| 34yrs, 5'5" , Divorced , Rohini , 4 Sevai , Diploma , Farmacy Technician , Canada | 29yrs, 5'4" , Single , Kettai , 4 Sevai , Bachelors.. , Finance Professional , Canada | 30yrs, 5'6" , Single , Chithirai , 7 Sevai , Masters Degree , Doctor , Sri Lanka | 33yrs, 6' , Single , Not Specified , N/A Sevai , Diploma , CUSTOMER Service.. , Sri Lanka | 34yrs, 5'4" , Single , Pooraadam ,N/A Sevai , Diploma , Work , Canada | 51yrs, 5'6" , Divorced , Aayilyam , N/A Sevai , Postgraduate.. , Book keeping.. , Canada |
| ID08120006 (F) | ID08121004 (F) | ID08121002 (F) | ID08121010 (M) | ID08120997 (M) | ID08120995 (M) |
| 24yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Accountant , United States | 32yrs, 5'2" , Single , Mrigasheersham , 6 Sevai , Diploma , No work , Sri Lanka | 32yrs, 5'3" , Single , Aswini , 12 Sevai , Bachelors.. , Process Associate , Sri Lanka | 34yrs, 5'8" , Single , Not Specified , N/A Sevai , High School , Renovation , Canada | 46yrs, 5'6" , Single , Kettai , N/A Sevai , Diploma , Sales manger , Sri Lanka | 28yrs, 5'11" , Single , Chithirai , N/A Sevai , Bachelors.. , Accounting , Canada |
| ID08120991 (F) | ID08120453 (F) | ID08120973 (F) | ID08120964 (M) | ID08120993 (M) | ID08120986 (M) |
| 37yrs, 5'2" , Single , Thiruvaathirai , 3 Sevai , Diploma , Banker , Canada | 31yrs, 5'4" , Single , Poorattathi , 11 Sevai , Masters Degree , Senior Manager , Canada | 28yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Tba , United Kingdom | 42yrs, 5'7" , Single , Aswini , N/A Sevai , High School , Technical.. , Sri Lanka | 39yrs, 5'11" , Single , Poosam , 2 Sevai , High School , Truck Mechanic , Canada | 39yrs, 5'11" , Single , Chathayam/sadayam , N/A Sevai , Diploma , Analyst Business.. , Canada |
| ID08120391 (F) | ID08120939 (F) | ID08120928 (F) | ID08120976 (M) | ID08120969 (M) | ID08120974 (M) |
| 28yrs, 5'2" , Single , Thiruvonam , 3 Sevai , Bachelors.. , Service Support.. , Canada | 25yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Tba , Canada | 26yrs, 5'3" , Single , Visaakam , 8 Sevai , Bachelors.. , Tba , Sri Lanka | 31yrs, 5'11" , Single , Bharani , N/A Sevai , Diploma , Business , Sri Lanka | 30yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , BSC Civil.. , Sri Lanka | 30yrs, 5'5" , Single , Poorattathi , 12 Sevai , Postgraduate.. , Instructor , Sri Lanka |
| ID08120927 (F) | ID08120921 (F) | ID08120889 (F) | ID08120969 (M) | ID08120957 (M) | ID08120938 (M) |
| 34yrs, 5'3" , Single , Kettai , 9 Sevai , Bachelors.. , Product Manager , Canada | 27yrs, 5'2" , Single , Uthiraadam , N/A Sevai , Bachelors.. , Teacher , Canada | 30yrs, 5'2" , Single , Pooraadam , 7 Sevai , Bachelors.. , Dr Co-ordinator , Canada | 30yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , BSC Civil.. , Sri Lanka | 31yrs, 5'6" , Single , Chithirai , 1 Sevai , Postgraduate.. , Retail Manager , Canada | 46yrs, 5'4" , Single , Aswini , 6 Sevai , Bachelors.. , IT System.. , India |

# தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்?

இலங்கை தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம் என்ன? அண்மைய பாராளுமன்ற தேர்தலை தொடர்ந்து எழுகின்ற இந்த கேள்வியை வெறுமனே தமிழ்க் கட்சிகளின் எதிர்கால தேர்தல் வாய்ப்புக்களுடன் இணைத்து நோக்கக் கூடாது. இது தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகள் நிறைவேறக்கூடிய வாய்ப்புக்கள் பற்றிய எதிர்பார்ப்புகளுடனும் ஏக்கங்களுடனும் சம்பந்தப்பட்ட கேள்வியாகும்.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான கடந்த பதினைந்து வருடங்களுக்கும் அதிகமான காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்து வந்த தமிழ் தேசியவாத அரசியல் கட்சிகள் இந்தத் தடவை பாராளுமன்ற தேர்தலில் பெரிய தோல்வியைச் சந்தித்தன. தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கான கடந்த காலப் போராட்டங்கள் பயன்தராமல் போனதற்கான காரணங்கள் குறித்து சுய பரிசோதனையைச் செய்து பார்ப்பதில் ஒருபோதும் மானசீகமான அக்கறை காட்டாத இந்த கட்சிகள் இந்த வரலாற்று தோல்விக்கு பிறகாவது தங்களது இதுவரையான அரசியல் பாதையை திரும்பிப்பார்த்து திருந்திக் கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது கூட கஷ்டமானதாகவே தெரிகிறது.



தமிழ் தேசியவாதக் கட்சிகள் பிளவுபட்டு பல்வேறு பிரிவுகளாக தேர்தலில் போட்டியிட்டதன் விளைவாக வடக்கு, கிழக்கு தமிழர்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இந்த தடவை முன்னரை விடவும் மோசமாக பலவீனப்பட்டிருக்கிறது. முன்கூட்டியே விடுக்கப்பட்ட எச்சரிக்கைகளை தமிழ் அரசியல்வாதிகள் பொருட்படுத்தவில்லை.

கடந்த பாராளுமன்றத்தில் ஆறு ஆசனங்களை கொண்டிருந்த இலங்கைத் தமிழரசு கட்சி இந்த தடவை எட்டு ஆசனங்களை பெற்றதை அதன் மக்கள் செல்வாக்கில் ஏற்பட்ட ஒரு அதிகரிப்பாக நினைத்து திருப்திப்பட முடியாது. இலங்கையின் தேர்தல் வரலாற்றில் சிங்களவர்களின் ஆதிக்கத்திலான தேசியக் கட்சி ஒன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் முதற் தடவையாக கூடுதலான ஆசனங்களை கைப்பற்றியிருப்பதன் பின்னணியிலேயே தமிழரசு கட்சி அதன் தேர்தல் செயற்பாட்டை நோக்க வேண்டும்.

தேசிய இனப்பிரச்சினை உட்பட தமிழ் மக்களை அழுத்தும் முக்கியமான பிரச்சினைகளுக்கு உருப்படியான தீர்வு குறித்து எந்த வாக்குறுதியையும் வழங்காமலேயே ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி தமிழ்ப் பகுதிகளில் பெருவெற்றி பெற்றிருக்கிறது.

இந்த வெற்றி குறித்து யானை பார்த்த குருடர்களைப் போன்று அரசியல்வாதிகளும் அவதானிகளும் பலவிதமான கருத்துக்களை கூறுகிறார்கள். தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் தங்களுக்கு தமிழ் மக்கள் வழங்கிய ஆதரவை தமிழ் இனவாத அரசியலின் நிராகரிப்பாக வியாக்கியானம் செய்கிறார்கள். தென்னிலங்கையில் சிங்கள பௌத்த கடும்போக்கு தேசியவாதிகள் என்று அடையாளம் காணப்பட்ட அரசியல்வாதிகள் இந்த தடவை தேர்தலில் கண்ட தோல்வியை சிங்கள இனவாதத்தின் தோல்வியாக காண்பிக்கவும் அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

அதேவேளை, சில தமிழ் அரசியல்வாதிகள் வடக்கு, கிழக்கில் தமிழ்க் கட்சிகள் எல்லாவற்றுக்கும் கிடைத்த வாக்குகளை கூட்டிப்பார்த்து அதை தேசிய மக்கள் சக்தி பெற்ற வாக்குகளுடன் ஒப்பிட்டு தமிழ்த் தேசியவாதத்தை தமிழ் மக்கள் நிராகரிக்கவில்லை என்று ஒரு வாதத்தை முன்வைக்கிறார்கள். தேர்தல் என்று வரும் போது கிடைக்கின்ற ஆசனங்களே முக்கியமானவை. தேர்தலில் தோல்வியைச் சந்தித்த கட்சிகளின் வாக்குகளின் மொத்த தொகையையும் சேர்த்து சான்றாகக் காட்டி தமிழ்த் தேசியவாத உணர்வு மக்கள் மத்தியில் துடிப்புடன் இருக்கிறது என்று நிறுவ முற்படுவதில் அர்த்தமில்லை.

தென்னிலங்கையில் குறிப்பிட்ட சில அரசியல்வாதிகளின் தேர்தல் தோல்வியை எவ்வாறு சிங்கள பௌத்த தேசியவாதத்தின் தோல்வி என்று கூற முடியாதோ அதே போன்றே வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியவாத கட்சிகளுக்கு கிடைத்த தோல்வியையும் தமிழ்த் தேசியவாதத்தின் தோல்வி என்று கூறமுடியாது.

இலங்கையில் இனவாத அரசியலும் மதத் தீவிரவாதமும் மீண்டும் தலையெடுக்க ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை என்று புதிய பாராளுமன்றத்தில் தனது கொள்கை விளக்கவுரையில் சூளுரைத்திருக்கும் ஜனாதிபதி திசாநாயக்க அதே இனவாதமும் மதவாதமும் தோற்றுவித்த நீண்ட காலப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காணாமல் ஒருபோதும் அந்த இலட்சியத்தை அடைய முடியாது.

தேசிய இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடுகளை ஏற்றுக் கொண்டுதான் தமிழ் மக்கள் அவர்களுக்கு பெருமளவில் வாக்களித்தார்கள் என்று ஒருபோதும் கூறமுடியாது. அதே போன்றே தமிழ்க்கட்சிகள் கண்ட தோல்வியை தமிழ் மக்கள் தங்களது நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகள் தொடர்பிலான நீண்டகால அடிப்படைக் கோரிக்கைகளை அலட்சியம் செய்து விட்டு தேசிய அரசியல் நீரோட்டத்தில் இணைவதற்கு அவர்கள் தயாராகி விட்டதன் அறிகுறியாகவும் வியாக்கியானம் செய்யமுடியாது. வடக்கே பருத்தித்துறை தொடக்கம் தெற்கே தேவேந்திரமுனை வரை தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வாக்களித்திருக்கும் முறையை நோக்கும் போது சிங்கள மக்களைப் போன்றே தமிழ் மக்களும் பாரம்பரியமான அரசியல் கட்சிகளை நிராகரிப்பற்கு சந்தர்ப்பம் ஒன்றுக்காக காத்திருந்தார்கள் என்பதை புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

தங்களை இதுகாலவரை பிரதிநிதித்துவப்படுத்தி வந்த தமிழ் தேசியவாத கட்சிகளின் செயற்பாடுகள் மீதான வெறுப்பின் காரணமாகவே தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தியின் பக்கம் திரும்ப நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பிறகு தங்களது உரிமைப் போராட்டத்தை சமகால உள்நாட்டு மற்றும் சர்வதேச நிலைவரங்களுக்கு பொருத்தமான முறையில் நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறைகளுடன் அடுத்த கட்டத்துக்கு நகர்த்த முடியாமல் இருந்த தமிழ்க் கட்சிகளுக்கு மாற்றாக உருப்படியான அரசியல் இயக்கம் ஒன்று தங்கள் மத்தியில் இல்லாத நிலையில் தமிழ் மக்களுக்கு வேறு வழி இருக்கவில்லை.

அதே வேளை, நிலைவரங்கள் வேண்டி நிற்பதற்கு ஏற்ற முறையில் சிந்தித்துச் செயற்படாமல் வெறுமனே உணர்ச்சியமான தமிழ்த் தேசியவாதச் சுலோகங்களை வாய்ப்பாடு போன்று உச்சரித்துக் கொண்டும் அவ்வப்போது நினைவேந்தல்களை செய்து கொண்டும் திரியும் தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் பல்வேறுபட்ட வாழ்வாதாரப் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தாமல் இருந்ததும் அவர்கள் மீதான வெறுப்புக்கு இன்னொரு காரணம்.

இரண்டரை வருடங்களுக்கு முன்னர் முன்னென்றும் இல்லாத வகையிலான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தென்னிலங்கையில் மக்கள் கிளர்ச்சி மூண்டபோது தமிழ் மக்களுக்கு அது ஒரு பிரச்சினை அல்ல என்று கூறிய தமிழ் அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள். புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள தனவந்தர்களை இலங்கையில் சுதந்திரமாக முதலீடு செய்ய அனுமதித்தால் பொருளாதார பிரச்சினைக்கு இடமிருக்காது என்று பாராளுமன்றத்தில் அரசியல்வாதிகள் பேசியதையும் காணக்கூடியதாக இருந்தது.

தாங்கள் இதுவரை காலமும் பிரதிநிதித்துவம் செய்த மக்கள் மத்தியில் அண்மைக் காலமாக ஏற்பட்டு வந்த சிந்தனை மாற்றத்தை தமிழ் அரசியல்வாதிகளினால் புரிந்து கொள்ள முடியவில்லை. பாராளுமன்ற தேர்தலில் தாங்கள் தேசிய மக்கள் சக்திக்கே வாக்களிக்கப் போவதாக தமிழ் அரசியல்வாதிகளிடம் நேரடியாகவே வடக்கில் பல இடங்களில் மக்கள் கூறினார்கள். ஆனால், வழமை போன்று தமிழ்க் கட்சிகளுக்கே அவர்கள் பெருமளவில் வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கையில் அரசியல்வாதிகள் மெத்தனமாக இருந்து விட்டார்கள்.

ஆரம்பக்கட்டப் பிரசாரங்களில் தமிழ்க் கட்சிகள் தங்களுக்கு நேரவிருக்கின்ற ஆபத்தை புரிந்து கொள்ளவில்லை. இறுதிக் கட்டங்களிலேயே அவை நிலைவரத்தை உணர்ந்து தேசிய மக்கள் சக்தி மீது கடுமையான தாக்குதல்களை தொடுத்தன.

அதற்கு முதல் யாழ்ப்பாணத்தில் மற்றைய கட்சிகள் மாத்திரமல்ல இலங்கை தமிழரசு கட்சிக்குள் இருந்தவர்களும் தமிழ்த் தேசியவாதத்தைக் காப்பாற்றுவதற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனை தோற்கடிப்பதிலேயே தீவிர அக்கறை காட்டினார்கள்.

தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவ கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) கடந்த காலத்தில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிராக கடைப் பிடித்த கொள்கைகளையும் முன்னெடுத்த செயற்பாடுகளையும் தமிழ் அரசியல்வாதிகள் பிரசாரங்களின் போது திரும்பத் திரும்ப சுட்டிக் காட்டிய போதிலும் கூட, மக்களை தங்கள் பக்கம் பெருமளவில் அவர்களால் திருப்ப முடியாமற் போய்விட்டது.


கட்டுரையாளர்:-
மூத்த ஊடகவியலாளர்
- வீ.தனபாலசிங்கம் -

தாங்கள் பல்வேறு அணிகளாகப் பிரிந்து நின்று தேர்தலில் போட்டியிட்டதன் காரணத்தினால் மாத்திரமே தமிழ் மக்கள் தங்கள் மீது ஆத்திரமடைந்து தேசிய மக்கள் சக்தியை ஆதரித்தார்கள் என்று தமிழ் அரசியல்வாதிகள் நினைக்கிறார்கள் போன்று தெரிகிறது. கடந்த சில நாட்களாக அவர்கள் வெளியிட்டு வரும் கருத்துக்களை நோக்கும் போது மீண்டும் ஐக்கியப்பட்டு செயற்பட முன்வந்தால் மக்கள் முன்னரைப் போன்று தங்களுக்கு அமோக ஆதரவை தருவார்கள் என்று அவர்கள் நம்புகிறார்கள் போலும்.

பத்து வருடங்களுக்கு முன்னர் தமிழ்ச் சிவில் சமூக அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் சேர்ந்து அமைத்த தமிழ் மக்கள் பேரவை முன்வைத்த அரசியல் தீர்வு யோசனைகளின் அடிப்படையில் மற்றைய தமிழ்க்கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதற்கு தயாராக இருப்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சில தினங்களுக்கு முன்னர் அறிவித்தார். ஆனால், தமிழ்க் கட்சிகளிடமிருந்தது இதுவரையில் பதில் வரவில்லை.

அதேபோன்றே தமிழரசு கட்சியின் பாராளுமன்ற குழுவின் தலைவரான சிவஞானம் சிறீதரனும் மீண்டும் ஐக்கியப்பட்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பாக செயற்படுவதற்கு தயாராக இருப்பதாக அறிவித்தார். அதற்கும் பதில் வரவில்லை. வேறு அரசியல்வாதிகளும் மீண்டும் ஐக்கியப்பட வேண்டியதன் அவசியம் குறித்து பேசியிருக்கிறார்கள்.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பலம் பொருந்திய அரசியல் இயக்கமாக தமிழ் தேசிய கூட்டமைப்பை கட்டியெழுப்புவதற்கு இருந்த வாய்ப்பை தவற விட்டதன் மூலம் தமிழ் அரசியல் சமுதாயத்தின் இன்றைய சீரழிவுக்கு பொறுப்பான அதே தலைவர்கள் மீண்டும் ஒன்றுபடுவதற்கு முன் வந்தால் கூட தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்புவது சாத்தியமாகுமோ தெரியவில்லை.

தேர்தல் தோல்விக்கு பிறகு கட்சிகளை ஒன்றிணைப்பதற்கு மேற்கொள்ளப்படக் கூடிய எந்த முயற்சியையும் தமிழ்மக்கள் நிச்சயமாக சந்தேகத்துடனேயே நோக்குவார்கள். மீண்டும் ஐக்கியத்தில் (20ம் பக்கம் பார்க்க)

# சங்குக் கூட்டணியின் தோல்வி அல்லது DTNA யின் முடிவு

(கொள்ளவோ தயாரில்லை. மீண்டும் ஒற்றுமை, ஐக்கியம் என்று பேச (புலம்ப)த் தொடங்கியுள்ளன. தமது பின்னடைவுக்கும் தோல்விக்கும் காரணம், தாம் பிரிந்து நின்றதேயாகும் என்றே இவை நம்புகின்றன. இதற்கு ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ளலாம். எலிகள் பல சேர்ந்தாலும் வளையைத் தோண்ட முடியாது. இதற்குச் சரியான பரிகாரமென்றால், அரசியல் உள்ளடக்கத்தில் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். அதாவது, மாற்று அரசியலைக் கொள்ள வேண்டும்.

உள்ளடக்கத்திலும் வெளிப்பாட்டிலும் புத்தாக்கத்தைக் (Innovation) கொள்ளாத எத்தகைய அரசியல் முயற்சிகளும் பயனளிக்காது. காலப் பொருத்தமற்ற, சமூக வளர்ச்சியைப் பொருட்படுத்தாத, சமூக வளர்ச்சிக்குப் பயளிக்காத அரசியல் நிலைப்பாட்டோடு இருக்கும் வரையில் இவற்றால் வெற்றியைப் பெறவே முடியாது. மட்டுமல்ல, அதனால் மக்களுக்கும் வெற்றியைக் கொடுக்க முடியாது.

இப்போது இந்தச் சக்திகளின் தலைக்குள் நிரம்பிக் கிடக்கும் பிரச்சினையெல்லாம் எப்படித் தமிழரசுக் கட்சி வெற்றியைப் பெற்றது? அதற்கு எப்படி 08 ஆசனங்கள் கிடைத்தன? அதில் சிறிதரன் போன்றவர்கள் எப்படி வெற்றியீட்டினார்கள்? கஜேந்திரகுமார் வெற்றி பெற்றது எப்படி? அப்படியான ஒரு வெற்றியைத் தாம் பெறுவது எப்படி? என்பதேயாகும்.

நிச்சயமாக மக்களின் நலனோ முன்னேற்றமோ விடுதலையோ அல்ல. அவற்றைப் பற்றிச் சிந்தித்தால், தமக்குள் நிச்சயமாக மாற்றத்தை (நிலைப்பாட்டு மாற்றத்தை — Position change) தமக்குள் உருவாக்கியிருக்கும். அல்லது இனியாவது உருவாக்க முயற்சிக்கும். ஆனால், அப்படிப் புதிதாக இவற்றால் சிந்திக்க முடியவில்லை. காரணம், ஏற்கனவே சொல்லப்பட்டதைப் போல புத்தாக்க அரசியற் சிந்தனையோ, புதிய அரசியல் உள்ளடக்கமோ (New Political Content) இவற்றிடம் இல்லை என்பது தான். ஆனால், சரி, தவறுகளுக்கு அப்பால் இவற்றுக்கு வரலாற்றில் ஒரு இடமுண்டு. தம்மை அர்ப்பணித்துச் சமூகத்துக்கு பணியாற்றிய வரலாற்றைக் கொண்ட சக்திகள் இவையாகும். தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க்காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) ஆகியவற்றை விட இவை பன்மடங்கு பெறுமதிக்குரியவை. ஆனால், தமது அரசியல் வெறுமையினாலும் வறுமையினாலும் இன்று தமிழரசுக் கட்சியிடமும் தமிழ்க்காங்கிரஸிடமும் தோற்றுப் போயுள்ளன.

உண்மையில் தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் (தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி), தமிழர் விடுதலைக் கூட்டணி மூன்றும் எப்போதோ காலாவதியாகி விட்டவை. மூத்த — பாரம்பரியக் கட்சி என்ற அடையாளமும் கட்சிச் சின்னமும் கட்சிப் பதிவும் உள்ளது என்பதற்காக அவற்றை அரசியற் செயற்பாட்டியக்கங்களாக மக்கள் கருதவே முடியாது. அவற்றிடம் நிகழ்கால, எதிர்கால அரசியலுக்கான சிறு துரும்பு கூடக் கிடையாது. இந்தத் தேர்தலிலும் வெற்றியைப் பெற்றுள்ளன; மக்களுடைய ஆதரவைக் கொண்டுள்ளன என்று யாரும் சொன்னால், அதைப்போல முட்டாள்தனம் வேறில்லை. ஏனென்றால், இவற்றின் அரசியல் வரலாற்றில் இவை மக்களுக்கு அளித்த பெறுமானங்கள் என்ன? வெற்றிகள் என்ன?

அரசியற் செயற்பாட்டியக்கம் என்பது அது பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்களுடைய சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு, ஜனநாயக அடிப்படைகளையும் உரிமைகளையும் பேணுவதோடு, அவற்றிலுள்ள இடர்ப்பாடுகள், நெருக்கடிகள், பின்னடைவுகளை வென்று முன் கொண்டு செல்கின்றதாக இருக்க வேண்டும். மக்களை வெற்றியாளர்களாக மாற்ற வேண்டும். இது நிகழ்ந்திருக்கிறதா? இதை இந்தக் கட்சிகளில் எதனிடம் காண முடியும்?

தற்போதைய சூழல் போருக்குப் பிந்தியது. முப்பது ஆண்டுக்கு மேலான ஆயுதப் போராட்டத்துக்குப் பிந்தியது. அந்த ஆயுதப்போராட்டம் தோற்கடிக்கப்பட்டதற்குப் பின்னானது. ஆகவே இதற்கமைய போருக்குப் பிந்திய அரசியலை (Post – Wat Politics) யே முன்னெடுத்திருக்க வேண்டும். அதனுடைய பின்னடைவுகளையும் பாதிப்புகளையும் மனதிற் கொண்டு, அவற்றை ஈடு செய்வதற்கான அரசியலையும் பொறிமுறையையும் முதற்கட்டமாக உருவாக்கியிருக்க வேண்டும்.

அடுத்த கட்டமாக, மீளெழுச்சிக்கான சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டுக் கட்டுமானத்தைக் குறித்துச் சிந்தித்திருக்க வேண்டும். மூன்றாம் கட்டமாக விடுதலை அரசியலை முன்னெடுப்பதற்கான தளத்தைப் பற்றிச் சிந்தித்திருக்க வேண்டும். குறைந்த பட்சம் இதை எந்தக் கட்சிகள் புரிந்துள்ளன? இந்த உண்மையை கொள்கையளவிலேனும் ஏற்றுக் கொண்டுள்ளனவா? கிடையாது.

இவை எதுவுமே இல்லாமல் தான் கடந்த 15 ஆண்டுகளாக இந்தக் கட்சிகள் அனைத்தும் (தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு) வெற்றிப் பரப்பில் நின்றன. அதற்கான இடத்தை அளித்தது, சனங்கள் சிங்கள ஆட்சித்தரப்பின் மீது கொண்ட கோபமும் வெறுப்புமாகும். ஆனால், அந்தக் கோபமும் வெறுப்பும் குறையத் தொடங்கி விட்டது. அதிகாரத்தில் நேரடிக் கோபத்துக்குரியவர்களான ராஜபக்ஸக்களும் இல்லை என்பது இன்னொரு காரணம். அடுத்த காரணம், தமிழ் மக்களுடைய பொருளாதார நெருக்கடியும் முடிவுறாத அரசியற் சிக்கலுமாகும். அரசியலைப் பொறுத்த வரையில் இப்போதைக்கு தனிநாடோ, அதற்கு நிகரான தீர்வோ கிடையாது என்று பெரும்பாலான மக்கள் உணர்ந்துள்ளனர். ஆகவே இனியும் அந்த அரசியலை (தனிநாட்டுக்கான — தமிழீழத்துக்கான) முன்னெடுக்கும் சக்திகளை ஆதரிக்க அவர்கள் தயாரில்லை. அந்த இடத்தை நிரப்புவதற்காக அவர்கள் புதிய தெரிவுகளை நோக்கிச் செல்கின்றனர்.

இவ்வளவுக்குப் பின்னரும் தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் போன்றவற்றை விட ஆயுதப் போராட்டத்தின் வழியாக வந்த இயக்கங்களுக்கும் அவற்றின் இன்றைய தலைவர்களுக்கும் இப்போது கூட மதிப்புண்டு. தங்களைச் சமூக விடுதலைக்கும் இன விடுதலைக்குமாக அர்ப்பணிக்கத் துணிந்தவர்களாக இருந்தவர்கள். செயற்பாட்டு அரசியல் வழிமுறையினூடாக வளர்ந்தவர்கள். வரலாற்றின் துயரம் என்னவென்றால், பின்னாளில் இவர்களும் பிரமுகர் அரசியலில் வழுக்கி விழுந்ததேயாகும். அதற்குப் பின்னர் செயற்பாட்டு அரசியலை விட்டு வாய்ப்பேச்சு அரசியலில் பயணிக்கத் தொடங்கினர். தமிழரசுக் கட்சி, தமிழ்க்காங்கிரஸ் கட்சியைப் போல தாமும் ஆகினர். இறுதியில் தமிழரசியற் பரப்பில் மோதகமும் கொழுக்கட்டையும் என்றாகி விட் னர்.

இப்போது மோதகமா கொழுக் கட்டையா என்றால், சனங்கள் குற்றங்கள் இழைக்காத, கசப்பான வரலாற்றைக் கொண்டிருக்காத, ரத்தக்கறை படியாத தரப்பை ஆதரிப்போம் என்ற முடிவுக்கு வந்திருக்கின்றனர். இது வாக்காளர்களில் ஒரு தரப்பினராக இருக்கும் 40 வயதுக்கு மேற்பட் டோரின் தெரிவாகும். 40 வயதுக்கு உட்பட்டோரின் தெரிவு, தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரசும். இரண்டும் சேர்ந்தும் ஒரு குறிப்பிட்டளவு வீதத்தினரே இதில் சேர்த்தி. ஏனையோர் வெளிப்பரப்பிலேயே சிந்திக்கின்றனர்.

இது இப்போது மட்டும் திடீரென எழுந்த NPP அலை மட்டுமல்ல. 2010 ல் யாழ்ப்பாணத்தில் மட்டும் ஈ.பி.டி.பி 03 ஆசனங்களையும் சுதந்திரக் கட்சி (அங்கயன்) ஒரு ஆசனத்தையும் பெறக் கூடியதாக இருந்தது. 2015 இல் டக்ளஸ் தேவானந்தா, அங்கயன் ராமநாதன், விஜயகலா மகேஸ்வரன் என மூன்று ஆசனங்கள் வெளியே நின்றன. 2020 அங்கயனே அதிகூடிய விருப்பு வாக்கைப் பெற்றிருந்தார். கிழக்கிலும் இதுதான் நிலைமை. அங்கே பிள்ளையான் அதிகூடிய விருப்பு வாக்குடன் தெரிவாகியிருந்தார். கூடவே வியாழேந்திரன் வெற்றியடைந்திருந்தார்.

இப்போது அந்த இடங்களையெல்லாம் NPP பெற்றிருக்கிறது. அவ்வளவுதான். இந்த வளர்ச்சி இனி அடுத்த கட்டத்துக்கு நகரும் போது பிராந்திய அரசியல் தமிழ்த்தேசிய அரசியல் எதிர்ப்பரசியல் முடிவுக்கு வந்து விடும். அதற்கு முன் சங்கும் அதைக் கொண்டிருக்கும் DTNA காணாமற் போய் விடக் கூடிய சூழலே உண்டு. (குறிப்பு: இந்தப் போக்கைத் தீர்மானிப்பதில் சரி பங்கு சிங்களத் தரப்புக்கு உண்டு. அதனுடைய அரசியல் தீர்மானங்களும் நடவடிக்கைகளுமே தமிழ் அரசியலின் அடுத்த கட்டத்தை நிர்ணயிப்பதில் பாதிப்பங்கைச் செய்யும்).

# தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்?

19ம் பக்கத் தொடர்ச்சி) நாட்டம் காட்டுவதற்கு மக்கள் மத்தியில் எத்தகைய விளக்கத்தை தமிழ் அரசியல்வாதிகள் முன்வைக்கப் போகிறார்கள்? தமிழ்க்கட்சிகள் மத்தியில் ஏற்பட்ட பிளவுகளுக்கு கொள்கை வேறுபாடுகளை விடவும் தேர்தலில் போட்டியிடுவதற்கான வியூகங்களே பிரதான காரணமாக இருந்தன.

இதுவரை கால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஐக்கியத்தை அல்லது ஒரு மித்த அணுகுமுறையை எதிர்பார்ப்பதை போன்ற வீணான செயல் வேறு எதுவும் இருக்கப் போவதில்லை. கொள்கை வேறுபாடுகளுக்கு அப்பால் காலங்காலமாக தலைவர்களுக்கு இடையிலான தன்னகம்பாவமும் ஆளுமைப் போட்டியும் தமிழர் அரசியலின் பின்னடைவுக்கு முக்கியமான காரணிகளாக இருந்து வந்திருக்கின்றன. மிதவாத அரசியல் தலைவர்களை விடவும் ஆயுதமேந்திய தமிழ்த் தீவிரவாத இயக்கங்களின் தலைவர்கள் இதுவிடயத்தில் பல படிகள் மேலே சகோதரப் படுகொலைகளை சர்வசாதாரணமாகச் செய்தார்கள். அத்தகைய விபரீதமான போக்கு இப்போதும் வெவ்வேறு வடிவங்களில் தொடருகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, இன்றைய தமிழ் அரசியல்வாதிகள் கடந்த பதினைந்து வருடகாலமாக தாங்கள் கடைப்பிடித்து வந்த கொள்கைகளும் அணுகுமுறைகளும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதை நோக்கிய திசையில் ஒரு அங்குலமேனும் முன்னோக்கிய நகர்வுக்கு உதவியிருக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அரசியல் தீர்வைத் தர வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என்ற போதிலும், இலங்கையில் தொடர்ந்தும் வாழ்ந்தால் தங்களுக்கு ஒரு எதிர் காலம் இருக்கும் என்று தமிழ் மக்களுக்கு கொஞ்சமேனும் நம்பிக்கை ஏற்படக்கூடியதாக தங்களது இதுவரையான செயற்பாடுகள் அமைந்திருந்தனவா என்பதையும் தமிழ் அரசியல்வாதிகள் ஆழமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தமிழ்த் தேசியவாதம் பாதுகாக்கப்பட வேண்டுமானால் நிலப்பிராந்தியம் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு அந்த நிலப்பிராந்தியத்தில் மக்கள் வாழவேண்டும். மக்களும் நிலமும் இல்லாமல் எந்த தேசியவாதத்தையும் பாதுகாக்க முடியாது.

வடக்கு, கிழக்கில் தொடர்ந்து வாழ்ந்தால் தங்களுக்கும் தங்களது எதிர்காலச் சந்ததிகளுக்கும் நல்ல எதிர்காலம் இருக்கும் என்ற நம்பிக்கை இல்லா விட்டால் வடக்கு, கிழக்கில் தமிழர்களில் கணிசமான பிரிவினர் அங்கே தொடர்ந்து வாழ விரும்பப் போவதில்லை. அரசியல்வாதிகள் வீடு வீடாகச் சென்று ஒரு ஆய்வைச் செய்து பார்த்தால் எத்தனை தமிழர்கள் வெளிநாடுகளுக்கு செல்வதில் நாட்டம் காட்டுகிறார்கள் என்பதை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். மக்கள் இல்லாத மண்ணில் தேசியவாதத்தைக் காப்பாற்றுவதற்கு என்ன இருக்கிறது?

தற்போது பாராளுமன்றத்துக்கு தெரிவாகியிருக்கும் தமிழ்ப் பிரதிநிதிகள் தேர்தலில் மக்கள் புகட்டிய பாடத்துக்கு பின்னராவது தங்களது முன்னைய போக்குகளை மாற்றிக் கொண்டு ஒன்றுபட்டுச் செயற்படுவார்களா என்பது முக்கியமான ஒரு கேள்வி.

தேர்தலுக்கு பிறகு கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரை தனித்தனியாகச் சந்தித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் தமிழரசு கட்சியின் பாராளுமன்ற குழுவும் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா இலங்கையின் புதிய அரசாங்கத்தின் மீது நெருக்குதல்களைக் கொடுக்க வேண்டிய அவசியம் பற்றியே வலியுறுத்தியதாக தெரியவருகிறது.

இந்தியா உட்பட சர்வதேச வல்லாதிக்க நாடுகள் இலங்கை மீது நெருக்குதல்களைக் கொடுக்கும் என்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு இதுவரை கடைப்பிடித்த அணுகுமுறைகள் எந்தளவுக்கு பயனளித்திருக்கின்றன என்பதையும் தமிழ்க் கட்சிகள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். முன்னைய அரசாங்கங்களுடன் கடைப்பிடித்த அதே அணுகுமுறைகளை விடுத்து வேறுவிதமாக புதிய அரசாங்கத்தைக் கையாளுவதற்கான சாத்தியங்கள் குறித்தும் ஆராய வேண்டும்.

இந்தியாவின் மீதும் மேற்குலக வல்லாதிக்க நாடுகள் மீதும் தொடர்ந்தும் நம்பிக்கை வைப்பதன் மூலம் எதையாவது சாதிக்க முடியுமா என்பது குறித்து இனிமேலும் தமிழர்கள் சிந்திக்காமல் இருக்க முடியாது. தமிழர்கள் தங்கள் மீது நம்பிக்கை வைக்கமுடியாமல் வெளியுலகத்தையே உதவிக்கு பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய அளவுக்கு அவர்களின் அரசியல் சமுதாயம் படுமோசமாக சிதறுப்பட்டு பலவீனமடைந்திருக்கிறது.

தங்கள் மீது நம்பிக்கை வைத்து பலம் பொருந்திய ஜனநாயக ரீதியான அரசியல் இயக்கம் ஒன்றை கட்டியெழுப்ப வேண்டியது அவசியம். நிலையான அரசியல் (22ம் பக்கம் பார்க்க)

# சுமந்திரன் இல்லாத பாராளுமன்றம் மாற்றமா? ஏமாற்றமா?

- அழகு குணசீலன்–

அன்றைய தமிழ்த்தேசிய கூட்டமைப்பினதும், இன்றைய தமிழரசுக்கட்சியினதும் ஊடகப்பேச்சாளர் மதியாபரணம் சுமந்திரன் நடந்து முடிந்த பராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற முடியவில்லை. யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் தமிழரசுக்கட்சிக்கும், விருப்பத் தேர்வில் சுமந்திரனுக்கும் மக்கள் அளித்த வாக்குகள் குறைவானவை. இதனால் 63,327 வாக்குகளை (19.5 %) வாக்குகளை பெற்ற தமிழரசுகட்சிக்கு ஒரு இருக்கையே கிடைத்தது. அது மக்களின் விருப்பத் தேர்வின் அடிப்படையில் சிவஞானம் சிறீதரன் எம்.பி.யாக தெரிவு செய்யப்பட வாய்ப்பளித்துள்ளது. இது சுமந்திரனை சிறிதரன் தோற்கடித்த இரண்டாவது சந்தர்ப்பம். முன்னையது தமிழரசுக்கட்சி தலைவர் தேர்வில் பொதுச்சபையில், பின்னையது கடந்த பாராளுமன்ற தேர்தலில் மக்கள் மன்றத்தில்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான என்.பி.பி. அண்மைய இரண்டு தேர்தல்களிலும் புதிய அரசியல் அமைப்பு மாற்றம் ஒன்றை தேர்தல் விஞ்ஞானத்தில் அறிவித்திருந்தது. தற்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுள்ள என்.பி.பி.க்கு தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு இருக்கிறது. ஆனால் தமிழ்த் தேசிய பரப்பில் புதிய அரசியல் அமைப்பு பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படும் போது சுமந்திரன் பாராளுமன்றத்தில் இல்லையே என்ற ஏக்கம் ஒரு தரப்பால் வெளியிடப்பட்டு வருகிறது. இதற்கு மாறாக தமிழ்த் தேசிய மறு தரப்பு சுமந்திரன் பாராளுமன்றத்தில் இருந்தால் அவர் கொழும்பு அரசுக்கு ஆதரவாகவே செயற்படுவார் இதனால் சுமந்திரன் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? என்று கேட்கிறது.

தேர்தல் காலத்தில் இருந்தே சுமந்திரனின் பாராளுமன்ற தேர்தல் வெற்றிக்காக யாழ்.பத்திரிகை ஒன்று சுமந்திரனுக்கு ஆதரவான கருத்துக்களை தொடர்ச்சியாக வெளியிட்டு வந்தது. இவற்றில் சுமந்திரனுக்கும், ஜனாதிபதிக்கும் இடையே இடம்பெற்ற தொலைபேசி குசேலம் விசாரிப்புக்களும், சந்திப்புக்களும் கூட அரசியலாக்கப்பட்டன. மந்திரி பதவியும் இதில் ஒன்று. ஜனாதிபதியுடனான டக்ளஸ் தேவானந்தாவின் சந்திப்பை விமர்சித்த அந்த பத்திரிகை சுமந்திரனை தோளில் தட்டிக் கொடுத்தது. சுமந்திரனும், டக்ளஸும் இதை தேர்தலுக்கு பயன்படுத்த முயன்ற போது ஜே.வி.பி முக்கியஸ்தர்கள் அதை மறுத்து ஊடகச்சந்திப்பு நடாத்தினர்.

ஜனாதிபதி தனிப்பட்ட வகையில் தேர்தலில் தோல்வியுற்ற சுமந்திரனை தேற்றுவதற்கு கூறிய வார்த்தைகள் உத்தியோகபூர்வ அரசாங்கத்தின் வார்த்தைகள் அல்ல. என்.பி.பி.யின் உத்தியோகபூர்வ நிலைப்பாடும் அல்ல. இவை எல்லாமே திட்டமிட்டு அரசியலாக்கப்படும் நிலை காணப்படுகிறது. இதே ஆறுதலை ஜனாதிபதி டக்ளஸ் தேவானந்தாவுக்கும் சொன்னதாகவும் பேசப்படுகிறது. இது அரசியல் நாகரிகம். இந்த நாகரிகத்தை அநாகரிகமாக்கி தமிழ்த்தரப்பு அநாகரிக அரசியல் செய்கிறது. தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவர் சி.வி.கே. சிவஞானமும் சுமந்திரனுக்கு ஆதரவான கருத்துக்களை தொடர்ந்து வெளியிட்டு வருகிறார். இவர் கட்சியில் சுமந்திரன் அணியைச் சேர்ந்தவர். பல சந்தர்ப்பங்களில் சுமந்திரனின் வாயாகவும், மூளையாகவும் செயற்படுபவர். இந்த சுமந்திரன் ஆதரவு தரப்புக்கள் கூறும் "சுமந்திரன் இல்லாத பாராளுமன்றம்'' தமிழ்மக்களுக்கு பாதகமானதா? அப்படி ஒரு விம்பத்தை மக்கள் மத்தியில் உருவாக்க இந்த பரப்புரை செய்யப்படுகிறதா? தமிழரசுகட்சியை தமிழ்த்தேசியக் கட்சிகளை பொறுத்த மட்டில் சுமந்திரனின் தோல்வி குறித்து இரு வேறு விமர்சனங்கள் உண்டு. ஒரு பிரிவினர் சுமந்திரனின் தோல்வியினால் ஏமாற்றம் அடைந்து இருப்பவர்கள். மறு பிரிவினர் சுமந்திரனின் தோல்வி மக்கள் விரும்பிய. மாற்றம் ஒன்றின் வெளிப்பாடு என்று கூறுகிறார்கள். சுமந்திரனோ இவை பற்றி வெளிப்படையாக அலட்டிக் கொள்ளாமல் மக்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்கிறேன், தேசியப்பட்டியலில் எம்.பி.யாக மாட்டேன், பாராளுமன்றத்திற்குள் இருந்து தான் அரசியல் அமைப்பு திருத்தத்திற்கு ஆதரவளிக்க வேண்டும் என்பதல்ல, வெளியில் இருந்தும் செய்யலாம், அப்படி ஏற்கனவே வெளியில் இருந்து பணி செய்து கிடந்ததால் தான் சம்பந்தர் காலத்தில் தேசிய பட்டியலில் உள்வாங்கப்பட்டேன் என்றெல்லாம் பட்டியல் போட்டு தமிழ்த் தேசிய அரசியலில் தமிழரசுக்கட்சியின் தலைசிறந்த ஜனநாயகவாதியாக தன்னைக்காட்டி கொள்கிறார்.



ஆனால் கடந்த காலத்தில் சுமந்திரனின் அரசியல் செயற்பாடுகளையும், நகர்வுகளையும் பட்டியல் போடும் மறு தரப்பு சுமந்திரன் தமிழ்தேசிய ஒற்றுமையை குலைத்தவர், கொழும்பு அரசுக்கு ஆதரவானவர், தமிழ்த்தேசிய போராட்டத்தை கொச்சைப்படுத்தியவர், கடந்த நல்லாட்சியில் கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தாது ஒத்தோடியவர், ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற முடிவுகள் சுமந்திரனின் தனிப்பட்ட முடிவுகளுக்கு கட்சிசாயம் பூசப்பட்டவை என்று கூறுகின்றனர்.

முன்னுக்கு பின் முரணாக செயல்படுபவர், கட்சிக்குள் மாற்று கருத்துக்கள் கொண்டவர்களை ஓரம் கட்டி உட்கட்சி ஜனநாயகத்தில் -கருத்துச் சுதந்திரத்தில் தன் ஆதரவாளர்களை கொண்டு ஆதிக்கம் செலுத்துபவர் என்றெல்லாம் பட்டியல் போடுகின்றனர்.

இதற்கு சுமந்திரன் பாராளுமன்றத்தில் இல்லாத இந்த குறுகிய காலத்தில் தமிழ்தேசிய சூழலில் இடம்பெறும் சாதகமான மாற்றங்களை அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். குறிப்பாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஒரு பொது நிலைப்பாட்டிற்காக பேசுவதற்காக தமிழ்த்தேசிய கட்சிகளுக்கு அழைப்பு விட்டிருக்கிறார். செல்வம் அடைக்கலநாதன் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்று கோரியிருக்கிறார். தமிழ்த்தேசிய அரசியல் ஆய்வாளர்கள், ஊடகங்கள் தமிழ் தரப்பு பிரிந்து நின்றதினால்தான் என்.பி.பி.வடக்கில் வெற்றி பெற்றது என்று பேசுகின்றனர்.

ஆக, சுமந்திரன் இல்லாத பாராளுமன்றம் மாற்றத்திற்கான ஒரு திசையை காட்டுகிறது என்பது இவர்கள் வாதம். மதியாபரணம் சுமந்திரன் தலை சிறந்த இலங்கை சிவில் சட்டத்தரணிகளுள் ஒருவர். ஜனாதிபதி சட்டத்தரணியும் கூட. சட்ட நுணுக்கங்கள் அவருக்கு தண்ணி பட்டபாடு என்று கூறப்படுகிறது. சர்வதேச இராஜதந்திரிகளுடனும் தனிப்பட்ட உறவுகளை கொண்டவர். ஆனால் இவை எல்லாம் தெரியாமல் யாழ்ப்பாண மக்கள் அவரை நிராகரிக்கவில்லை. சுமந்திரனின் இந்த தகுதிகளுக்கும் திறமைகளுக்கும் அப்பால் அந்த மக்கள் வேறு ஒன்றை, கடந்த 15 ஆண்டுகளாக முதுமை அடைந்திருந்த இரா.சம்பந்தரை விடவும் சுமந்திரனிடம் இருந்து எதிர்பார்த்தார்கள். தங்களின் எதிர்பார்ப்பிற்கும் சுமந்திரனின் செயற்பாட்டிற்கும் இடையிலான இடைவெளியை வெளிப்படுத்த 2020 பாராளுமன்றத் தேர்தலில் சுமந்திரனுக்கு ஒரு சிவப்பு சிக்னல் காட்டினார்கள். அது தான் சுமந்திரன் ஒரு இலட்சம் விருப்பு வாக்குகள் பெறுவேன் என்று கூறியபோது அதை அவர்கள் அரை வாசியாக குறைத்த முன் எச்சரிக்கை. அந்த முன்எச்சரிக்கையை சுமந்திரன் கடந்த நான்கு ஆண்டுகளில் கவனத்தில் கொள்ளவில்லை. அவரின் அரசியலில் மக்கள் எதிர்பார்த்த மாற்றம் ஏற்படவில்லை. அதனால் மக்கள் ஆளை மாற்ற தீர்மானித்தனர் என்றே கொள்ளவேண்டி உள்ளது. இன்னும் ஒரு விடயம் முக்கியமானது. பொது வேட்பாளருக்கு பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னர் வடக்கு கிழக்கு மக்கள் அளித்த வாக்குகள் சுமந்திரனின் சஜீத் ஆதரவு அரசியல் நிலைப்பாட்டிற்கான எதிர்ப்புக் காட்டலாக அமைந்த மிகப்பிந்திய வெளிப்பாடு எனக் கூறமுடியும்.

இன்றைய பாராளுமன்ற சூழலில் அரசியல் அமைப்பு திருத்தம், அல்லது புதிய அரசியலமைப்பு விடயத்தில் சுமந்திரன் பாரிய பாத்திரம் எதையும் வகிக்கும் நிலை அசாத்தியமானது. சுமந்திரன் தனித்து மட்டும் அல்ல ஒட்டு மொத்த தமிழ்த்தேசிய கட்சிகளும் இதில் தாக்கம் செலுத்த வாய்ப்பில்லை. எப்படி கதிரை எண்ணிக்கையை கொண்டு சுமந்திரன் கணக்கு பார்த்து மகிழ்ச்சி அடைந்தாலும் தமிழ்த்தேசிய அரசியலின் பலவீனம் வெளிச்சமானது. அரசியல் அமைப்பு தொடர்பான முடிவுகள் என்.பி.பி., தென்னிலங்கை கட்சிகள், பௌத்த மத பீடங்கள் என்பனவற்றால் எடுக்கப்பட வேண்டியவையாகவே இருக்கப் போகின்றன. பின்னர் பெரும்பான்மை சிங்கள மக்களால் நிராகரிக்கப்படும் சர்வஜன வாக்கெடுப்பால் வடிகட்டப் படவுள்ளன. வடக்கு கிழக்கிலும், மலையகத்திலும் என்.பி.பி.க்கு தமிழ், முஸ்லீம் மக்கள் அளித்துள்ள வாக்குகள் சிறுபான்மை தரப்புக்களை விடவும் பெரும்பான்மைக்கே அதிகம் பயன்படப் போகிறது. இனப்பிரச்சினைக்கான தீர்வு தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாத தாக இருந்தாலும் அதற்கு கை உயர்த்துவதைத் தவிர வடக்கு கிழக்கு, மலையக தமிழ், முஸ்லீம் என்.பி.பி எம்.பி.களுக்கு வேறு வாய்ப் பில்லை. இது சுமந்திரன் பாராளு மன்றத்தில் இருப்பதனால் மாறப்போவதில்லை.


என்.பி.பி. 159 எம்.பி.க்களை தனியாக கொண்டிருப்பினும் சிறுபான்மை தேசிய இனங்களுக்கான சாதகமான உரிமைகளை வழங்குவதில் அது தனித்து செயற்படப் போவதில்லை. தமிழ்த்தேசியம் எதைக் கேட்பார்கள் என்பதும் என்.பி.பி.க்கும், தென்னிலங்கை கட்சிகளுக்கும் தெரியாததல்ல. இலங்கை பாராளுமன்றம் 75 ஆண்டுகளாக இந்தக் கோரிக்கைகள் அரைத்த மாவாக திருப்பி திருப்பி அரைக்கப்பட்டு வந்துள்ளன. புதிய அரசியல் அமைப்பு தமிழ்த்தேசிய நிலைப்பாட்டிற்கு முரணாக சிங்கள பௌத்த இன, மத தேசியத்தின் பாதுகாவலராகவே அமையப் போகிறது. அதற்கு முன்னர் உள்ளூராட்சி, மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடாத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் என்.பி.பி. தனது ஆட்சியை நிலை நிறுத்த முயற்சிக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. முடிவுகளை மக்கள் ஆணையாகக் காட்டி அதற்கேற்ப சில திருத்தங்கள், சீர்திருத்தங்கள் புதிய அரசியல் அமைப்பூடாக செய்வதற்கான வாய்ப்பே அதிகமாக இருக்கிறது. இதனால் சிலர் பேசுவது போன்று சுமந்திரன் இல்லாத பாராளுமன்றம் தமிழ்த்தேசியத்திற்கு இழப்பும் இல்லை, என்.பி.பி.க்கு இலாபமும் இல்லை.

வேண்டுமானால் சுமந்திரன் இல்லாத பாராளுமன்றம் தமிழ்த்தேசிய தனி நபர் தரப்பில் யாருக்கு பலம், பலவீனம் என்று பார்த்தால், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு வழியில் குறுக்கே கிடந்த பறாங் கல் ஒன்றை யாழ்ப்பாண மக்கள் நெம்புகோல் கொண்டு அகற்றி வழியை துப்புரவு செய்திருக்கிறார்கள். இது பாராளுமன்றத்தை சுத்திகரியுங்கள் என்ற என்.பி.பி .யின் அறைகூவலாக ஏன் இருக்க முடியாது. மக்களின் சுத்திகரிப்பில் சுமந்திரன் தோற்க என்.பி.பி.யில் மூவர் வெற்றி பெற்றுள்ளனர். சுமந்திரன் இல்லாத பாராளுமன்றத்தில் சிவஞானம் சிறிதரனின் கை பாராளுமன்ற குழுவில் ஓங்கியிருக்கிறது. இராசமாணிக்கம் சாணக்கியனுக்கு சுமந்திரன் இல்லாதது சில சந்தர்ப்பங்களில் ஒரு கை இழப்பாகவும், சில சந்தர்ப்பங்களில் ஒரு தொல்லை குறைந்ததாகவும், சுயமாக சிந்தித்து செயற்படுவதற்கான ஒரு வாய்ப்பாகவும் அமையலாம்.


ஆனால்! ஆனால்! பாராளுமன்றத் தேர்தல் வேட்பாளர் பட்டியலில் விருப்த் தேர்வில் இரண்டாவது இடத்தில் உள்ள சுமந்திரன், தனது கையாள் சத்தியலிங்கத்தை தேசிய பட்டியில் பாராளுமன்றம் அனுப்பியுள்ள சுமந்திரன், அவரது வார்த்தைகளில் கூறிய மக்கள் தீர்ப்பை ஏற்று சும்மா இருப்பாரா.......?

யாழ்ப்பாண மக்கள் ஏற்படுத்திய மாற்றத்தை தொடர்ந்தும் ஏற்பாரா....? அல்லது அவர்களை ஏமாற்றுவாரா? சிவஞானம் சிறீதரன் வடக்கு மாகாண முதலமைச்சர் பதவிக்கு போட்டியிடப் போகிறார், சத்தியலிங்கம் வடக்கு மாகாணசபை முதலமைச்சர் பதவிக்கு போட்டியிடப் போகிறார் என்ற கதைகள் சுமந்திரனின் ஆதரவாளர்களாலேயே கட்டி விடப்படுகின்றன என்று சிறீதரன் ஆதரவு அணியினர் கூறுகின்றனர். மாடில்லாமல் இந்த மணியோசை கேட்கவில்லை!


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! வீட்டில் நிம்மதியான நிலை காணப்படும். நிதானத்தைக் கடைப்பிடிப்பது அவசியம். தொழிலில் நல்ல லாபத்தை எதிர்பார்க்கலாம். முக்கிய முடிவுகளை இப்போது செய்யலாம். சிலர் உங்களை பார்த்து பொறாமையாக நினைப்பார்கள். குடும்பத்தில் பிரச்சனைகள் ஏதும் இராது. நல்ல சுபிட்ஷமும் சௌபாக்கியமும் உண்டாகும். உடன் பிறந்தோர் உற்ற துணையாக இருப்பர். கணவன் மனைவிடையே அன்பு காணப்படும்..





ரிஸபராசி அன்பர்களே! முன்னேற்றப்பாதையில் செல்வீர்கள். தொழில், வியாபாரம் மந்தமாக காணப்பட்டாலும் அதிக நஷ்டம் இல்லாமல் இருக்கும். வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்வீரகள். அதிக முதலீடுகளை செய்யாமல் இருப்பது அவசியம். குடும்பத்தில் முக்கிய நபர்களின் தலையீடு இல்லாமல் பார்த்து கொள்ளுங்கள். பொருளாதார விஷயத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு மகிழ்ச்சி உண்டாகும்





மிதுனராசி அன்பர்களே! மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்ததை பெறுவீர்கள். தொழிலில் நல்ல லாபம் உண்டாகும். சிலர் கடினமாக உழைத்து வெற்றி பெறுவர். முக்கிய நபர்களை இந்த வாரம் சந்திக்க வெற்றி உண்டாகும். குடும்பத்தில் கணவன்,மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டாலும், நீங்கள் விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் அதை சமாளிக்கலாம். உங்களிடம் வாக்கு வாதத்திற்கு குடும்பத்தினர் வரலாம்.




கடகராசி அன்பர்களே! மனதில் தெளிவு உண்டாகும். மன நிம்மதி பெற தியானம் செய்யுங்கள். தொழிலில் உங்களுக்கு அதிக நன்மைகள் ஏற்பட்டு எந்த தடையும் இல்லாமல் தொழில் அபிவிருத்தி இருக்கும். நல்ல லாபத்தையும் பார்க்கலாம். முன்னேற்றம் உண்டு. குடும்பத்தினரால் சிறு பிரச்னைகளுக்கு கூட டென்ஷன் ஆவீர்கள். சிலருக்கு அலர்ஜி தொந்தரவுகள் வந்து நீங்கும். உடன்பிறந்தோர் உறு துணையாக இருப்பார்கள்





சிம்மராசி அன்பர்களே! சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். தேங்கிய பொருட்கள் எல்லாம் விற்பனையாகி விடும். குடும்பத்தில் கணவன் மனைவி ஒற்றுமையில் சிறு சங்கடங்கள் வந்து விலகும். மனைவியின் உடல்நலத்தில் தகுந்த கவனம் தேவை. வீடு மனை வாகன வகைகளில் திருப்தியான நடைமுறைகள் இருக்கும். கடந்த காலங்களில் இருந்த நிலைகள் மாறி மனதிற்கு மகிழ்ச்சி தரும்




கன்னிராசி அன்பர்களே! முக்கிய முடிவுகளை சற்று ஒத்திப் போடுவது நல்லது. நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நல்ல செய்திகள் வரவில்லை என்ற கவலை வேண்டாம். கூடிய விரைவில் உங்கள் காதுகளை அது எட்டும். தொழிலைப் பொறுத்தவரை பிரச்னைகள் வந்தாலும் அது உங்களை பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தாது .நிறுவனத்தின் புகழ் எட்டுத்திக்கும் பரவும். கொடுக்கல், வாங்கல் விஷயங்கள் சுமுகமாக முடியும்.





துலாம்ராசி அன்பர்களே! வருமானம் திருப்திகரமாக இருக்கும். தொழிலில் உங்களுக்கு கிடைக்க வேண்டிய பாக்கிகள் அனைத்தும் கிடைக்கும்.தேவைப்படும் இடங்களில் இருந்து உதவிகள் கிடைக்கப் பெற்று மகிழுவீர்கள். குடும்பத்தில் நிம்மதி இருக்கும். உற்றார், உறவினர்களுடன் விருந்து கேளிக்கைகளுக்கு சென்று வருவீர்கள். நிதி நிலையில் முன்னேற்றம் ஏற்படும். திருமண வயதிலுள்ள அன்பர்களுக்கு நல்ல வரன் அமையக்கூடும். உத்தியோகஸ்தர்களுக்கு புதிய வாகனம் வாங்கும் வாய்ப்பு உள்ளது





விருசிசிகராசி அன்பர்களே! அனைத்து விஷயங்களிலும் நம்பிக்கையோடு செயல்படுவீர்கள். பயணங்களின்போது உங்கள் பொருட்களை கவனமாக பாதுகாத்து கொள்ளவும். தொழிலில் நல்ல லாபமும் முன்னேற்றமும் இருக்கும். புதிதாக தொழில் துவங்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். குடும்பத்தில் சில விவாதங்கள் வந்து போகலாம். பிள்ளைகளின் விஷயத்தில் கவலை வேண்டாம். இருக்கும் இடத்தில் இருப்பது அதிக நன்மை.








தனுசுராசி அன்பர்களே! முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். கைக்கு வராது என்றிருந்த பணம் கூட கைக்கு வந்து சேரும். உடலில் இருந்து வந்த பிரச்சனைகள் அகலும். தொழிலில் வருமானம் நல்லபடியாக இருந்தும் வீண் செலவுகள் ஏற்படுவதால் மனம் கவலையில் இருக்கும். குடும்ப ரீதியாகவோ, தொழில் ரீதியாகவோ முக்கிய முடிவுகள் எடுக்க சற்று கஷ்டப்பட வேண்டி இருக்கும். குடும்பத்தில் சுமூகமான சூழ்நிலை நிலவும்.




மகரராசி அன்பர்களே! நீங்கள் எடுக்கும் முடிவில் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. நீங்கள் நடந்து கொள்ளும் விதம் சிலருக்கு புதிராக இருக்கும். தொழிலில் நல்ல அபிவிருத்தி உண்டாகும். புதிய தொழிலில் ஆர்வம் அதிகரிக்கும். பங்குதாரர்களுடன் சிறு வாக்கு வாதங்கள் உண்டாகலாம். குடும்பத்தில் பணவரவிற்கு குறைவிருக்காது. உடல் நிலையில் அவ்வப் போது தொந்தரவுகள் வருவதை தவிர உங்களுக்கு நன்மையே நடக்கும்.




கும்பராசி அன்பர்களே! பொறுப்புகளை உணர்ந்து செயல்படுவது அவசியம். கோபுர தரிசனம் உங்களுக்கு கை கொடுக்கும். வேலை பார்க்கும் இடத்தில் பிரச்னைகள் எழலாம். கவனமுடன் இருப்பது மிக முக்கியம். உடன் பணிபுரிபவர்கள் உற்ற துணையாக இருப்பார்கள். தொழிலில் உன்னத நிலை ஏற்படும். குடும்பத்தினருடன் சுப நிகழ்வுகளில் கலந்து கொள்வீர்கள். குடும்பத்தார் ஒன்று சேர்வார்கள்.




மீனராசி அன்பர்களே! தேவையில்லாத பிரச்னைகளை சந்திப்பீர்கள். சிறு சிறு உடல் உபாதைகளால் அவதிப்பட நேரலாம். ஆதலால் மனசோர்வும் உண்டாகலாம். செலவுகள் ஏற்படும் நேரம். புதிய தொழில் துவங்குவது இருக்கும் தொழிலை விரிவுபடுத்துவது போன்ற அனைத்துமே செய்யலாம். குடும்பத்தில் சந்தோஷம் நிலைத்திருக்கும். அனைத்து வசதி வாய்ப்புகளும் தாமாகவே வந்து சேரும். அரசு வேலைகளில் இருந்த தொய்வு நிலை மாறும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்?

(20ம் பக்கத் தொடர்ச்சி) தீர்வொன்றுக்காக ஏனைய கட்சிகளுடன் சேர்ந்து பாடுபடுவதே தமிழர்களுக்கு இருக்கக் கூடிய ஒரே மார்க்கம். அதையும் படிப்படியாகவே செய்யவேண்டும். அதை விடுத்து வேறு எந்த அணுகு முறையுமே 1980களில் இருந்து இது வரையில் பெறப்பட்ட அனுபவங்களைப் போன்று வீணாக காலத்தையும் சக்தியையும் விரயம் செய்வதாகவே அமையும்.

எந்தவொரு வெளிநாடுமே அதன் பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் நலன்களுக்கு வாய்ப்பாக அமையும் பட்சத்திலேயே எமக்கு உதவுவதில் நாட்டம் காட்டும். மக்களின் நலன்களின் அடிப்படையில் அவை உதவ முன் வருவதில்லை. இலங்கையிலும் பங்களாதேஷிலும் இந்தியாவின் தலையீடு இந்தியாவின் நலன்களை நோக்கமாகக் கொண்டதே தவிர இலங்கை தமிழர்களினதோ அல்லது வங்காளிகளினதோ நலன்களை உண்மையில் மனதிற் கொண்டவையல்ல.

ஆனால், இந்தியா அதன் நலன்களுக்காக இலங்கை இன நெருக்கடியில் படைகளுடன் வந்து தலையீடு செய்த சந்தர்ப்பத்தையாவது சமயோசிதமாக பயன்படுத்தக்கூடிய விவேகம் தமிழர்களுக்காக போராடிய சக்திகளிடம் இருக்கவில்லையே. அந்த சந்தர்ப்பத்தை மிகவும் சூழ்ச்சித்தனமாக பயன்படுத்தி முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன தமிழர்களுக்கு எதிராக அல்லவா புதுடில்லியை திருப்பி விடுவதில் வெற்றி கண்டார். இந்தியாவுக்கும கொழும்புக்கும் இடையே முரண்பாட்டை ஏற்படுத்தி அதன் மூலம் அன்றைய சூழ்நிலையை தமிழர்களுக்கு அனுகூலமானதாக மாற்றுவதற்கு முடியாமற் போனதற்கான காரணங்களை இன்றுவரை தமிழ் அரசியல் சக்திகள் சுய பரிசோதனை செய்து உண்மையை ஒப்புக்கொண்டதில்லையே.

இந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டே தமிழர்கள் இனிமேல் இந்தியாவை நாடுவதில் உள்ள பயனுடைத்தன்மை பற்றி சிந்திக்க வேண்டும். இலங்கையுடனான இந்தியாவின் உறவுகளைப் பொறுத்தவரை இலங்கைத் தமிழர் பிரச்சினை புதுடில்லியின் முன்னுரிமைக்குரிய விவாகரமாக இனிமேலும் இல்லை. இருதரப்பு உறவுகளுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் தமிழர் பிரச்சினைக்கு இந்தியா முக்கியத்துவம் கொடுப்பபதை தாங்கள் விரும்பவில்லை என்பதை இலங்கை அரசாங்கங்கள் தெளிவாகவே வெளிக்காட்டி வந்திருக்கின்றன.

அதனால், மாகாணசபை தேர்தல்களை நடத்தி அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இலங்கையை இடைக்கிடை கேட்பதை தவிர இந்தியாவிடமிருந்து வேறு எந்த அணுகுமுறையையும் எதிர்பார்க்க முடியாது. அதேவேளை 13வது திருத்தத்தையாவது காப்பாற்ற வேண்டும் என்பதில் தமிழ் அரசியல் கட்சிகள் மானசீகமான அக்கறையை காட்டுவதுமில்லை.

13வது திருத்தத்தையே மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக முறையாக நடைமுறைப்படுத்தாமல் இருந்து வரும் இலங்கை அரசாங்கங்களிடம் சமஷ்டி ஆட்சிமுறையின் அடிப்படையிலான தீர்வை எவ்வாறு எதிர்பார்க்க முடியும் என்று தங்களிடம் இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் கூறியதை தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

கைவசம் இருக்கும் 13வது திருத்தத்தில் தொடங்கி படிப்படியாக அதிகாரப் பரவலாக்கல் செயன்முறையை மேம்படுத்தி அதன் மூலமாக நீண்ட கால அடிப்படையிலான அரசியல் தீர்வை நோக்கி பயணம் செய்வதே தமிழர்களுக்கு இன்று இருக்கக்கூடிய நடைமுறைச் சாத்தியமான ஒரே மார்க்கம். அதை வலியுறுத்துவதில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து நாட்டம் காட்டினால் கணிசமானளவுக்கு வெளியுலகின் ஆதரவை பெறுவது சாத்தியமாகலாம்.

13வது திருத்தத்துக்கு தென்னிலங்கையில் எதிர்ப்பு இருக்கிறது உண்மை.. ஆனால், தமிழர் தரப்பும் அதில் நாட்டத்தைக் காட்டவில்லையானால் யாருக்காக அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்?

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியலமைப்பை கொண்டு வரப் போவதாக அறிவித்திருக்கும் நிலையில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்க பெரும் பொறுப்பு காத்திருக்கிறது. நிலைவரங்கள் வேண்டி நிற்பதற்கு ஏற்றமுறையில் தொலைநோக்குடனும் அரசியல் விவேகத்துடனும் அவர்கள் செயற்படத் தவறினால் அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்தையும் கை விட்டு இறுதியில் எதையுமே பெறமுடியாத ஒரு மக்கள் கூட்டமாக தமிழ் மக்கள் விடப்படும் நிலையே உருவாகும்.

இறுதியாக, இலங்கை தமிழர்களின் அரசியலை தங்களது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றமுறையில் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நோக்குடன் பணத்தை வீசியெறிந்த புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள சக்திகளுக்கும் பாராளுமன்றத் தேர்தல் ஒரு பாடமாக அமைந்திருக்கிறது.

# அதானியும் ஆபத்தும்?

(16ம் பக்கத் தொடர்ச்சி) இந்தச் சூழலில், அரசாங்கத்திற்கு வாய்ப்பான ஒரு விடயம் நடந்திருக்கிறது அமெரிக்காவில், அதானிக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. இந்தியாவில் 8 மாநிலங்களில், புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டங்களில் முதலீடுகளை செய்வதற்கு, 250 மில்லியன் டொலர்களை இந்திய அதிகாரிகளுக்கு இலஞ்சமாக கொடுத்திருக்கிறார் அதானி என்றும், அமெரிக்க நிறுவனங்களை ஏமாற்றி அங்கு முதலீடு செய்ய வைத்திருக்கிறார் என்றும் அமெரிக்க நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த குற்றச்சாட்டு அதானி குழுமத்திற்கு பெரும் தலைவலியாக மாறி இருக்கிறது. அதானி குழுமத்திற்கு சொந்தமான அதானி போர்ட் அதானி கிறீன் நிறுவனங்களின் பங்குகள் பெரும் சரிவை சந்தித்திருக்கின்றன. இதனால், 55 பில்லியன் டொலர்கள் இழப்பு ஏற்பட்டிருக்கின்றது.

இந்த விவகாரம் இலங்கை அரசாங்கத்திற்கு சாத்கமான ஒரு கதவை திறந்து விட்டிருக்கிறது. அதானி குழுமத்தை வெட்டி விடும் வேலையை செய்வதற்கு இதனை அரசாங்கம் ஒரு கருவியாக பயன்படுத்தும் வாய்ப்பு உள்ளது. இந்த விவகாரத்தை அரசாங்கம் தீவிரமாக எடுத்துக் கொண்டிருப்பதாகவும், அமெரிக்காவில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளை அது உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருப்பதாகவும் அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறியிருக்கிறார். அதானி செய்து கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கைகளை இரத்து செய்வது அல்லது மாற்றியமைப்பது குழுமத்துடன் தொடர்பான விடயத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு சாதகமான விடயங்கள் இருந்தாலும், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் இந்திய பயணம் நடக்கும் வரையில் அந்த விடயத்தில் கை வைக்காமல், இருக்க வேண்டியது முக்கியம். அதனால் தான் அரசாங்கம் இதனை பொறுமையாக (13ம் பக்கம் பார்க்க)

# SASITHARAN LAW

PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**

*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**

*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6

Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate

- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law

- Divorce
- Custody & Support

### Estate Law

- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law

- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law

- Incorporations
- Purchases
- Sales & Leases

---

Chapel Ridge

FUNERAL HOME & CREMATION CENTRE

# Serving the Tamil Community

OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**

- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**

- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com













# பாராளுமன்றத்தில் அர்ச்சுனா மீது தாக்குதலா?

பாராளுமன்றத்தில் அமைந்துள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்திற்கு அருகில் வைத்து சுஜித் என்ற நபர் தன்னை தாக்கியதாக பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

03 டிசம்பர் 2024 செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற அமர்வின் போது உரையாற்றிய அவர் இதனை தெரிவித்துள்ளார். தனக்கான நேர ஒதுக்கீடு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் விசாரிக்க சென்ற போது இவ்வாறு தன்னை தாக்கியதாக அவர் முறையிட்டுள்ளார்.

2.30 மணியளவில் நான் எதிர்க்கட்சித் தலைவரின் அறைக்குச் சென்றேன். இதன் போது நான் கேட்டேன். இந்த நேர ஒதுக்கீடு எவ்வாறு இடம் பெறுகிறது என்று. இன்றைய நாள் எனக்கு எதுவும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. நாளை எனக்கான நேரம் இருக்கிறதா? இல்லையா? என கேட்க சென்றேன்.



அங்கே அதிகாரிகள் இருந்தனர். மற்றைய அறைக்கு என்னை அழைத்துச் சென்றார்கள். நாளை பிற்பகல் எனக்கு நேரம் ஒதுக்கித் தருவதாக அவர்கள் எனக்கு கூறினார்கள். இந்த வரிசையை எப்படி செய்கிறீர்கள் என நான் கேட்டேன். பின்னர் சுஜித் என்ற நபரிடமும் மற்றொரு நபரிடம் சென்று பேச சொன்னார்கள். அவர்கள் தான் தீர்மானிப்பார்கள் என்றனர். அவர்கள் நினைந்தவாறு தீர்மானிக்க முடியாது. கட்சித் தலைவர் என்ற வகையில் எனக்கு பதிலளிக்க வேண்டும் என்று கூறினேன். இதன் போது சுஜித் என்ற நபர் என்னை தாக்கினார் என தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவை நான் தாக்கவில்லை. தகாத வார்த்தைகளை பிரயோகித்து பேசினார். அவருக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ பெரேரா சபையில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வைத்து தான் தாக்கப்பட்டதாக அர்ச்சுனா சபையில் குற்றம் சாட்டினார். அதற்கு மறுப்பு தெரிவிக்கும் வகையிலேயே சுஜீவ பெரேரா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா கீழ்த்தரமான முறையில் நடந்து கொண்டார். அவருக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தாக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பாக பேசுகையிலேயே நளின் பண்டார இவ்வாறு தெரிவித்தார்.

**எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!**
**உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்**
**32வது ஆண்டு விழா 23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை**
**சங்கீத சங்கமம் 2025**
**விபரங்களுக்கு:- 416 841 9600**

